# ஞானச்சுடர்




ஆனி

2016

222 ஆவது மலர்

வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



**அறிவினு ளெல்லாந் தலையென்ப தீய**
**செறுவார்க்குஞ் செய்யா விடல்.**

**பொருள் :** தமக்குத் துன்பஞ் செய்பவருக்கும் தீமை செய்யாது விடுதல் அறிவுகள் எல்லாவற்றுள்ளும் சிறந்ததென்று அறிவுடையோர் சொல்லுவர். (203)

**மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்**
**அறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு.**

**பொருள் :** பிறனுக்குக் கேடுதரும் செயலை மறந்தும் எண்ணாதிருக்க வேண்டும்; எண்ணினால் எண்ணியவனுக்குக் கேட்டை அறக்கடவுள் எண்ணும். (204)

---

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

### முத்தி நல்குமே

### ஓதுக அதுநாம் ஓம்தத் சத்ஓம்



சித்திர காரன் தீட்டிய தீபம்போல்
நித்திய வஸ்துவில் நினைப்பு மறப்பற
முத்தியி லிருக்கும் முறையைப் புகல்வாய்
எத்திக்கு மாகி யிருக்கு மீசனே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 68

சீரக முள்ள சீவான் மாவே
பாரக மெல்லாம் பரந்த தென்னத்
தாரக மோதிச் சாந்தம் பொறுமையோ
டோரகஞ் சார வுறுதி தந்தருள்
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 69

செல்வர்பின் சென்று தினமலை யாமல்
நல்வரந் தருவாய் ஞானிகள் நாட்டமே
சில்பக றோன்றிச் சிதையா வண்ணம்
எல்லையில் கால மென்றனுக் கருளுதி
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 70

# ஞானச்சுடர்



வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

உ

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 222

2016 ஆனி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| ஈசனோடாயினும் ஆசை... | இ. சிவராசா | 01 -05 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 06 -09 |
| அருள் தரும் அருமையான... | ஆர்.வீ. கந்தசாமி | 10 -11 |
| சந்தம், இராகம், தாளம்... | மு.க. மாசிலாமணி | 12 -15 |
| மழலைகளின் பெயர் | முருகவே பரமநாதன் | 16 -19 |
| திருவருட்பயன் | ஆ. ஆனந்தராசன் | 20 -22 |
| இன்றைய நடன வளர்ச்சி... | திருமதி ர. குணேஸ்வரி | 23 -25 |
| பகவத்கீதையின் உலகம்... | பூ. சோதிநாதன் | 26 -29 |
| பிள்ளைகளின் தற்கால... | பு. கதிரித்தம்பி | 30 -32 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 33 -34 |
| மாணிக்கவாசகரும் நீத்தல்... | நா. நல்லதம்பி | 35 -37 |
| விதுரநீதி | இரா. செல்வவடிவேல் | 38 -41 |
| படங்கள் தரும் பதிவுகள் | சந்நிதியான் ஆச்சிரமம் | 42 -43 |
| மனிதனின் உடல் வடிவமே... | எம்.பி. அருளானந்தன் | 44 -45 |
| கண்டோம் கதிர்காமம் | அன்னைதாசன் | 46 -48 |
| கந்தன் பாமாலை | பொ. பாலேஸ்வரன் | 49 -52 |
| சித்தர்களின் ஞானம் | சிவ. மகாலிங்கம் | 53 -57 |
| மலேசியாப் பயணத்தின்... | செ. மோகனதாஸ் சுவாமிகள் | 58 -60 |
| சமயமும் அறிவியலும் | செல்வி கு. சோபிதா | -61 |
| தமிழகத் திருக்கோயில் ... | வல்வையூர் அப்பாண்ணா | 62 -64 |


வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

**தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406**

**அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்**

# ஞானச்சுடர் வைகாசிமாத வெளியீடு

## வெளியீட்டுரை:-

ஞானச்சுடர் 221ஆவது மலருக்கான வெளியீட்டுரையை இளைப்பாறிய கிராம சேவகரும், பொதுநலத் தொண்டருமாகிய திரு சி. சிவபாலசிங்கம் அவர்கள் நிகழ்த்தினார்கள்.



முதலில் ஆச்சிரமம் ஆற்றும் பணியினை விதந்துரைத்ததோடு மலரில் ஆரம்பகால வெளியீட்டின்போது, "தொண்டைமானாறு கிராம சேவகராகக் கடமைபுரிந்த நான் அன்று தொட்டு இன்றுவரை இவ் ஆச்சிரமச் செயற்பாட்டை நன்கு புரிந்த தனால்த்தான் ஆச்சிரமத்தில் இடம்பெறும் சகல பணிகளுக் குள்ளும் உள்வாங்கப்பட்டு மிகவும் சிறப்பான முறையில் எம்மால் எமது வாழ்வை நடைமுறைப்படுத்தக் கூடியதாக உள்ளது" என்றும் கூறினார்.

மேலும் இம்மலர் வெளியீட்டின் காரணமாக வருடம் ஒரு முறையேனும் இந்நிகழ்வில் பங்குபற்றக் கூடிய வாய்ப்பை சந்நிதி முருகன் வழங்குவதையிட்டும் பேருவகை கொள்வதாகக் கூறியதுடன் தனது வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்.

## மதிப்பீட்டுரை:-

வைகாசி மாதத்துக்குரிய 221ஆவது மலருக்காகிய மதிப்பீட்டுரையை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமை ஆற்றும் திரு துரை. கணேசமூர்த்தி அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தம் உரையில் ஆச்சிரமம் ஆற்றும் சகல சமுதாயப் பணிகளை முன்னிலைப் படுத்தியதோடு அச்செயற்பாடுகள் அனைத்திற்கும் முன்னோடி யாகத் திகழ்வது ஞானச்சுடர் மலரின் வளர்ச்சியேயாகும் என்று கூறியதோடு இன்று பழமை வாதிகளுடன் புதுமை வாதி களையும் உட்புகுத்தி பலவித கட்டுரைகள், கவிதைகளென இன்னோரன்ன பல விடயங்களையும் உட்படுத்தி மலர் வெளி வருவது போற்றக்கூடிய விடயமாகவே கருத வேண்டியுள்ளது.



இவ்வகைச் செயற்பாடுகளுக்கு முன்னின்று இயக்கு பவன் சந்நிதி வேலவன் என்று கூறியதோடு மலரில் இடம் பெற்ற சகல ஆக்கங்களின் தன்மைபற்றி சபையில் உள்ள அடியார்களுக்குக் கூறியதுடன் தனது மதிப்பீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்.

# சுடர் தரும் தகவல்

நாணயத்திற்கு இரு பக்கங்கள் இருப்பதுபோல வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் மாறி மாறி வந்து செல்லும் என்பது பொதுவாக சராசரி மனிதன் ஒருவன் உணர்ந்து கொள்ளுகின்ற கருத்தாகும்.

அனைவரது வாழ்க்கையிலும் இவ்வாறான இயல்பு இடம்பெற்றுக்கொண்டிருந் தாலும் இவ்வாறு இன்பமும் துன்பமும் கலந்ததுதான் வாழ்க்கை என்பதைப் புரிந்து கொள்ளமுடியாத சில அன்பர்களையும் நாம் சந்திக்கின்றோம். இது அறியாமையின் வெளிப் பாடாக இருக்கலாம்.

இன்னும் சிலர் இன்பம் துன்பம் என்பவற்றின் காலச் சக்கரத்தை விளங்கிக் கொண டாலும் துன்பத்தை மட்டுமே பெரிதுபடுத்தி வாழ்க்கையில் துவண்டு போகின்றவர்களையும் காண்கின்றோம்.

இவற்றிற்கு மேலாக ஒன்றன்பின் ஒன்றாகப் பல துன்பங்கள் ஏற்பட்டோ அல்லது மிக மோசமான துன்பங்களுக்கு உட்பட்டு துன்பச் சுமைகளைத் தாங்கமுடியாது வாழ்க் கையின் விளிம்பிற்கே செல்லுகின்ற அன்பர்களையும் பார்க்கின்றோம்.

அதிலும் மற்றவர்களுக்கு துன்பம் விளைவிக்காது கடமை உணர்வும் இறை பக்தியும் கொண்டவர்களாக உள்ள அன்பர்களுக்கு இவ்வித சோதனைகள் அல்லது வேதனைகள் ஏற்படும்பொழுது அவர்கள் தமக்கு ஏற்பட்ட துன்பத்திற்கு விளக்கம் தெரியாது வேதனைப்பட்டு தத்தளிப்பதையும் பார்க்கின்றோம். இத்தகைய நிலை பலரையும் ஆழமாகச் சிந்திக்கத் தூண்டுகின்ற நிலையாகும்.

இத்தகைய நிலையை ஆராய்ந்தால் நாம் இதைவிட மோசமாக ஏற்பட இருந்த துன்பத்திலிருந்து அல்லது ஆபத்திலிருந்து காப்பாற்றப்பட்டிருக்கின்றோம் என்பது பொருளாக இருக்கலாம். அல்லது இறைவன் எம்மை இரட்சிக்கின்ற சூழ்நிலைக்கு நாம் இறைவனை நெருங்கிவிட்டோம் என்பதன் அறிகுறியாகவும் இருக்கலாம்.

இதனை வேறு வார்த்தையில் கூறுவதானால் எமக்கு ஏற்பட்ட சோதனை அல்லது அந்த மோசமான துன்பத்தினால் ஏதோ ஒருவகையான நன்மை நமக்கு உண்டென்பதே கருத்தாகும்.

## துதிக்கையோன் தம்பியை நம்பித் துதி

அண்ணனின் துணையோடு அன்னையின் மடிமீது
அன்று நீ விளையாடினாய்
கண்ணுதல் உன்னையும் கணபதி தன்னையும்
களிப்புடன் கண்டு நின்றார்
பொன்மலை போற்றிட புனிதரும் போற்றிட
புன்னகை கொள் என்னையும்
உன்னை உன் விளையாட்டின் இடையிலே முத்திட்டு
இறைவனை கண்ணோக்கினாள்
உன்னரும் தந்தையின் எண்ணமும் அதுவாக
உன்னையே வர வேண்டினார்
எண்ணிலா அழகோனே உம்பிதா முன்னாலே
எழுந் தோடிச் சென்றாயன்றோ
நண்ணிய உன்னையக் கண்ணுதற் பெருமானும்
ஆரத் தழுவி நின்றார்
புண்ணிய மழமேனிப் பொலிவினை வேண்டினேன்
பூரணா நினைவு கொண்டேன்.

## முருகன் கருணை கண்டு துதித்தல்

செந்தில் வேலாயுதச் செல்வக் குமரனே
சிந்திக்க வைக்கும் அழகே
எந்தையே கந்தனே குகனான சிவபாலா
எழிற்சக்தி வேல் கொண்டவா
சிந்தையே களிகொள்ள செந்திவாழ் காந்தனே
செற்றனை சூரழித்தாய்
வந்திக்கும் அமரர்கு வாழ்வுமாய் ஆகினாய்
வலிய சேனாதிபதியே
சிந்திக்க சிந்தையில் செந்திலோன் கருணையே
நிள் புகழ்ச் சேவலானான்
கந்தவேள்கருணை யால் வனமங்கை வள்ளிக்
கடிமணம் புரிந்து கொண்டாய்
சிந்தையுன் செயலான கந்தனே சண்முக
சேந்தனே காத்தருள் வாயே.

-அமரர்: முதுபெரும்புலவர் வை.க. சிற்றம்பலம் அவர்கள்-

# ஆனிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

அ. பரமநாதன்
(அளவெட்டி மத்தி)

**Dr க. சிவநேசன்**
(நல்லூர், யாழ்ப்பாணம்)

**பொ. வியாகேஸ்**
(நிர்வாகி, பீக்கன் கல்வி நிறுவனம், உடுப்பிட்டி)

**ம. ஸ்ரீகாந்தன்**
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)

**செல்வி ஞானசரஸ்வதி சின்னத்தம்பி**
(விதானையார் வளவு, காங்கேசந்துறை)

**கந்தையா ஏகாம்பரம்**
(புறூடிலேன், அரியாலை)

**சி. நடேசமூர்த்தி J.P**
(வங்கி ஊழியர், அச்சுவேலி)

**சி. கதிரவேலு**
(தொண்டைமானாறு)

**ஐ. சிவநாதன்**
(மருதம், நெல்லியடி)

**செல்வி S. ஜடா**
(புலோலி தெற்கு, புலோலி)

**க. இராசதுரை**
(நீர்வேலி)

**வ.சி. கணபதிப்பிள்ளை**
(ஆவரங்கால், புத்தூர்)

**செல்வி செ. தவமணி**
(சிறுப்பிட்டி கிழக்கு, நீர்வேலி)

**உரிமையாளர்**
(புதிய நதியா நகைமாடம், யாழ்ப்பாணம்)

**Dr V. கணேசவேல்**
(சுந்தரவேல் வைத்தியசாலை, உரும்பராய்)

தலைவர் / செயலாளர்
(அளவெட்டி ப.நோ.கூ.சங்கம், ஊழியர் தொழிற்சங்கம்)
**மார்க்கண்டு கருணாநிதி**
(அச்சுவேலி)
**ஆ. ஜெயக்குமாரன்**
(கப்பூது, கரவெட்டி)
**உரிமையாளர்**
(அம்பிகா நகைமாளிகை, யாழ்ப்பாணம்)
**கு. சோதிராசா**
(தொல்புரம் மேற்கு, சுழிபுரம்)
**ஆனந்தராசா மணிமாறன்**
(அராலி மத்தி, அராலி)
**உரிமையாளர்**
(பேபி போட்டோ, கந்தர்மடம்)
**T. மணிவண்ணன்**
(மிருசுவில்)
**மு. வைகுந்தநாதன்**
(இலங்கை வங்கி, அச்சுவேலி)
**S. விக்னேஸ்வரராசா**
(சுப்ராங் தொலைத்தொடர்பு சேவை, கதிரிப்பாய்)
**சி. இராமகிருஸ்ணா ஆசிரியர்**
(இளை. கணித ஆசிரியர், நெல்லியடி)
**மு. இராசேந்திரா**
(தும்பளை, பருத்தித்துறை)
**பொ. வெங்கடேஸ்வரன்**
(நகரசபை, பருத்தித்துறை)
**ம. ஸ்ரீஸ்கந்தராசா**
(தேசிய சேமிப்பு வங்கி- சிறுப்பிட்டி, நீர்வேலி)
**இ. சரவணபவன்**
(அராலி மத்தி, வட்டுக்கோட்டை)
**சு. சிவனேசன்**
(கந்தர்மடம், யாழ்ப்பாணம்)
**செல்லத்துரை தங்கராசா**
(அன்னை இல்லம், உரும்பராய்)
**ச. வடிவேலு**
(ஊரெழு, சுண்ணாகம்)

**வே. கணபதிப்பிள்ளை**
(குலானை, கரவெட்டி)
**திருமதி அகிலன் அருந்ததி**
(போதராமடம், துன்னாலை)
**க. பூலோகரட்ணம்**
(அச்சுக்கூட ஒழுங்கை, கொக்குவில்)
**நா. வடிவேஸ்வரன்**
(தும்பளை, பருத்தித்துறை)
**சு. கிருபானந்தன்**
(கே.கே.எஸ் றோட், இணுவில்)
**ச.சிவனேசன்**
(கேணியடி, திருநெல்வேலி)
**திருமதி அ. வினிதா**
(நல்லூர், யாழ்ப்பாணம்)
**கு. நித்தியானந்தன்**
(பலாலிவீதி, யாழ்ப்பாணம்)
**S. ராகவன்**
(பிரம்படி, கொக்குவில்)
**உரிமையாளர்**
(அம்பிகாபதி பான்ஸ்கூட், யாழ்ப்பாணம்)
**கோ. யோகலிங்கம்**
(கிளை. முகாமையாளர், புத்தூர்)
**சி. நவரெத்தினம்**
(துவாரகை, கரணவாய்)
**திருமதி அ. குணநாயகம்**
(திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)
**ப. சிவராசா**
(தூதாவளை, கரணவாய்)
**திருமதி தங்கராசா ஈஸ்வரி**
(கம்பர்மலை, வல்வெட்டித்துறை)
**கு. லோகேந்திரன்**
(மில் ஒழுங்கை, மல்லாகம்)
**சோ. கருணாகரன்**
(சுண்ணாகம்)

**உ. செந்தூரன்**
(பிரதான வீதி, அச்சுவேலி)

**வை. கமலநாதன்**
(வர்த்தக முகாமையாளர், மானிப்பாய் கோ.ப.ப.நோ.கூ.சங்கம்)

**கு. சிவபாலராஜா**
(பொது சுகாதார பரிசோதகர், நல்லூர்)

**இ. கதிர்காமநாதன்**
(வங்களா ஒழுங்கை, மல்லாகம்)

**க. ஆனந்தராசா**
(நெல்லியடி, கரவெட்டி)

**இரா. அருட்செல்வம்**
(A.T.C. ரியூசன் சென்ரர், இணுவில்)

**சி. துரைராசா**
(திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)

**செ. முருகதாஸ்**
(சாந்தை, பண்டத்தரிப்பு)

**திருமதி ப. பூமாவதி**
(முருகன் கோவில்வீதி, நெல்லியடி

**வசந்தன் சிவஞானம்**
(அல்வாய் மேற்கு, திக்கம்)

**திருமதி திருத்தேவி ஏகாந்தன்**
(வல்வெட்டித்துறை)

**T. நாகராசா**
(நல்லூர் யாழ்ப்பாணம்)

**கா. தெட்சணாமூர்த்தி**
(பண்டத்தரிப்பு)

**திருமதி ப. இராஜேஸ்வரன்**
(கோண்டாவில்)

**பா. துவாரகன்**
(ஏழாலை தெற்கு, சுன்னாகம்)

**ம. பேரின்பநாயகி**
(நீர்வேலி)

# ஈசனோடாயினும் ஆசை அறுமின்

- திரு இ. சிவராசா அவர்கள் -

ஆன்மீகமெனப்படுவது உன்னதமான திசையை நோக்கி மனதினை உயர்மாற்றம் செய்து இறைவனின் அனைத்துப் படைப்புகளும் ஒன்றே என்ற விளக்கத்துடன் வாழ்வதாகும். கண்ணாடி அறைக்குள் நின்று பார்க்கும்போது பல பிரதி விம்பங்கள் தோன்றுவது போல் பெயர்களும் வடிவங்களும் வேறுபட்டாலும் எல்லாம் ஒரு தெய்வீக தத்துவத்தின் பகுதிகள்தான். ஆன்மீகப் பயிற்சிக்கு உடல், மனம், ஆத்மா என்பவற்றின் தூய்மை இன்றி அமையாதது. உடலிலும் பார்க்க மனம் நுட்பமானது. மனதைவிட ஆன்மா அதிநுட்பமானது. காற்று எதனுடனும் ஒட்டிக்கொள்வதில்லை. நறுமணமோ, துர்நாற்றமோ அதனை எடுத்து வந்து எம்மிடம் கொடுத்துவிட்டுச் சென்றுவிடும். ஆத்மாவும் அவ்வாறே அதற்கேயுரிய சுபாவத்துடன் என்றும் மாறாதிருக்கும். பசியில் வாடும் மனிதனுக்கு ஆன்மீகம் என்ற சொல்லும் அதன் பொருளும் எதுவித பயனையும் தரமாட்டாது. பசித்தவர்க்கு உணவு வடிவத்திலும் வாழ்க்கையில் திசையறியாது வாழ்ந்து துன்பக்கடலில் மூழ்கியிருப்போர்க்கு அமைதி என்ற வடிவத்திலும் நோய், பிணியால் பீடிக்கப்பட்டிருப்பவனுக்கு மருந்தின் வடிவத்திலும் கடவுளைக் காண்பிக்க வேண்டும். அத்தகைய ஆன்மீகம்தான் ஒருவனின் இதயத்தின் உள்ளே நுழைய முடியும். பதிலாக எடுக்கப்படும் பிரமுயற்சிகள் யாவும் நாஸ்திகர்களையும் சந்தேகப் பிராணிகளையுமே உருவாக்கும்.

இயமன் தருமரிடம் இந்த உலகில் எது மிக அதிசயமானது என்று வினவ, "தனது சுற்றாடலில் தினம் தினம் பலர் இறந்து மடிவதைப் பார்த்தும் மனிதன் தனக்கும் இவ்வண்ணம் எல்லாச் செல்வங்களையும் இழந்து செல்லவேண்டிய நாள் வரும் என்பதை உணராது இருப்பதுதான்" என்றார். உலகியலில் வாழ்வதுடன் மன அமைதியையும் ஆனந்தத்தையும் பெறும் நோக்கில் எமது ஆன்மீகச் செயற்பாடுகள் அமையவேண்டும். உலகியலில் மூழ்கியுள்ளபோது சுருங்கியிருக்கும் அன்பு வட்டமானது ஆன்மீகத்தில் எல்லையற்றதும் நிபந்தனையற்றதுமான ஒரு மகா சக்தியாகப் பரிணமிக்கின்றது. தன்னையறிதல் மூலம் எல்லையற்ற பேரின்பத்தையடையலாம் என வேதாந்தம் பகர்கின்றது. சித்தர்களும் தமது உபதேசங்களில் தன்னைப் பற்றிய விழிப்புணர்வில் ஆழ்ந்திருப்பதன்மூலம் நிலையான அமைதியைப் பெறமுடியுமென தமது அனுபவங்களை வெளிப்படுத்தியுள்ளனர். தீர்க்கமான மன உறுதியுடன் எல்லாப் புலன்களையும் வெல்லமுடியுமெனினும் மனமானது எண்ணங்களை ஒன்றன்பின் ஒன்றாக உருவாக்கிக் கொண்டிருப்பதனால் அதைக் கட்டுப்படுத்துவது மிகவும் சிரமம். "பற்றிவிடா அ இடும்பைகள் பற்றினைப் பற்றிவிடா அதவர்க்கு" என்றார் வள்ளுவர். அதாவது பற்றுக்களைப் பற்றியவனைத்தான் துன்பங்கள் சூழ்ந்து கொள்கின்றன. வசிட்ட முனிவரும் மனிதனது துன்பங்கட்குக் காரணம் அவனது மனமேயல்லாது வெளிக்காரணிகள் எதுவுமல்ல என்றும், "நான்" எனப்படுபவன் யார் என ஆராய்வதன்மூலம் மனதினை அமைதியடையச் செய்யலாமென்கின்றார். எமது முயற்சிகளையும் அதற்கான பலன்களையும் ஆண்டவனுக்கு அர்ப்பணிக்கும் போது அது கர்மயோகமாக மாறுகின்றது. கர்ம, ஞான, பக்தி யோகங்களில் பக்தி

உலகத்தை மாற்ற நினைக்கும் ஒவ்வொருவரும் தம்மை மாற்றிக்கொள்ள நினைப்பதில்லை.

யோகமே சிறந்த தர்மம் எனப்படுகின்றது. ஆனால் கடைப்பிடிப்பதோ மிகவும் சிரமம். நமது முயற்சியின் தீவிரத்துக்கேற்ப கடைத் தேற்றம் அமையும்- அதனால் கலியுகத்தில் சரணாகதி மார்க்கம் சிறந்ததும் இலகுவானது மாகும். இதில் எமது முயற்சி எதுவுமில்லை. பகவானே என்று பூரண நம்பிக்கையுடன் சரணடைந்தபின் அவரின் கருணையே எம்மை மோட்சத்துக்கு இட்டுச் செல்லும். உதாரண மாக ஒரு மாடிக் கட்டிடத்தில் பத்தாம் மாடிக் குச் செல்லவேண்டியவன் படிவழியாகவும் பாரம் தூக்கி மூலமாகவும் செல்ல முடியும். படிவழியாகச் செல்வது பக்தி மார்க்கம். மாற்று வழி சரணாகதி மார்க்கம். Liftஇன் உள்ளே நுழைந்தபின் அது எம்மைப் பத்தாம் மாடிக்கு எடுத்துச் செல்லும் என்ற நம்பிக்கை யில் உறுதியாக இருக்கின்றோமல்லவா.

அநாதி காலமாக எமது செயற்பாடு களின் விளைவாக சேகரிக்கப்பட்ட பாவ புண்ணியங்களிலுள்ள சாத்வீக, ரஜோ, தாமச குணங்களின் விகித வேறுபாட்டிற்கேற்ப மன தில் ஆசைகள் உருவாகிக் கொண்டிருக்கின் றன. இதனால் மனம் போன வழியே உடலும் சென்று மேன்மேலும் பாவங்களைச் சேர்த்துக் கொண்டிருக்கின்றோம். ஒரு நதியின் நீரோட் டத்தில் கிளை நதிகளுடன் சேரச் சேர அதன் வேகமானது அதிகரித்துக்கொண்டு போவது போல் மனதிலும் ஆசைகள் வளர வளர அவை நிறைவேறினாலும் மேன்மேலும் வளர் கின்றன. நிறைவேறாவிடினும் கோபமும் கவலையும் வளர்கின்றது. அதுபோல் ஞானப் பாதையில் பகவானிடத்தில் மனதைச் செலுத்த வேண்டுமென்ற பக்தியும் இடைவிடாத முயர்சி யும் அமையும்போது ஆன்மீக நாட்டம் மேன் மேலும் வளர்ச்சியடைகின்றது. "அவாவினை ஆற்ற அறுப்பின் தபாவினை தான்வேண்டும் ஆற்றான் வரும்" அதாவது ஆசைகளை அறவே ஒழிப்பவனுக்கு நல்வாழ்வுக்கான சுப காரியங்கள் அவன் விரும்பியவாறு வாய்க்கும் என்பது வள்ளுவம். துறவறம் நிலையான பேரின்பத்தை அளித்து முக்திக்கு வழி காட்டும் என்று தெரிந்தும் அது இலகுவாக எல்லோராலும் செய்யமுடியாத காரியமாகும். மனமானது காம, குரோத, மோக, லோப, மத, மாச்சர்ய என்பவற்றுள் ஆழ்ந்து கிடப் பதில்த்தான் இன்பம் பெறுவதினால் அந்நிலை யிலிருந்து மனதை மீளமுடியாதவாறு இந்த ஆறு எதிரிகளும் எல்லா வழிகளாலும் தடுத் துக்கொண்டேயிருக்கின்றன.

அப்படியாயின் பந்த பாசங்களில் உழலும் சாதாரண மனிதனுக்கு பிறப்பை அறுப்பதற்கான வழிகள்தான் என்ன. எமது மூதாதையர்கள் பலர் புலன்களை வென்று முக்தியடையும் வழிமுறைகளை வாழ்ந்து காட்டியுள்ளனர். முட்டை வடிவில் இருக்கும் 14 லோகங்களும் இந்த அண்டவெளியில் சிறி தும் பிறழாது ஒழுங்காக இயங்கிக் கொண்டு இருக்கின்றன. தரையின் மேற்பகுதியில் அடர்த் தியாகக் காணப்படும் பஞ்சபூதங்களின் செறிவு மேலே செல்லச்செல்ல குறைவடைந்து ஈற்றில் ஆகாசமான அண்டவெளியில் வெறுமை யடைந்து சூன்யமாகின்றது. அந்நிலையில்த் தான் 14 லோகங்களையும் தாங்கும் சக்தி யைப் பெறுகின்றது. மனதினையும் வெறுமை யடையச் செய்யும்போது அதன் சக்தியானது பன்மடங்காகப் பரிணமிக்கின்றது. இந்தச் சக்தியின் துணையுடன்தான் மகான்கள் உடலுக்கும் மனதுக்குமுள்ள தொடர்பை அகற்றினார்கள். "ஆரா இயற்கை அவா நீப்பின் அந்நிலையே பேரா இயற்கை தரும்" குறள். ஒருபோதும் திருப்தியடையாத அவாவை ஒழிப்பதன்மூலம் நிலையான இன்ப வாழ்வு வாழலாம். இளவரசராக இருந்த சித்தார்த்தன் துன்பக்கடலில் மூழ்கியிருக்கும் மானிடரைப் பீடித்துள்ள நோய், பிணி, மூப்பு என்பவற்றுக் கான காரணங்களை ஆராயும் நோக்கில்

*நீங்கள் உங்கள் நினைப்புகளை ஒழுங்குபடுத்துங்கள். உங்கள் வாழ்க்கை ஒழுங்காகிவிடும்.*

ஆழ்ந்த தியானத்தில் அமர்ந்திருந்து பந்த பாசங்களை அறுக்கவேண்டுமென்ற விழிப் புணர்வு பெற்று அரசமாளிகையையும் மற்றும் சுகபோகங்களையும் துறந்து வெளியேறி புத்தபகவான் ஆனார். இவ்விழிப்புணர்வைப் பெற சிலர் பல பிறப்புகளும் எடுக்க நேரிடும். ஆனால் ஒரு சிலருக்கோ இப்பிறவியிலேயே சந்தர்ப்ப வசமாக ஏற்படும் ஒரு கணப்பொழு தில் ஞானம் பெற்றுவிடுகின்றனர்.

உடலுக்குத் தானாகச் செயற்படும் அறிவு கிடையாது. ஆன்மாவுக்குத்தான் அறிவுண்டு. உடலை எடுத்த ஆன்மாவின் அறிவுதான் புலனின்பங்களை மனமானது அறிய அனுபவிக்க உதவுகின்றது. மனதில் தோன்றும் ஆசைகள் புயலைப்போலவும் பேராசையானது சுழல் காற்றுப்போலவும் பற்றுக் கள் மண்சரிவைப் போலவும் கர்மம் எரிமலை போலவும் எம்மை ஆட்டிப்படைத்துக் கொண டிருக்கின்றன. எனவே இவற்றைப் புறந்தள்ளி வைப்பதன்மூலம் தியானத்தின்போது மன தினை சுலபமாக அமைதியடைய வைக்க முடியும். ஆடம்பரமற்ற சிக்கன வாழ்க்கை முறைகளைக் கடைப்பிடிக்கும்போது மனதில் எப்போதும் உயர்வான எண்ணங்கள் உரு வாகிக் கொண்டிருப்பதால் உடம்பும் மனமும் அமைதியடைகின்றன. மகாத்மா காந்தி கடைப்பிடித்து வாழ்ந்து காட்டிய பாதை இது. ஆன்மீகப் பாதையின் வளர்ச்சிக்கு மூலாதார மாக விளங்கும் பக்தியானது நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது. தன்னம்பிக்கை யுடனும் தூய்மையான மன உறுதியுடனும் எடுக்கப்படும் எந்த முயற்சியும் வெற்றியைத் தருவது திண்ணம்.

சத்தியவானின் உயிரை எடுத்த இய மனைச் செல்லவிடாது தடுத்து நிறுத்திய சாவித்திரி விடாப்பிடியாக வாதிட்டு தனது கணவனை உயிர்பெறச் செய்தது வரலாறு. பிரகலாதனை அவனது தந்தையான இரண்ய கசிபு எத்தனையோ விதமான சித்திரவதைக் குட்படுத்தியபோதும் அவன் சிறிதளவும் பாதிக்கப்படாதிருந்தான். தூணிலும் இறைவன் இருக்கின்றார் என்ற அவனது அசைக்க முடியாத நம்பிக்கையை நிறைவேற்றவே நாராயணன் நரசிம்ம அவதாரம் எடுத்து பிரக லாதனின் பக்தியின் மகிமையை உலகறியச் செய்தார். கங்கைநதியில் வீழ்ந்த ஒருவர் கரை யேற முடியாது தத்தளித்துக் கொண்டிருந்த போது "ஒரு பாவச் செயலிலும் ஈடுபடாத ஒருவரால்த்தான் இவரது உயிரைக் காப்பாற்ற முடியும்" என அறிவித்துக் கொண்டிருந்தனர். இதைக்கேட்ட 18 வயது நிரம்பிய இளைஞன் "கங்கையில் மூழ்கியதும் அனைத்துப் பாவங் களும் தொலைந்துவிடும்" எனத் தனது தாயார் சிறுவயதில் கூறியது ஞாபகத்துக்கு வரவே அந்த நம்பிக்கையுடன் கங்கையில் பாய்ந்து தத்தளிப்பவரைக் காப்பாற்றி வெளி யேற்றி விட்டான். சிக்காக்கோவில் 11.09.1893 இல் நடைபெற்ற சர்வமத சபையில் பேசு வதற்கு அழைப்புக் கடிதமும் கிடைக்கப் பெறாத நிலையில் புறப்பட்ட சுவாமி விவே கானந்தர் அமெரிக்காவில் ரயில் பயணத்தின் போது அருகில் அமர்ந்திருந்த Mrs. Gatte என்பவரிடம் தனது பிரயாண நோக்கத்தைத் தெரிவித்தார். இந்த மகாநாட்டின் அமைப்பாள ரான Prof. Jhon Henry Wright என்பவர் தனது நண்பர் எனவும் அவரைச் சந்திக்கும் படியும் கூறி அடுத்துவந்த நிலையத்தில் இறங்கி விடுகின்றார். இவர் இறங்கவேண்டிய நிலையம் வந்ததும் இறங்கி எங்கே எப்படிச் செல்வது என்ற யோசனையில் அங்கேயே உறங்கிவிடுகின்றார். இதை அவதானித்த எதிர்வீட்டிலிருந்த Mr. Heale என்பவர் இவரை அழைத்துச் சென்று உணவளித்து Prof. Wrightஇன் வீட்டுக்கும் அழைத்துச் சென்று இவரது நிலைமையை எடுத்துரைக்கின்றார். Prof. Wrightஇன் அனுசரணையினால் இவருக்கு

*தோல்வியைக் கண்டு அஞ்சுபவர்களிடமிருந்து வெற்றி தானாகவே ஒதுங்கிக்கொள்கிறது.*

சர்வமத சபையில் உரையாற்றுவதற்கு வாய்ப் பளிக்கப்படுகின்றது. அந்தக் கன்னிப் பேச்சை "அமெரிக்காவின் சகோதர சகோதரிகளே" என்று ஆரம்பித்ததும் பலத்த கரகோசத்தைப் பெற்று சைவ சமயத்தின் மகிமையை உல கறியச் செய்தார். எண்ணத்தில் தூய்மையும் உறுதியும் இருக்கும்போது ஆண்டவன் ஏதோ ஒரு வடிவில் வந்து எமது முயற்சிக்குப் பக்கத் துணையாக இருப்பார். "குடிசெய்வல் என்னும் ஒருவர்க்கு தெய்வம் மடி தற்றுத் தான் முந்து றும்" என வள்ளுவப் பெருந்தகையும் பகர்ந் துள்ளார்.

அண்ணாமலையானைப் பார்க்க வேண்டு மென்ற ஆர்வத்தில் வீட்டில் யாருக்கும் தெரி யாது புறப்பட்ட வெங்கடராமன் அங்கு சென்ற போது மூலஸ்தானத்தின் கதவுகள் திறந்தே இருந்தன. வேறு யாரும் அங்கு இருக்கவும் இல்லை. உள்ளே சென்று மூலவரைப் பார்த் துக்கொண்டு நின்றபோது அப்படியே இறை வனுடன் ஐக்கியமாகி அங்கேயே வாழ்ந்து ரமண மகரிஷியாகச் சமாதியடைந்தார்.

திருப்பாணாழ்வார் ஒரே ஒரு தடவை தான் கோயிலுக்குச் சென்றார். மூலவரைப் பார்த்துக் கொண்டு நின்றதும் அங்கேயே இரண்டறக் கலந்து விட்டார். திரும்பி வரவே இல்லை. அரவிந்தர், நீலகண்ட பரமாச்சாரி, சிறுத்தொண்ட நாயனர் ஆகியோரும் பல போராட்டங்களில் பல தாக்குதல்கட்குப் பொறுப் பாக இருந்து ஆயுதமேந்திப் போராடியவர்கள் தான். பின் திடீர் மனமாற்றம் காரணமாக ஆன்மீக நாட்டத்தினால் ஈர்க்கப்பட்டு கடைத் தேற்றம் பெற்றனர். வால்மீகி முனிவரும் தமது இளமைப் பருவத்தில் பிறர் சொத்துக் களைக் கொள்ளையடித்து ஜீவனோபாயம் நடாத்தியவர். ஒருநாள் அபகரித்த நகை களுடன் நாரதரை எதிர்ப்பட்டபோது "நீ யாருக்காக இவ்வண்ணம் மகா பாவங்களைச் சேர்த்துக்கொண்டிருக்கின்றாயோ அவர்கள் உனது பாவத்தில் ஒரு சிறிய பங்கையாவது ஏற்றுக்கொள்வார்களா?" எனக் கேட்டார். வீடு சென்ற வால்மீகி நகை முடிச்சை மனைவி யிடம் கொடுத்தபின் நாரதர் வினவிய வார்த் தையைக் கூறியபோது "குடும்பத்தை உண வளித்துக் காப்பாற்றுவது உங்கள் கடமை. அதற்காக நீங்கள் சேர்க்கும் பாவங்களில் நாம் ஏன் பங்குதாரராக வேண்டும்" என்றார் மனைவி. அவரது குழந்தைகளும் அவ்வாறே பதிலுரைத்தனர். அன்றே பற்றுக்களைத் துறந்து விழிப்புணர்வு பெற்றவர்தான் பின்பு இரா மாயண காவியத்தை முதலில் வடிவமைத்த பெருமைக்குரியவர்.

ஆதிசங்கரர் மிகச் சிறுவயதிலேயே ஆன்மீக நாட்டம் கொண்டு துறவறம் மேற் கொள்வதற்கு தாயாரின் அனுமதியை வேண்டி னார். மறுப்புத் தெரிவித்த தாயார் ஒருநாள் குளத்தில் இருவரும் நீராடிக் கொண்டிருந்த போது ஆதிசங்கரரை முதலை பிடித்திழுத்த சம்பவத்தை நேரில் கண்ணுற்ற தாயார், "முதலைக்கு இரையாவதைவிட நீ துறவறம் செல்லலாம்" என அனுமதி வழங்கினார். உட னும் பாதயாத்திரையாக வடதிசை சென்று நர்மதா நதிக்கரையை அடைந்து ஒரு குருவின் கீழ் பல கலைகளையும் கற்றுத் தேர்ந்தார். எட்டு வயதிலேயே பிரம்ம சூத்திரம் பகவத் கீதை என்பவற்றுக்கு உரை எழுதினார். பின் மீனாட்சி பஞ்ச ரத்தினம், விநாயக பஞ்ச ரத்தினம், கனகதாரா போன்ற தோத்திரங் களை இயற்றினார். சிவானந்த லகரி, சௌந் தர்ய லகரி என்னும் பல புத்தகங்களையும் எழுதி தனது 32ஆவது வயதில் கேதார நாத்தில் சமாதியடைந்தார்.

எவ்வளவு பெரிய சொத்துகளுக்கு அதிபதியாக இருந்தும் எல்லாவற்றையும் புறம் தள்ளி ஏன் இப்படிக் கோவணத்துடன் இருக்கின் றீர்கள் என அரசன் கேட்டபோது "நான் உன்னைவிடப் பணக்காரனாக இருந்தபோது

*முயற்சி கானல் நீர் அல்ல; அது வெற்றியென்கிற ஜீவநதிக்கு அழைத்துச் செல்லும் பாதை.*

அரசவையில் வீற்றிருந்த உன்னுடன் நின்று கொண்டே உரையாடினேன்'' இன்று அதே அரசனான நீ இத்திண்ணையில் அமர்ந்திருக்கும் என்னுடன் நின்றவண்ணம் கேள்வி கேட்கின்றாயெனின் துறவறம் எவ்வளவு மகிமை வாய்ந்தது'' என்றாராம் பட்டினத்தடிகள்.

துறவறத்தின்மூலம் மனதை வெறுமையடையச் செய்து அபார சக்திகளைப் பெற்ற மேற்கூறிய மகான்களின் வரலாறுகளைப் படித்தும் கேட்டும் நாம் இன்னும் சொத்துக்களைப் பெருக்குவதில் முனைப்பாக இருக்கின்றோமேயல்லாது ஒரு சிறு துளியையாவது நலிந்தோர்க்கு பகிர்ந்தளிக்க விருப்பமில்லாதவர்களாகவே இருக்கின்றோம். கஷ்டப்பட்டுத் தேடி வைத்திருக்கும் சொத்துக்கள் எவையும் எமதல்ல. ஏழை எளியவர்க்குச் செய்த தான தர்மம்தான் எமது சொத்தாக இறுதிவரை எம்மைவிட்டுப் பிரியாதிருப்பது மட்டுமல்லாது மறுபிறப்பிலும் உறுதுணையாக அமையக் கூடியது. "வேண்டின் உண்டாகத் துறக்க; துறந்தபின் ஈண்டியற் பால பல'' வள்ளுவர். வளங்கள் உள்ள காலத்திலேயே தான தர்மம் செய்தால் துன்பமில்லாப் பெருவாழ்வு வாழலாம். தான தர்மத்துக்கு அடிப்படையாக விளங்குவது பற்றின்மையாகும். இயமம், நியமம், ஆசனம், பிரணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி ஆகிய அஷ்டாங்க யோகப் பயிற்சிகள் உடல், மனம், ஆத்மா என்பவற்றைத் தூய்மையடையச் செய்து மானுடனைப் பூரணத்துவமடையச் செய்கின்றன. ஆசைகளை இலகுவாக அறுப்பதற்கு பக்தி யோகத்தில் 9 படிமுறைகள் காணப்படுகின்றன. அவற்றுள் ஏதாவது ஒன்றை முறையாகப் பயிற்சி செய்து கடைத்தேற்றம் பெற்ற பல மகான்கள் நம்மத்தியில் வாழ்ந்துள்ளனர்.

அதன் விபரம்:

1. ஸ்வரணம்: தளராத மனத்துடன் இறைவனின் கதைகளை, கீர்த்தனைகளைச் செவிமடுத்தல்.
   (உ+ம்- அர்ச்சுனனின் பேரனான பரீட்சித்)
2. கீர்த்தனம்: சதா இறைவனின் புகழைப் பாடிக்கொண்டிருப்பது.
   (உ+ம்- கண்ணனின் பக்தையான மீராபாய்)
3. பாதசேவனம்: இறைவனின் திருவடிகளைப் பக்தியுடன் தியானித்தல்.
   (உ+ம்- பரதன் இராமனின் பாதுகைகளைத் தியானித்தான்.)
4. வந்தனம்: இறைவன் எங்கும் இருக்கின்றார் என்ற உறுதியில் தரையில் வீழ்ந்து வணங்குதல்.
   (உ+ம்- பீஷ்மர்)
5. தாஸ்யம்: சதா இறை சேவையிலீடுபடுதல்.
   (உ+ம்- ஹனுமான்)
6. சக்யம்: இறைவனை நண்பனாக நேசித்தல்.
   (உ+ம்- அர்ச்சுனன், கிருஷ்ணர்)
7. ஸ்மரணம்: எதுவித இடர்வரினும் இறை நாமத்தை ஜெபித்தல்.
   (உ+ம்- பிரகலாதன்)
8. ஆத்ம நிவேதனம்: தனது அனைத்தையும் இறைவனுக்கே அர்ப்பணித்து வாழ்தல்.
   (உ+ம்- கண்ணனின் கோபிகைகள்)

எமது வசதிக்கேற்ப இவற்றுள் ஏதாவது ஒருமுறையைக் கடைப்பிடித்து வாழ்நாளின் முற்பகுதியை வாழும் கலைப் பயிற்சிகளிலும் (Art of living) மீதிப் பகுதியை கடைத்தேற்றம் (Art of leaving) பெறுவதற்கான பயிற்சிகளிலும் ஈடுபடுத்துவோமாக.

*சோம்பல் எல்லாச் செயல்களையும் கடினமாக்கும். சுறுசுறுப்பு எல்லாவற்றையும் எளிமையாக்கும்.*

(தொடர்ச்சி...

# திருச்சதகம்

## பத்திவைராக்கிய விசித்திரம்

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
– சங்கநூற் செல்வர் பண்டிதர் ச. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

### 2. அறிவுறுத்தல்

19. வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே.

**ப.ரை:**

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி- ஆகாயமாகி நிலமாகிக் காற்றாகி ஒளியுடைப் பொருள்களாகி, ஊனாகி உயிராகி- உடலோடு கூடிய உயிராகி, உண்மையுமாய் இன்மையுமாய்- மெய்யன்பர்களுக்கு உள் பொருளாகியும் அஃதிலார்க்கு இல்பொருளாகியும், கோனாகி- எப்பொருட்டும் தலைவனாகியும், அவர் அவரை யான் எனது என்று கூத்தாட்டுவானாகி- உலகத்துள்ள ஒவ்வொருவரையும் யான் என்றும் எனது என்றும் செருக்கடைந்து கூறிக் கூத்தாடும்படி செய்பவனாகியும், நின்றாயை- நிற்கின்ற நின்னை, என் சொல்லி வாழ்த்துவன்- யாது சொல்லி வாழ்த்தக்கடவேன்.

வான் முதலிய பொருள்களாகியும் உள்பொருளாகியும் இல்பொருளாகியும் அப்பொருள்கள் எல்லாவற்றிற்கும் தலைவனாகியும் உலகிலுள்ள ஒவ்வொருவரையும் யான் எனது என்று செருக்கடைந்து கூறிக் கூத்தாடும்படி செய்பவனாகியும் நிற்கின்ற நின்னை என்சொல்லி வாழ்த்தக் கடவேன் என்பதாம்.

வானாகி என்றதனால் விண்ணையும் மேகத்திலுள்ள நீரையும் குறித்தார். மண் என்றதனால் அணுச்செறிந்த நிலத்தைக் குறித்தார். "மண்டிணிந்த நிலனும்... (புற2) எனப் பிறர் கூறுதலும் காண்க. வளி- காற்று. ஒளி என்றதனால் ஞாயிறு திங்கள் தீ என்னும் ஒளியுடைப் பொருள்கள் மூன்றினையும் குறித்தார். வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி என ஐம்பூதங்களும் முற்கூறப்பட்டமையின் அவற்றின் பரிணாமமாகிய உடலை வேறு கூறவேண்டாமையின் "ஊனாகி யுயிராகி" என்பதற்கு உடலோடு கூடிய உயிராகி எனப் பொருளுரைக்கப்பட்டது. உயிர் உடலோடு கூடி நிற்கும் நிலையில் "இயமானன்" எனப்படும். வானாகி என்பது முதல் உயிராகி என்பது வரையில் இறைவனது அட்டமூர்த்தங்கள் கூறப்பட்டன.

"நிலம்நீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்து நின்றோன்" தோணோ 5.

என இத் திருவாசகத்தும்,

"இருநிலனாய்த் தீயாகி நீருமாகி யியமானனா யெறியுங் காற்றுமாகி, அருநிலைய திங்களாய் நாயிறாகி யாகாசமா யட்ட மூர்த்தியாகி" (நாவு 308:1) எனத் தேவாரத்தும் வருவன காண்க. இதனால் இறைவனது சருவவியாபகநிலை கூறினார்.

இறைவன் மெய்யன்பர்க்கு உள்பொருளாக வெளிப்பட்டும், அ∴திலார்க்கு இல்பொருளாக வெளிப்படாதும் நிற்கும் இயல்பு பற்றி "உண்மையுமா யின்மையுமாய்" என்றார். "மெய்யர் மெய்யனே" (சத 100) எனவும், "மெய்ம்மையும் பொய்ம்மையு மாயினார்க்கு" (பொற் 20) எனவும், "அன்பர்க்கு மெய்யானை யல்லாதார்க் கல்லாத வேதியனை" (அம்மானை 13) எனவும் அடிகள் அருளியவாறுங் காண்க.

எல்லாப் பொருள்களுக்கும் தலைவனாக இருப்பவன் இறைவனாதலின் "கோனாகி" என்றார். "அளவிறந்த பல்லுயிர்க்கும் கோனாகி நின்றவாறு கூறுதுங்கா ணம்மானாய்" (அம்மானை 16) என அடிகள் பிறிதோரிடத்து அருளியமையுங் காண்க. இதனால் இறைவன் தன்வயத்தனாதல் கூறினார்.

யான் என்பது அகப்பற்று; எனது என்பது புறப்பற்று; "யானென தென்னும் செருக்கு" (குறள் 346) என்றார் திருவள்ளுவரும். இவற்றை முறையே அகங்காரம் மமகாரம் என்பர் வட நூலார். அவரவர் என்றது யான் எனது என்று செருக்கிற்கூற வல்லாராய் உலகங்களிலுள்ள மக்கள் தேவர் நரகரைக் குறித்தது.

கூத்தாட்டுவானென்றது உயிர்கள்தோறும் இறைவன் கலந்து நின்று இயக்கினாலன்றி அவை தாமாக இயங்குந் தன்மையையுடையனவல்ல என்பதை உணர்த்தியது. "ஆட்டுவித்தா லாரொருவ ராடாதாரே யடக்குவித்தா லாரொருவரடங்காதாரே" (309:3) என அப்பரடிகள் திருவாக்கும் காண்க. நின்றாயை என இறந்த காலத்தாற் கூறினும் நிற்கின்றாயை என்பது பொருளாகக் கொள்க.

என்சொல்லி வாழ்த்துவன் என்பது நின் இயல்புகள் என் சொல்லில் அடங்கா என்பதை உணர்த்தியது.

"என்னானா யென்னானா யென்னி னல்லால்
ஏழையேன் எனச்சொல்லி யேத்துகேனே" நாவு 309:7.

எனத் தேவாரத்து வருதலுங் காண்க.

இதன் கண், இறைவனை வாழ்த்துவதற்கு அவன் இயல்பு அடங்காமையின் வாழ்த்தாதிருக்க முயலும் மனமொழிமெய்களை வெறுத்து இறைவனை முன்னிலைப்படுத்திக் கூறுமுகமாக இயன்றவரை வாழ்த்துவதே கடமையென மனமொழி மெய்களுக்குக் குறிப்பினால் அறிவுறுத்தலின் அறிவுறுத்தல் என்னும் இரண்டாம்பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க.

20. வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் மனநின்பால்
தாழ்த்துவதுந் தாமுயர்ந்து தம்மையெல்லாந் தொழவேண்டிச்
சூழ்த்துமது கரமுரலுந் தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானுமுன்னைப் பரவுவனே.

*ஆணவச்சுமை அபாயப் பள்ளத்தில் அழுத்தும்.*

**ப.ரை:**

மதுகரம் சூழ்த்தது முரலும் தாரோயை- வண்டுகள் சூழ்ந்து மொய்த்து ஒலிக்கும் கொன்றை மலர்மாலையுடைய நின்னை, வானவர்கள் வாழ்த்துவதும் தாம் வாழ்வான்- தேவர்கள் வாழ்த்தி வணங்குவதும் தாம் நெடுங்காலம் இன்பவுலகில் வாழும்பொருட்டே, மனம் நின்பால் தாழ்த்துவதும்- அவர்கள் தம் நெஞ்சை நின்னிடத்துத் தங்கும்படி செய்வதும், தாம் உயர்ந்து தம்மை எல்லாம் தொழவேண்டி தாம் உயர்வடையவும் அதனால் தம்மை எல்லாவுயிர்களும் வணங்கவும் விரும்பியே; ஆனால், நாய் அடியேன் யானும்- நாய் போன்ற சிறுமையையுடைய அடியவனாகிய யானும், பாழ்த்த பிறப்பு அறுத்திடுவான் உன்னை பரவுவன்- பயனின்றிக் கழியும் எடுத்த பிறப்பில் அப்பிறப்பினை அறுத்தலாகிய பயனைப் பெற வேண்டி உன்னை வாழ்த்துவேன்.

மதுகரம் முரலும் தாரோயை வானவர்கள் வாழ்த்துவதும் தாம் நெடுங்காலம் இன்பவுலகில் வாழும்பொருட்டே; அவர்கள் தம் நெஞ்சை நின்பால் தங்கும்படி செய்வதும் தாம் உயர்வடையவும் அதனால் தம்மை எல்லாம் தொழவிரும்பியே; ஆனால் நாயடியேன் யானும் அப்பயன்களை விரும்பாது பயனின்றிக் கழியும் எடுத்த பிறப்பில் அப்பிறப்பினை அறுத்தலாகிய பயனைப் பெறும்பொருட்டு உன்னை வாழ்த்துவேன் என்பதாம்.

வானவர்கள் மொழியினாலும் மனத்தினாலும் நின்னை வாழ்த்துவதும் நின்னை இடைவிடாது நினைத்தலும் செய்தல், தாம் வாழும் இன்பவுலகில் நெடுங்காலம் வாழவும் தாம் உயர்வடைந்து அதனால் தம்மைப் பிறர் தொழவும் வேண்டி யாரும் என்பது "வாழ்த்துவதும் வானவர்கள்.... தொழவேண்டி", என்பதன் பொருளாகும். அவர்கள் பெறவிரும்பும் பயன்கள் இன்பவுலக வாழ்வும் தமது உயர்வும் பிறர் தம்மை வணங்குதலுமாதலின் அழிவுடைய அப்பயன்கள் விரும்பத்தக்கனவல்ல என்பது கருத்து.

தாழ்த்துதல்- தங்கச் செய்தல். "கவுளிழி கடாத்துத், தண்ணறு நாற்றந் தாழ்ப்ப" (பெருங் (2) 12:142-3) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. மனந் தாழ்த்துதல்- இறைவனிடத்து மனத்தைத் தங்கச் செய்தல்; என்றது இடைவிடாது நினைத்தல் என்றவாறு. எல்லாம்- எல்லாவுயிர்களும், சூழ்ந்து என்பது எதுகை நோக்கி வலித்தது. மதுகரம்- வண்டு. "விதிகரந்த செய்வினையேன் மென்குழற்கே வாளா, மதுகரமே ஏத்துக்கு வந்தாய்" எனச் சிவபெருமான் திருவந்தாதியிலும் (11-ந் திருமுறை) இப்பொருட்டாதல் காண்க. மதுகரம் முரலும் தார் என்றது இறைவனது அடையாள மாலையாகிய கொன்றைமலர் மாலையை உணர்த்தியது. "மணங்கொண்ட, தாதகத்த தேன் முரலுங் கொன்றையான்" (11ஆந் திருமுறை மூத்தநாயனார் திருவிரட்டைமணிமாலை) என வருதல் காண்க. தார் என மார்பின்மாலை கூறப்படினும் உப லக்கணத்தாற் கண்ணியாகிய முடிமாலையுங் கொள்ளப்படும்.

பாழ்த்த பிறப்பு- பயனின்றிக் கழிவதாகிய எடுத்த பிறப்பு. பிறப்பு அறுத்திடுவான்- பிறப்பினை ஒழித்திடுவதற்காக. அடிகள் பிறப்பினை அறுக்க விரும்பினர் என்பது,

"பிறவியை வேரொடுங் களைந்தாண்டுகொள்" நீத் 19.
"அடியேனை மண்ணார்ந்த பிறப்பறுத்திட்டாள்வாய்" ஏசற 2.
"பாருரு வாய பிறப்பற வேண்டும்" எண் 1.
"பித்திலனேனும் பிதற்றிலனேனும் பிறப்பறுப்பாய்" எண் 4.

என அடிகள் பிறாண்டு அருளியவற்றானுமறியப்படும். பிறப்பறுத்திடுவான் பரவுவன் என இயையும்.

*தவம் செய்வதைவிட தானம் செய்வது சிறப்பு.*

"சாத்திர மோதுஞ் சதுர்களை விட்டுநீர்
மாத்திரைப் போது மறித்துள்ளே நோக்குமின்
பார்த்தவப் பார்வை பசுமரத் தாணிபோல்
ஆர்த்த பிறவி யகலவிட் டோடுமோ" (1631)

எனத் திருமந்திரத்து வருதலுங் காண்க. வானவர்களுடைய விருப்பம் மீண்டும் பிறத்தற்கு ஏதுவாமன்றி தித்திய இன்பத்தைத் தருவதின்றாம். அடிகள் துன்பத்திற்கிடமான பிறப்பினை ஒழித்து நித்தியமாகிய முத்தியின்பத்தினைப் பெறுமாறு பரவுவாராயினர். யானும் என்பதில் உம்மை வானவர்களன்றி யானும் என இறந்தது தழீஇய எச்சவும்மை.

இதன்கண் மனமொழிகளால் இறைவனை இயன்றவாறு வழிபடும்போது வானுலகில் இன்புற்று வாழும் தேவர் வாழ்வினைக் கருதும் மன மொழிகளை வெறுத்து இறைவனை முன்னிலையாக்கிக் கூறுமுகமாகப் பிறப்பறுத்துப்பெறும் வீடே பெறுதற்குரியதெனக் குறிப்பினால் அவற்றிற்கு அறிவுறுத்தமை பெறப்படுதலின் அறிவுறுத்தல் என்னும் இரண்டாம் பத்து நுதலிய பொருள் புலப்படுமாறு காண்க.

(தொடரும்...

**பந்தமதை அகற்றி உன் பாதமதில் சேரவென்றால்**
**என்சிந்தை ஒருநிலையில் நிற்க வரம் தாரும் ஐயா!**

வா வா சந்நிதி வேலவனே வந்துஎம்மைக் காருமய்யா!
தேவாதி தேவர்தொழும் தொண்டைமானாற்றங்கரை வேலவனே!
பாவி படுந்துயரைப் பார்த்திருக்கலாமோ ஐயா!
ஆவி கலங்குதய்யா ஆறுமுக வேலவனே.

அன்னை தந்தை நீயே அல்லால் யாருமில்லை எந்தனுக்கு
கன்னல் மொழி மாதுமையாள் கண்மணியே காத்தருள்வாய்!
எங்கும் நிறைந்தவனே ஏகபரிபூ ரணனே
திங்களணி சங்கரன்றன் தேசிகாவே வந்தருள்வாய்.

கருவிலமையாதே இனி காலன்வாதை நீக்கும் ஐயா!
பருவமிந்தவேளை ஐயா பழனிமலை ஆண்டவனே!
எத்தனை தான் சொல்லியும் இவ் ஏழைசொல் கேட்கலையோ
பக்தர்க்கு முக்தி அருள் பார்வதியாள் பாலகனே!

பிறந்து இதுவரையில் இந்தப் பேதை படுந்துயரை
சிறந்த உன்கை வேலைவிட்டு தீர்த்தடிமை கொள்ளும் ஐயா!
மறந்தே விடாதே ஐயா மால்மருகனான வனே - என்னைத்
துரத்தும் இம்மாயை தன்னைத் துரத்தி அருள் செய்யும் ஐயா!

பந்தமதை அகற்றி உன் பாதமதில் சேரவென்றால் - என்
சிந்தை ஒருநிலையில் நிற்க வரம் தாரும் ஐயா!
நிற்க வரம் தாரும் ஐயா!

*-திருமதி நாகேஸ்வரி கந்தசாமி-*

# அருள் தரும் அருமையான ஆடி மாதம்

– திரு ஆர்.வீ. கந்தசாமி அவர்கள் –

வாடிவருந்தும் மனம் தண்மையாக மழைபொழிவாய்
கோடிமார்த்தாண்ட சமசோதி வீடும் குளிர் நிலவே
பாடி வந்தேன் இன்னும் பாடுகின்றேன் எங்கள் பாக்கியத்தால்
ஆடியில் ஆடிவருவாய் சிவன்கொஞ்சும் அஞ்சுகமே.

-அகத்தியர்-

ஆடி மாதம் மங்களகரமான காரியங்களுக்கு ஒதுக்கப்பட்ட மாதமாகும். அருளை அள்ளித்தரும் அருமையான மாதமாகும். பன்னிரு மாதங்களில் ஆடி மாதத்திற்குக் கூடுதலான பல சிறப்புக்களும் பெருமைகளும் உள்ளன.

இவற்றில் பல தை மாதத்திற்கும் உண்டு. உத்தராயணம். தை மாதத்திலும் தட்சிணாயணம் ஆடி மாதத்திலும் தொடங்குகின்றன. ஆடிமாதம் அயனங்கள் மாறுகின்ற சிறப்புடைய மாதங்களில் ஒன்றாகும். அவையாவன: ஆடி அமாவாசை, ஆடிக் கிருத்திகை, ஆடிவெள்ளி, ஆடிச்சனி, ஆடிப்பெருக்கு, ஆடிச்சுவாதி, ஆடிப்பூரம், நாக சதுர்த்தி, ஸ்ரீ வரத லஷ்மி விரதம், ஹயக் கிரீவர் அவதார திருநாள் போன்றவையாகும்.

“ஆடி உழவு தேடி உழு” என்பார்கள் ஆன்றோர்கள். ஆடி உழவு உழுதால் புல் பூண்டுகள் அழியும். பயிர்கள் செழிப்பாக வளரும். “ஆடிப்பட்டம் தேடி விதை” என்பதில் பட்டம் என்பது விதைப்புக்குரிய காலம். ஆடி மாதத்தில் நெல் விதைத்தால் பயிர் பசுமை யாகவும் செழுமையாகவும் வளரும். அறுவடைக்குரிய மாதம் தை, பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள்.

ஆடி அமாவாசை:

மிகவும் மேன்மையானது. இத்தினத்தில் நாம் பித்துருக்களை நினைவு கூர்ந்து வழிபடும் விஷேட தினமாகும்.

ஆடிக் கிருத்திகை:

தனிப்பெரும் கடவுளாகிய முருகப்பெருமானுக்கு மிகவும் சிறப்புடைய தினமாகும். முருகன் சந்நிதிகளில் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன. பக்தர்கள் காவடி ஏந்தி முருகனை வழிபடுகின்றனர்.

ஆடிப்பெருக்கு:

இது ஆடித்திங்களில் முதன்முதலாக ஆறுகளில் நீர் பெருகி வருவதைக் களிப்புடன் வரவேற்று இந்துக்கள் கொண்டாடும் விழாவாகும். அன்று இனிய உணவுகளைக் கொண்டு

ஆண், பெண் குழந்தை அனைவரும் நீரிலும் கரையிலும் நின்று கொண்டு உண்டு களிப்பர். இது பழந்தமிழ் இலக்கியங்கள் கூறும் "புனலாடல்" ஆகும்.

ஆடிச்சுவாதி:

"சுவாதி" என்பது நட்சத்திரங்கள் இருபத்தேழினுள் மிகவும் சிறப்புடைய ஒன்றாகும். சுவாதி நாளில் பெய்யும் மழைத் துளிகள் கடலில் உள்ள சிப்பியின் வாயில் விழுந்தால் அது முத்தாக வடிவெடுக்கும் எனப் பெரியோர்கள் கூறுவர். இத்தகைய சிறப்பு வாய்ந்த நட்சத்திரத்தில்த்தான் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் அவரது நண்பரான சேரமான் பெருமானும் சோதி வடிவமாய் இறைவனுடன் கலந்தனர் எனப் புராணம் கூறுகிறது.

ஆடிப்பூரம்:

அம்மன் வழிபாட்டிற்கு சிறந்த நாளாகும். அம்மனின் ருது சடங்கு நாளாக இது கொண்டாடப்படுகிறது. அம்மன் தவம் செய்கின்ற நாள் என்றும் அம்மனுக்கு வளைகாப்பு நாள் என்றும் அம்மனை வழிபடுகின்றனர்.

நாகசதுர்த்தி:

ஆடி மாதம் வளர்பிறைச் சதுர்த்தியில் பெண்கள் விரதமிருந்து நாகத்தை வழிபடுவது நாக சதுர்த்தி விரதம் எனப்படும். இதனால் நாக தோஷங்கள் நீங்கி மகப்பேறு கிடைக்கும். அன்றையதினம் புற்றுக்குப் பால் வார்த்து புற்று மண்ணை அனைவரும் கவசக்காப்பாக நெற்றியில் பூசுகின்றனர். நாகசதுர்த்திக்கு அடுத்த நாள் வருவது கருட பஞ்சமி விரதம். மகளிர் விரதம் இருந்து கருடனை வழிபட்டால் மகப்பேறு கிடைக்கும். மாங்கல்ய பாக்கியம் கிடைக்கும். செல்வம் பெருகும். உடல் ஆரோக்கியமாக இருக்கும்.

ஹயக்கிரீவர்:

ஆடிப் பௌர்ணமி தெய்வ வழிபாட்டிற்குச் சிறந்த நாளாகும். ஆடிப் பௌர்ணமி அன்று ஹயக்கிரீவர் அவதரித்த தினமாகும். இவர் சகல வித்தைகட்கும் ஆதாரமானவர்.

ஸ்ரீ வரலஷ்மி விரதம்:

ஸ்ரீ வரலஷ்மி விரதம் ஆடி மாதம் மேற்கொள்ளப்படும். இத்தினத்தில்த்தான் மகாலட்சுமி பாற்கடலில் இருந்து தோன்றினாள். சுமங்கலிகள் விரதமிருந்து லட்சுமியை வழிபட்டால் சகல நற்பலன்களும் கிடைக்கின்றன.

"ஆடிப்பிறப்பிற்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே" என்று குழந்தைகள் ஆடிப்பிறப்பை எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். "ஆடிப்பிறப்பின் அன்றைக்குப் கூடிப்பனங்கட்டி கூழுங் குடிக்கலாம் - கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே" என்று குழந்தைகள் பாடுவதன்படி ஆடிப்பிறப்பின் அன்று இனிய கூழும் கொழுக்கட்டையும், முக்கிய உணவாகும். அன்றைய தினம் பித்துருக்கள் வருவதாகவும் அவர்கட்கு விருப்பமான உணவு படைத்து அவர்களை வரவேற்றலும் பல வீடுகளில் இன்றும் நடைபெற்று வருகின்றன.

எனவே ஆடிமாதம் தேடினாலும் கிடையாது என்பதை உணர்ந்து அம்மாதத்தினைப் புனிதமாகக் கொண்டாடுவோமாக.

*துன்பம் வந்தபோதும் இறைவனை மறவாதிரு.*

# சந்தம், இராகம், தாளம் அனைத்தும் நிறைந்த இசைக் கருவூலமே அருணகிரிநாதரின் திருப்புகழ்

– திரு மு.க. மாசிலாமணி அவர்கள் –

(தொடர்ச்சி...

முருகனே பரம்பொருள் என்ற கௌமார நெறியை இறுகப்பற்றிய அதிதீவிர முருக பக்தரான அருணகிரிநாதர் இந்துசமயப் பிரிவுகளான சைவம், சாக்தம், காணபத்யம், வைஷ்ணவம் போன்ற அனைத்துச் சமயப் பிரிவுகளையும் அச்சமயப் பிரிவுகளின் தெய்வங்களையும் மிக உயர்வாகக் கருதி அத் தெய்வங்களுக்கும் முருகனுக்குமுள்ள உறவு முறையினை மிக அழுத்தியுரைத்துத் தனது திருப்புகழ்ப் பாடல்களில் நிறைவாகப் பாடி உள்ளார். "சிவன் மெச்சக் காதுக்கோதிய பெருமாளே" என முருகன் குருவாகவிருந்து பிரணவ மந்திரத்தை உபதேசித்ததைக் குறிப்பிடும் அருணகிரிநாதர் "பரவை மனை மீதிலன்று ஒருபொழுது தூது சென்ற சிவனின் மைந்தன்" "சிவனுக்கு விழியொத்த புதல்வன்", "பிறைசூடும் நாயகர் நன்குமாரர்" எனச் சிவனின் மகனே முருகன் என்றும், "பார்வதி அருள் பாலா", "அபிராமியம்பிகை பயந்த வேளே", "மாதுமை தருசேயே" எனப் பார்வதியின் திருக்குமாரனே முருகன் என்றும் "கணபதிக்கிளையோனே", "ஆனைமுகற்கிளையோனே", "ஆதி கற்பவிநாயகற்கு தம்பி என்னுந் திருவே" என விநாயகனின் தம்பியே முருகன் என்றும் "நாராயணன் தன் மருகோனே", மாயவன் மருகோனே", "ரகுராமர் மருகோனே", "தேரூர் கோமான் (கிருஷ்ணன்) மருகோனே", "திருநெடுமால் மருகோனே" என விஷ்ணுவின் மருமகனே முருகன் என்றும் பல தெய்வ வழிபாட்டினால் நிகழக்கூடிய பிரிவினைகளுக்கு முடிவு கட்டும் வகையில் எல்லாக் கடவுள்களையும் உறவு முறையில் இணைத்துச் சமய சமரசத்தை வலியுறுத்திப் பாடியவர் அருணகிரிநாதர். மிகக் குறிப்பாக இந்து சமயத்திலுள்ள அறுவகைச் சமயப் பிரிவுகளில் சிவனை முழுமுதலாகக் கொண்ட சைவமும் விஷ்ணுவை முழுமுதலாகக் கொண்ட வைஷ்ணவமும் ஏனைய பிரிவுகளைக் காட்டிலும் எப்போதும் மோதிக் கொண்டவர்கள். சிவனை வழிபடுபவர்கள் திருமால் கோவிலுக்கும் வைஷ்ணவர்கள் சிவன் கோவில்களுக்கும் செல்வதில்லை. அவ்வாறான சமயப் பொறையின்மை, பகை நிலவிய தமிழ் நாட்டில் முருகன் புகழ் பாடிய அருணகிரிநாதர் "தம்பிரானே" என நிறைவுறும் மிகச் சில பாடல்களைத் தவிர ஏனைய எல்லாப் பாடல்களையும் "முருகனே" என்று நிறைவு செய்வதற்குப் பதிலாக விஷ்ணுவுக்குரிய ஒரு பெயரான "பெருமாளே" என்றே நிறைவு செய்வது ஆழ்ந்து நோக்கத்தக்கது. சமூகச் சீர் திருத்தத்தினை முழுவீச்சில் முன்னெடுத்த அருணகிரிநாதர் தன் திருப்புகழ் மூலமாகச் சமய சகிப்புத் தன்மைக்கு முக்கியத்துவம் கொடுத்துச் சமயச் சீர்திருத்தத்தினையும் முன்னெடுத்த பெரியவராகவே போற்றப்படத் தக்கவர்.

அருணகிரிநாதர் வாழ்ந்த காலம் விஜயநகரப் பேரரசுக் காலமாகையால் அவர்களாட்சியில் செல்வாக்குப் பெற்றிருந்த வடமொழியின் தாக்கம் மேலோங்கி வடமொழிச் சொற்கள் சரிக்குச் சரி தமிழ் மொழியுடன் கலந்து "மணிப்பிரவாளம்" என்றவொரு

மொழிநடையினை உருவாக்கியிருந்தது. இச் செல்வாக்குத் திருப்புகழிலும் வடமொழி எழுத்துக்களும் சொற்களும் ஏன் வசனங் களும்கூட இடம்பெற்றன. வடமொழிச் சொற் கள் திருப்புகழில் இடம்பெற்று அவை தமி ழுடன் இணைந்து சந்த இசையுடன் ஒன்றிக் கலந்து திருப்புகழில் இனிய ஓசை நயம் பெருக்கெடுத்துப் படிப்போரையும் கேட்போரை யும் முருகனில் ஒன்ற வைக்கின்றது அருண கிரிநாதரின் சில திருப்புகழ்ப் பாடல்கள். உதா ரணமாக பழநித் திருப்புகழான "நாத விந்து கலாதீ நமோ நம..." என்ற பாடலில் வரும் சரணங்கள் முழுவதுமே சமஸ்கிருதத்திலேயே அமைந்துள்ளன. இவ்வாறு வடமொழியில் பாண்டித்தியமுடையவரான அருணகிரிநாதர் வடமொழிச் சொற்களையும் சொற்றொடர்களை யும் அளவுக்கதிகமாகத் திருப்புகழில் சேர்த்து திருப்புகழிசையின் தரச் சிறப்பை வெகுவாக உயர்த்தியுள்ளார்.

வேதாகமம், உபநிஷதங்கள், புராண, இதிகாசங்கள், சைவ சித்தாந்தம் ஆகியன விளக்கும் ஆழமான சிந்தனைகளின் சாரத்தை அதியற்புதமாகத் திருப்புகழில் விளக்கியுள்ள அருணகிரிநாதர் தனது படைப்பை உள்ள முருகி ஓதி உய்திபெற வேண்டுமென்ற பெரு நோக்கிலேயே இராகம், தாளம், சந்தம் ஆகி யன நிறைந்த லயசமுத்திரமாகவே வழங்கி உள்ளார். அருணகிரிநாதர் காலத்திற்குமுன் நிலைபெற்றிருந்த இராகங்களையும் தாளங் களையும் பற்றியறிய உதவும் இசைச் சுரங்க மான திருப்புகழைத் தந்த அருணகிரிநாதர் தாம் பாடிய திருவகுப்பில் ஒரு பிரிவான பூத வேதாள வகுப்பில் தங்காலத்தில் வராளி, சிகண்டி, சீகாமரம், விபஞ்சி, கௌட, பயிரவி, லலிதை, கௌசிகம், மலகரி, படமஞ்சரி போன்ற இராகங்களும் சச்சபுட, சாசபுட, சட்பிதா, புத்திரிக, சம்பதி போன்ற தாளங்கள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். கணக்கிடமுடியாத சந்தங்களுக்கும் தாளங்களுக்கும் கருவூல மாக விளங்கும் திருப்புகழ் சங்கீத இசைத் துறையில் மிகப் பிரபல்யமானது. சிறந்த பொருள், பொருளுக்கேற்ற சந்தம், தாளச் செறிவு, இசையின்பம், லயச் சிறப்பு, ஆற் றொழுக்கனைய தொடரான கவிதை நடை என மகோன்னதமான இசை ஒன்றிற்கு அமைய வேண்டிய அனைத்து அம்சங்களும் பொதிந்து இசைத்துறையின் உச்சத்தைத் தொட்ட ஒப்பற்ற ஒரு இசைஞானக் கருவூல மாகவும் தமிழ்க் கவிதைகளில் திருப்புக ழுக்கு நிகராக எதனையும் ஒப்புவமை கூற முடியாத ஓர் பக்தி இலக்கியமாகவும் அது சிறப்புப் பெறுகின்றது. சந்தம், தாளம் ஒருசேர அமைந்த கவிதை இயற்றுவதில் ஒரு புது யுகத்தைத் தோற்றுவித்த அருணகிரிநாதர் தமிழ்க் கவிதை வரலாற்றில் எவரும் பெறாத தனிச்சிறப்புப் பெறும் புலவராவார். "முத்தமி ழரசு, நவரச நற்கவிஞர், சந்தச் செந்தமிழ்த் தலைவர், தாளச் செல்வர், வாக்கிற்கருணகிரி, திருப்புகழ் என்னுங் கவிதைக்கு ஆதிகர்த்தா" எனப் பல பெயர்களால் போற்றப்படினும் இசைத்துறையில் அருணகிரிநாதரின் மேத கைமையினை முழுமையாக அறிவதென்பது துர்லபமே. சற்றுக் கடினமான வசன நடை யில் அமைந்துள்ள திருப்புகழை மனம் ஒன்றி ஓதவேண்டுமாயின் முருகன்மீது வைராக்கிய மான பக்தியும் ஞானமும் ஒழுங்கான பயிற்சி யும் ஒருசேர வாய்க்கப்பெற்றால் மட்டுமே திருப்புகழை உணர்ந்தனுபவிக்கலாம்.

வையத்துள் வாழ்வாங்கு வாழும் வழி வகைகளை வகுத்தளித்த வள்ளுவர் நன்றி மறவாமையின் உயர்வைப் பத்துக் குறள் களில் அழுத்தந் திருத்தமாகச் சொல்லியும் ஒருவர் செய்த நன்றியைச் சாதாரண உலகி யல் வாழ்வில் மறந்து விடுவது மனிதரியல்பு. ஆனால் பேரருளார்களோ சிறு உதவியைக் கூடப் பெரிதாகப் போற்றுவர். திருப்புகழ்

ஆசிரியர் அருணகிரிநாதர்தான் உலகியலிலீடுபட்டு வாழ்க்கையில் பேரவலங்களைச் சந்தித்த நிலையில் விரக்தியின் விளிம்பிற்குச் சென்று திருவண்ணாமலைக் கோயில் கோபுரத்திலேறி உயிர்விடச் சென்றவேளை முருகனே தடுத்தாட்கொண்டு ஞான உபதேசஞ் செய்து தன்னை வாழ வைத்ததனாலேயே தான் இவ்வுலகில் வாழ்ந்து தான் பாடிய திருப்புகழ் உலகில் பரவி மனுக்குலம் ஈடேற வழிகாட்டும் என்ற உணர்வு மேலிட்ட நிலையில் முருகன் இறக்கவிடாது தடுத்து வாழ வைத்த அவ்வருட் செயலை நன்றியுணர்வோடு அதுவும் "கனவிலும் நனவிலும் மறவேனே" எனத் திருப்புகழில் இதயம் மிக நெகிழ்ந்து போற்றிப் பாடுவது ஒருவர் செய்த நன்றியினை உடனே மறந்துவிடுந் தன்மையுடைய சாதாரண மானிடர்க்கெல்லாம் நல்லதொரு படிப்பினையாகும். திருவண்ணாமலைத் தலக் கோபுரத்திலேறி விழுந்து உயிர்விட முயன்றவராகையால் அத்தலத் திருப்புகழொன்றில்,

"அருணைநகர்மிசை கருணையொடருளிய
மவுன வசனமு மிருபெரு சரணமு மறவேனே"

-திருவண்ணாமலைத் திருப்புகழ் 567-

எனச் "சும்மாவிரு சொல்லற" எனவருளிய மௌன வசனத்தையும் "முத்தைத்தரு பத்தித் திருநகை..." எனவருளிய இரு சரணமும் என முருகனின் அவ்விரு அருள் வாக்கு களையும் மறவேனெனப் பாடுகின்றார். அவ்வாறு முருகனின் ஞான உபதேசம் பெற்ற அருணகிரிநாதர் தலங்கள்தோறுஞ் சென்று கடல் மடை திறந்த வெள்ளம்போல் சந்தத் தமிழ் மழை பொழிந்தார். அவற்றின் இசை இனிமையால் திருப்புகழைப் பக்தர்கள் அற்புதமென மனம் கசிந்து ஓத அதன் சிறப்பும் அருணகிரிநாதரின் புகழும் நாட்டின் மூலை முடுக்கெல்லாம் பரவிற்று. உயிர்விட முயன்ற தன்னைத் தடுத்து என் திருப்புகழைப் பாடு என முதலடியும் எடுத்துக் கொடுத்து வாழ வைத்ததனாலேயே சந்தத் திருப்புகழைப் பாடியதனால் கிடைத்த இத்துணைச் சிறப்புக்களை நல்கிய முருகனின் கருணைத் திறத்தை வியந்து,

"பச்சிம தக்ஷண வுத்தர திக்குள
பக்தர்க ளற்புத மெனவோதுஞ்
சித்ரக வித்துவ சத்தமிகுத்த
திருப்புகழைச் சிறிதடியேனுஞ்
செப்பென வைத்துலகிற் பரவத் தெரி
சித்தவ நுக்கிரக மறவேனே"

-திருச்செங்கோட்டுத் திருப்புகழ் 392-

மனமுருகிப் பாடுகின்றார். இவ்வுயரிய நன்றி மறவாமையைத்தான்

"செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றலரிது" என்பர் வள்ளுவர்.

-செய்நன்றியறிதல்-

மனுக்குலத்தை மண்ணில் நல்ல வண்ணம் வாழ வைக்கும் உயரிய தத்துவச் சிந்தனைகளை அவற்றினை அழகாக வெளிப்படுத்தும் சந்த இசையில் ஆற்றொழுக்கான நடையில் திருப்புகழ் என்னும் அமுதசுரபியை வழங்கிய அருணகிரிநாதரின் அதியற்புதமான கவிதை நடையினை அவருக்கு முன்போ அல்லது அவருக்குப் பின்போ யாரும் அவருடைய ஆக்கத்திற்கு ஒப்பாகச் சந்தத் தமிழ்க் கவிதைகள் இயற்றவில்லை என்றே கூறலாம்.

பிறவி நோய் தீர்க்கும் மருந்து கடவுள் திருநாமமே.

உள்ளத்தினை உருக்கத்தின் உச்சிக்குக் கொண்டு செல்வதில் எவ்வாறு மணிவாசகரின் திருவாசகம் நிகரற்று விளங்குகின்றதோ அவ்வாறுதான் சந்த இசை இன்பம் நல்குவதில் அருணகிரிநாதரின் திருப்புகழ் ஒப்புயர்வற்று விளங்குகின்றது. சமயக் குரவர்களின் விக்கிரகங்கள் சிவத்தலங்களில் பிரதிஷ்டை செய்து வழிபடப்படுவதுபோல் முருகன் புகழ் பாடும் தெய்வீகக் கருவூலத்தைத் தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு அளித்த பேரருட் கவிஞரான அருணகிரிநாதரின் உருவ விக்கிரகங்கள் முருக தலங்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டுப் பக்தியுடன் வழிபடப் படுகின்றன.

(தொடரும்...

## வாசகர் உள்ளத்திலிருந்து...

தங்கள் சித்திரைமாத 220ஆவது ஞானச்சுடரில் வெளிவந்த திரு மு. கணபதிப்பிள்ளை அவர்களின் "கடவுளும் நானும்" என்ற பாடல் வரிகளை வாசிக்க வாசிக்க, எனது பல கேள்விகளுக்கு இறைவனே நேரில் வந்து பதிலளித்தது போலிருந்தது. பிரமாதம்.

எனக்கும் இப்படியான பல கேள்விகள் மனத்துள் எழும். "மண்ணிலேதான் பிறந்து மனிதர் படுந்துயரம் எண்ணியே நான் வருந்தி இதற்கென்ன காரணம்" என்று எனது கணவரிடம் அடிக்கடி கேட்பேன். "கடவுளுக்கும் வேறு வேலை இல்லை மனிதரைப் படைத்து இப்படிக் கஷ்டப்படுத்துகிறாரே" என்று. கை, கால் இல்லாமல், உறவுகளைத் தொலைத்து, உறவுகளைப் பிரிந்து, நாட்டுப் பிரச்சினையின் வேதனைக்கு முடிவு இல்லாமல், வெள்ள அனர்த்தம், மண்சரிவு, பசி, பட்டினி அப்பப்பா எவ்வளவு கஷ்டங்கள், மனவேதனைகள். இதற்கு மத்தியில் இப்படியொரு வாழ்வு! இப்படியான வாழ்க்கையை நாம் கேட்டோமா? எங்களைப் படைக்கும்படி கேட்டோமா! தானே படைத்துவிட்டுக் காக்க வேண்டியவர், இவ்வாறு கஷ்டங்களை அளிக்கிறாரே! அவருக்குச் சரியாக நிர்வாகம் பண்ணத் தெரியாது என்றெல்லாம் எண்ணுவதும் உண்டு.

எனது கேள்விகளுக்கு அழகு தமிழில் திரு மூனாக்கானா அவர்கள் தந்த விடை என் மனதைத் தொட்டது. இதற்கு முதற்கண் எனது வாழ்த்துக்களும் நன்றியும் உரித்தாகுக. என் போலவே பலருக்கும் இப்பதில் நல்ல விளக்கத்தைக் கொடுத்திருக்கும்.

இறைவன் தான் படைத்த உயிர்களுக்கு நல்லதைத்தான் செய்வார். இருந்தாலும் மனித மனமல்லவா? இப்படியான கேள்விகள் எழத்தான் செய்யும். ஆம்! ஐயாவின் கூற்றுப்படி நாம் இந்த மண்ணில் நல்ல வண்ணம் வாழ இறைவன் புத்தர், யேசு, ரமணமகரிஷி, யோகர் சுவாமிகள் போன்ற மகான்களைத் தந்தார். அவர்கள் காட்டிய வழிப்படி வாழ! வாழ்கின்றோமா? பகவத்கீதை, குர்ஆன், பைபிள், திருக்குறள் போன்ற ஞான நூல்களைத் தந்தார். அதைத்தான் கடைப்பிடிக்கின்றோமா! இறைவன் எமக்களித்த இயற்கையின் பெருமையை உணர்ந்து வாழ்கின்றோமா! அதுவும் இல்லை. நாகரீக வலையில் அகப்பட்டு மெய்ஞ்ஞானத்தைப் புறந்தள்ளி, விஞ்ஞான உலகில் தடம்பதித்து இனிய வாழ்க்கையையே கேள்விக் குறியாக்குகின்றோம். இதனால்த்தான் எமக்கு இத்தனை சோதனைகளும், வேதனைகளும். பின் ஏன் நாம் இறைவனை நோக வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டேன். எனவே திரு மு. கணபதிப்பிள்ளை அவர்களின் கூற்றுப்படி நான்தான் இறைவனிடம் மன்னிப்புக்கோர வேண்டும். தங்களுக்கு மீண்டும் எனது நன்றிகள்.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்ற இந்தக் குறளை மனத்தில் ஆழப்பதித்து, வள்ளுவரின் குறள்வழி வாழ்ந்தாலே நடப்பனவெல்லாம் நன்றாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கும் என்பதையும் மனத்திற் கொள்வோமாக!

எங்களுக்கு நல்ல விஷயங்களைத் தந்து நல்வாழ்வு வாழ்வதற்கு வழிகாட்டும் ஞானச்சுடருக்கும் எனது நன்றிகள்.

-திருமதி இந்திரா திருநீலகண்டன்-

*கற்காமல் இருப்பதைவிட பிறக்காமல் இருப்பதே நல்லது.*

# மழலைகளின் பெயர்

– திரு முருகவே பரமநாதன் அவர்கள் –

மழலைகள்- குழந்தைகள். சைவம்சார் சமுகத்தினர் வாழ்விற் குழந்தைச் செல்வங்களோடு தொடர்பான இருபத்துநான்கு கருமங்கள் நடைமுறையில் உள. அவற்றில் ஒன்றுதான் பிள்ளைகளுக்குப் பெயர் வைத்தல். நம் மூதாதையர் மொழி சார்பான, சைவநெறி, சமூகம் சம்பந்தமான சிறந்த பெயர்களை வைப்பதிற் கரிசனையாய் இருந்தனர். அப்பெயர்களெல்லாமே சந்ததி சந்ததியாகப் புழக்கத்தில் இருந்தன. அப்படி நாமகரணம் செய்வதாற் சந்ததி பெருகித் தொடர்ந்தது. காலப்போக்கில் அது அமுலாகவில்லை. எது எப்படியாயினும் பிள்ளைகளுக்குப் பெயர் வைப்பதில் பெற்றோரும், மற்றோரும் வெகு சிரத்தை காட்டினர். தெய்வப் பெயர்களைப் பிள்ளைகளுக்குச் சூட்டுவதால் வீட்டிலும் வெளியிலும் அப்பெயர்கள் பிரபலம் ஆயின. “சிவமயம்” ஒரு மங்களமான தெய்வீகப் பெயர். எனவே இப்பெயரை வைப்பதால் எம்மையறியாமலே அந்நாமம் எம் நாவிற் தவழுமன்றோ. சிவமயம் மங்களகரமானது. சிவா, சிவம் என்றும் சுருக்கமாகக் கூப்பிடலாம் அன்றோ. இவ்வண்ணமே பெண்குழந்தைக்கு, தெய்வநாயகி, தெய்வமலர் எனப் பெயரிட்டு வீட்டிலே தெய்வம், தெய்வம் என்று கூப்பிட்டால், இறைநாமம் நம்மோடு எந்நேரமும் பேசிக்கொண்டே இருக்கும். இந்த அடிப்படையை நன்கு உணர்ந்த பெரியாழ்வார் (கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு) அவர்கள் உங்கள் குழந்தைச் செல்வங்கட்கு எம்பெருமான், எம்பெருமாட்டி திருநாமங்களை வையுங்கள். பகவானின் பெயர்களைச் சூட்டுவதால் பெரும் நன்மைகள் உண்டு. நீங்கள் இதைக் காரியப்படுத்தினால் எம்பெருமானே தன்னை அழைப்பதாகக் கருதுவான். அதனாற் பெற்றோர்களும், பிள்ளைகளும் ஆத்மீக வயப்படுவர். பிள்ளையும் இறை நாமமான தன் பெயரை எழுத எழுத ஒரு புது அனுபவத்தைப் பெறுவான். எனவே பகவானின் திருநாமங்களான, கேசவன், ஸ்ரீதரன், நாராயணன், மாதவன், கோவிந்தன், முகில்வண்ணன் ஆகிய பெயர்களை, குழந்தைகளுக்கு இட்டால் வைகுந்தம் கிட்டும் என்றும் ஆழ்வார் அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறார். இந்த அனுபவ நிலையை விஷ்ணு சித்தர் தன் திருமொழியிலேயே பாசுரங்களாகத் தீட்டியுள்ளார்.

ஆசையினால் அங்கவத்தப் பேரிடும் ஆதர்காள்
கேசவன் பேரிட்டு நீங்கள் தேனித்திருமினோ.

-பெரியாழ்வார் திருமொழி 4-6.

தேனித்தல்- தேன்போல அனுபவித்தல்.

செங்க ணெடுமால் சிரீதரா என்ற ழைத்தக்கால்
நங்கைகாள்! நாராயணன் தம்மன்னை நரகம்புகாள்.

-மேலது 2.

மானிட சாதியில் தோன்றிற் றோர் மானிட சாதியை
மானிட சாதியின் பேரிட் டால் மறுமைக்கில்லை
மானுட மாதவா கோவிந்தா வென்றழைத்தக்கால்
நானுடை நாரணன் தம் அன்னை நரகம் புகாள்.

-மேலது 4.

*விவேகம் வீரத்தின் சிறப்பான பகுதி.*

மலமுடை ஊத் தையில் தோன்றிற்றோ மல ஊத்தையை
மலமுடை ஊத்தையின் பேரிட்டால் மறுமைக் கில்லை.

-மேலது 5.

நாடும் நகரும் அறிய மானிடர் பேரிட்டு கூடியழுங்கிக்
குழியில் வீழ்ந்து வழுக்காரே
சாடிறப் பாய்ந்த தலைவா தாமோதரா என்று
நாடுமின் நாரணன் தம் அன்னை நரகம் புகாள்.

-மேலது 6.

மண்ணில் பிறந்து மண்ணாகும் மானிடப் பேரிட்டு அங்கு
எண்ண மொன் றின்றி இருக்கு மேழை மானிடர்காள்
கண்ணுக் கினிய கருமுகில் வண்ணன் நாமமே
நண்ணுமின் நாரணன் தம் அன்னை நரகம் புகாள்.

-மேலது 7.

நம்பிநம்பி யென்று நாட்டு மானிடப் பெயரிட்டால்
நம்பும் மெல் லாம் நாலு நாளில் பூங்கிப் போம்
செம்பெருந் தாமரைக் கண்ணனின் பேரிட் டழைத்தக்கால்
நம்பிகாள் நம் அன்னை நரகம் புகாள்.

-மேலது 8.

இராமதாசர் இராம நாமத்தின் பெருமையை நமக்குணர்த்தி ராமநாம பஜனை செய்யும்படி பணித்தார். நாராயணாவின் ராவும் உமாவின் மாவும் இணைந்ததே ராம நாமம் இதன் செவ்வியைக் கம்பநாடார் வாலி வாக்கில் எடுத்துப் பேசுகின்றார்.

நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
சென்மமும் மரணமும் இன்றி தீருமே
இம்மையே இராம வென்றிரண் டெழுத்தினால்.

-வாலி வதை படலம்.

இவ்வண்ணமே பிரபு பாத தேவரும் ஹரே கிருஷ்ணா, ஹரே ராமா என்ற இயக்கத்தை உருவாக்கினார். அ்.து இன்று மேலைநாட்டவராற் பக்தி இயக்கமாகக் கொண்டாடப்படுகின்றது.

-அனுபவம்.

ஆழ்வார்கள் எட்டெழுத்து மந்திரத்தின் பெருமையைப் பாசுரங்களிற் பாசியுள்ளனர்.

மஞ்சுலாஞ்சோலை வண்டறை மாநீர்
மங்கையார் கலி கன்றி
செஞ் சொலா லெடுத்த தெய்வநன் மாலை
இவை கொண்டு சிக்கெனத் தொண்டீர்
துஞ்சம் போதழைமின் துயர்வரில் நினைமின்
துயரிலீர் சொல்லினும் நன்றாம்

*அறச்செயல்கள் செய்வதன்மூலம் ஆண்டவனை அடையலாம்.*

நஞ்சு தான் கண்டீர் நம் முடை வினைக்கு
நாராய ணா வென்னும் நாமம்.

-பெரிய திருமொழி 1-10.

கலிகன்றி- திருமங்கை ஆழ்வார், துஞ்சும்போது நித்திரைக்குப் போம்போது.

ஆக எம்மை ஆற்றுப்படுத்தும் அருளாளர்களின் வழி நாம் செயற்படுவோம்.

இவ்வண்ணமே வேதசாரமான திருமுறைகளிலும் சிவநாமத்தின் மகத்துவம் பேசப்பட்டிருப்பதை நாம் உன்னிப்பாய் மனதிற் கொள்ளவேண்டும்.

என்னை நன்கு இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே எனப் பாடிய திருமூல நாயனாரின் திருவாக்கைப் பார்ப்போம்.

சிவசிவ என்கிலர் தீவினையாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே.

-திருமந்திரம் 2716.

முற்பிறப்பில் செய்த தீவினையின் காரணமே சிவசிவ என்று ஓதாமல் இருக்கின்றனர். எத்தகைய தீவினையாளரும் சிவசிவ எனச் சொல்வாராயின், தீயவினைகள் யாவும் கெட்டுப் போகும். மேலும் அவர்கள் தேவ உடல் பெற்று விளங்குவர். சிவசிவ என்று கணிப்பதால் சிவகதி உண்டாகும். இவ்வண்ணமே நால்வரும் ஐந்தெழுத்து மந்திரத்தின் உயர்வைப் பாடியுள்ளனர்.

அல்லல் கெடுப்பன அஞ்செழுத்துமே.

-சம்பந்தர்.

நாதன் நாமம் நமச்சிவாயவே.

-சம்பந்தர்.

நாவினுக்கு அருங்கலம் நமச்சிவாயவே

-அப்பர்.

நற்றவா உனை நான் மறக்கினும்
சொல்லு நா நமச்சிவாய்வே

-சுந்தரர்.

போற்றி யோநமச்சிவாய சயசய
போற்றி போற்றி.

-மாணிக்கவாசகர்.

நம் முன்னோர்கள் நமசிவாயம் என்று பெயர் வைத்து என்ன கெட்டுப் போனார்களா? சிவனெனும் நாமம் தனக்கேயுரியவன் சிவபிரான். வாழையடி வாழையாகப் பயன்படுத்திய பெயர்களைப் பேணுவோம். நவீனமயப்படுத்தி, எம்சமயம், மொழி, சமூகம், நாடு இவற்றின் ஆளுமைகள் மாறாமல் மங்காமல் நல்ல பெயர்களை நம் குழந்தைகளுக்குச் சூட்டுவோம். இப்போ நல்ல நல்ல பெயர்கள் மக்களாற் போற்றப்படுகிறது. பொருள் பொதிந்த பெயர்களாக, தமிழ் மணம் வீசவேண்டும். எளிதாய்க் கூப்பிடக்கூடியதாய் அமைதல் நன்று. புதுப்பெயர் வைக்கப்போய் பிள்ளையார் பிடிக்கப் போய்க் குரங்காகக்கூடாது அன்றோ. மங்களகரமான

பெயர் வைப்போம். எண் சோதிடத்துக்காகப் பெயரை அலங்கோலப் படுத்தக்கூடாது. முன்னும் பின்னும் இன்றிய பெயர்கள் அமைவது நன்றா தீதா எனச் சிந்திப்போம். மேனன் என்று பெயர் வைத்திருக்கிறோம். கேரளா மக்களில் மேனன் ஒரு இனம். உதாரணம்: கிருஷ்ணமேனன் வட பாரதத்தில் ஒரு சிறந்த எழுத்தாளன் பிரேம் சந்த். இதையும் இதுபோன்ற பெயர்களையும் வைப்பது உகந்ததா எனச் சிந்திப்போம். ஜெனத், ப்ரசாந்த், கார்த்திக், அரவிந்த், பரவிந்த், விவேக், ப்ரேம்நாத், ப்ரேம்சாந்த், பத்திரிநாத் கோபிநாத் தமிழ் மணம் கமழவில்லை. சொல்லின் முதலில் மெய்யெழுத்து வராது. பெயரின் முடிவின் த்,ந் என வருவது தமிழ் மரபைச் சீரழிப்பதாகும்.

முஸ்லீம்கள், கிறீத்தவர், பௌத்தர் தம் பாரம்பரியங்களை இழக்காமல் பெயர் வைப்பர். நாமோ தடம் மாறி நடக்கிறோம். சிந்தித்துச் செயற்படுவோம்.

நாம் தமிழர் என்ற அடையாளம்
பெயர்களிலும் ஜொலிக்கட்டும்.

## வாமன ரூபனென வாழ்த்திச் சரணடைவோம்

ஆற்றங்கரையானை ஆறுமுக வேலவனை
நூற்றெட்டு முறை நாம் வணங்குவோமே - ஏற்றமுறு
சைவகலை பண்பான மோகனதாஸ் சுவாமியருள்
தெய்வ அருட் கொடையாம் ஞானச்சுடர் மலரே.

அன்னைபோல் அரவணைத்து ஆதரவு நல்கிச்
சின்னம் பல சூட்டியருள் சிவஞானச் சுடர்
சந்நிதியான் ஆச்சிரம மோகனதாஸ் சுவாமி தரும்
கன்னல் விழிச் சுடராம் கலை ஞானச்சுடர் நாடு.

ஆச்சிரம பண்பாட்டுப் பேரவையின் சேவைதனில்
ஆச்சரியமான பணி ஞானச்சுடர் வெளியீடு
ஆச்சரியம் மிக்க பணி அன்னதானம் இசை வேள்வி
ஆச்சரிய மருத்துவமும் ஆதரவற்றோர்க்குதவு கை.

பாலகரின் கல்வியொடு பல்வகை உபகரணம்
போனகமும் பகிர்ந் தளித்துப் போற்றுதலால்
மோகனதாஸ் சுவாமிகளே தந்தையென
வாமன ரூபனென வாழ்த்திச் சரணடைவோம்.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டின்
முன்னவராய் விளங்கும் மோகனதாஸ் சுவாமிகளின்
சந்நிதியான் அருள் தரவே நல்ல பணி பெருகும்
மன்னவனாய் வல்லவனாய் வேலவன் துணைதர வாழ்வீர்.

"வெற்றிவேல் போற்றி"

-அ. சுப்பிரமணியம்-

*திறமையும் நம்பிக்கையும் வெல்லமுடியாத படை.*

(தொடர்ச்சி...

# உமாபதி சிவம் அருளிய திருவருட்பயன்



## (விரிவான பொருளுரையும் தெளிவுரையும்)

முனைவர் ஆ. ஆனந்தராசன்

### 43. குருவின் நிலையை உலகர் உணராமை

அருளா வகையால் அருள் புரிய வந்த
பொருளா அறியா புவி.

**பொருள்:**

சிவமாகிய முதற்பொருளே நேர் நின்று அருளாமல் குரு வடிவில் மறைந்து நின்று அருள் செய்ய நினைந்து இவ்வாறு வந்திருக்கிறது என்பதை உலகத்தார் உணர மாட்டார்கள்.

**சொற்பொருள்:**

அருளாவகையால் அருள்புரிய- நேரே வந்து அருளாமல், குருவடிவில் மறைந்து நின்று அருள் புரிதற்கு, வந்த- வந்திருக்கின்ற, பொருளா- சிவமாகிய முதற்பொருள் என்று, புவி- உலகத்தார், அறியா- ஞான குருவை உணர மாட்டார்கள்.

**விளக்கம்:**

உண்மையை உணரும் பக்குவம் இல்லாத உலக மக்கள் ஞானாசிரியரைத் தம்மில் ஒருவராகவே கண்டு போவர். ஞானாசிரியர் சிவமே என்பது பக்குவம் உடைய மாணாக்கர்க்கே விளங்குவதாகும். இதனை விளக்கும் நிகழ்ச்சியொன்றை இங்கே குறிப்பிடலாம்.

துறையூரில் ஒரு சிவாச்சாரியார் சிறந்து விளங்கினார். சகலாகம பண்டிதர் என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றிருந்தார். மெய்கண்டார் ஆகிய ஞானக் குழந்தை பிறப்பதற்கு அவர் தம் தந்தையாருக்கு வழியருளிச் செய்தவர் இவரேயாவர்.

அக்குழந்தை மூன்றாண்டு நிரம்பாத அப்பிள்ளைப் பருவத்திலேயே இறையனுபவம் கைவரப்பெற்று ஞானத்தை உபதேசித்து வருவது பற்றிக் கேள்விப்பட்டார் சகலாகம பண்டிதர். அக் குழந்தையைக் காண விரும்பித் திருவெண்ணெய் நல்லூருக்குச் சென்றார். அங்குள்ளோர் அவரைச் சிறப்பாக வரவேற்று, மெய்கண்டார் ஆகிய அக்குழந்தை இருக்குமிடத்திற்கு அவரை அழைத்துச் சென்றனர்.

மெய்கண்டார் தம் மாணவர்களுக்கு ஆணவ மலம் பற்றி விளக்கிக்கொண்டிருந்தார். அந்நிலையில் அவர் முன்னே போய் நின்றார் சகலாகம பண்டிதர். தம்மை அக்குழந்தை

*கண்ணீர் என்பது துயரத்தின் மௌனமொழி.*

வந்து வணங்கும் என்று எதிர்பார்த்தார். ஆனால், அவ்வாறு நிகழவில்லை. அதனால் அவர் உள்ளத்தில் சிறிது வருத்தம் உண்டாயிற்று. அத்தோடு தம்மைவிட அக்குழந்தைக்கு என்ன தெரியும் என்ற எண்ணமும் எழுந்தது.

அவர் மெய்கண்ட தேவரைப் பார்த்து ஆணவ மலத்தின் இயல்பு யாது? எனக் கேட்டார். மெய்கண்டார் மறுமொழி ஏதும் கூறவில்லை. அவரை அடிமுதல் முடிவரை ஏற இறங்க நோக்கித் தமது வலக்கைச் சுட்டுவிரலால் அவரையே சுட்டிக் காட்டினார்.

மெய்கண்ட தேவரது அருள்நோக்கத்தால் சகலாகம பண்டிதரிடமிருந்த ஆணவ மலம் அடியோடு அகன்றது. சிவனே குழந்தை வடிவில் ஞான குருவாய் எழுந்தருளியிருப்பதை உணராதபடி செய்தது தம்மிடமிருந்த மலச் செருக்கே என்று உணர்ந்தார். மெய்கண்டாரை "கண்ணுதலும் கண்டக் கறையும் கரந்தருளி மண்ணிடை" வந்த சிவனாகவே தெளிந்து, அவரது திருவடிகளில் வீழ்ந்து இறைஞ்சினார். மெய்கண்ட தேவர் அவரை ஆட்கொண்டு "அருள்நந்தி" என்னும் தீக்கைப் பெயர் சூட்டித் தம் மாணாக்கருள் அவரைத் தலைவராகக் கொண்டருளினார்.

மலம் நீங்கிய பக்குவர்க்கே ஞானாசிரியர் நிலை உள்ளவாறு விளங்கும் என்பதை இந்நிகழ்ச்சி வாயிலாக அறியலாம். உலகத்தார் உணராமற் போவதற்குக் காரணம், அவரிட முள்ள பக்குவமின்மையே என்பது சொல்லாமலே விளங்கும். இது பற்றி அடுத்த செய்யுளில் எடுத்து விளக்குவார் ஆசிரியர்.

### 44. உலகர் உணராமைக்குக் காரணம்

பொய் இருண்ட சிந்தைப் பொறியிலார் போதமாம்
மெய் இரண்டும் காணார் மிக.

**பொருள்:**

ஆணவ மலமறைப்பினால் இருண்ட அறிவினையுடைய, பக்குவம் இல்லாத மாந்தர் ஞானமாகிய அருளையும் அறியார். அந்த அருளின் வடிவாகிய ஞானகுருவின் நிலையையும் அறியார்.

**சொற்பொருள்:**

பொய்- ஆணவமல மறைப்பினால், இருண்ட- அறியாமையே வடிவான, சிந்தை- அறிவினை உடையவராகிய, பொறியிலார்- திருவருளைப் பெறும் பக்குவம் இல்லாதவராகிய உலகர், போதம்- ஞானம் ஆகிய அருளும், ஆம்மெய்- அந்த அருள் கொண்டதாகிய குருவடிவும், இரண்டும்- ஆகிய இவ்விரண்டையும், மிகக் காணார்- முற்றிலும் அறிய மாட்டார்.

**விளக்கம்:**

பொய்:

ஆணவ மலத்தைப் பொய் என்ற சொல்லால் குறித்தார் ஆசிரியர். ஆணவ மலம் தன்னைப் பற்றியிருக்கிறது என்பதை உயிர்கள் சிறிதும் அறிய மாட்டா. அம் மலம்

*இழந்த நேரத்தை மீண்டும் கண்டெடுக்க முடியாது.*

உயிருக்குப் புலனாகாமல் உயிரின் கண் இல்லை என்று சொல்லும்படி பொய்ப் பொருள்போல் நிற்றலின் அதனைப் பொய் என்றார்.

**பொறியிலார்:**

பொறி என்பதற்கு, இவ்விடத்தில் பக்குவம் என்று பொருள் கூறப்பட்டது. திருவருளைப் பெறும் பக்குவம் இல்லாதவர் பொறியிலார் எனப்பட்டார்.

அவர்கள் அருளும் அருள் கொண்டதாகிய குரு வடிவும் ஆகிய இரண்டினையும் அறிய மாட்டார். அதற்குக் காரணம் ஆணவ மலமேயாகும். ஆணவமலம் உடையார்க்கு உண்மை விளங்காது.

**அருளும் குருவடிவும்:**

"போதமாம் மெய்யிரண்டும்" என்ற தொடரை போதம், ஆம் மெய் ஆகிய இரண்டும் எனப் பிரித்து வைத்துப் பொருள் கொள்ள வேண்டும். போதம் என்பது ஞானம். இங்கு இறைவனது ஞானமாகிய அருளைக் குறித்தது. ஆம் மெய் என்பது அந்த அருள் கொண்டதாகிய குருவடிவு எனப் பொருள்படும்.

சிவனே குரு வடிவம் கொள்வான் என்று இதுவரை கூறிவந்து இங்கு அருளே குருவடிவம் கொள்கிறது என்று கூறுவது ஏன்? என்று கேட்கலாம். சிவனும் அருளும் தம்மில் வேறல்ல என்பதை உணர்ந்தால் இவ்வினா எழாது. குருவாய் நின்று உணர்த்துவது சிவனே என்றாலும், குருவாய் நின்று உணர்த்துவது அருளே என்றாலும் பொருள் ஒன்றேதான்.

மலமாசு தீர்ந்து வாழும் தூய ஆன்மா ஆனவரின் அறிவில் இறைவனது அறிவாகிய அருள் விளங்கி நின்று அவ்வான்ம அறிவைத் தன் வயப்படுத்துகிறது. தன் வயப்படுத்தலுக்கு ஓர் எடுத்துக்காட்டு கூறலாம். உலையில் இட்ட இரும்பை உலைத் தீ தன்னுள் அடக்கி அவ்விரும்பினிடத்தில் தீயே விளங்கி நிற்கிறது. இரும்பின் தன்மை கீழ்ப்பட்டு அடங்க, தீயின் தன்மையே மேம்பட்டு நிற்கிறது. இரும்பின் தன்மை என்பதின்றித் தீயே உள்ளது என்று சொல்லும்படி அவ்விரும்பைத் தீ தன் வயப்படுத்தி உள்ளது.

அதுபோல இறைஞானமாகிய திருவருள் சுத்தான்மாவின் அறிவைத் தன்னுட்படுத்தி தானேயாய் விளங்கி நிற்கிறது.

தீயாய் நின்ற இரும்பு சுடுதலைச் செய்கிறது. இரும்பா அத்தொழிலைச் செய்கிறது? இரும்பை வயப்படுத்தி நின்ற தீயின் தொழில் அல்லவா அது? அதுபோல சுத்தான்மாவாகிய குருநாதர் ஞானத்தை உணர்த்துகிறார் என்றால், அச்செயல் அவர் செயலன்று. அவரறிவைத் தன்னுட்படுத்தி மேம்பட்டு நிற்பதாகிய அருள் செய்கின்ற செயல் அது. இதனால் அருள் குருவாய் நின்று உணர்த்துமாறு இனிது விளங்கும்.

இது பற்றியே ஞானமாகிய அருளும், அந்த அருள் கொண்டதாகிய குருவடிவும் ஆகிய இரண்டையும் "போதம் ஆம் மெய் இரண்டும்" எனக் குறிப்பிட்டார் ஆசிரியர்.

(தொடரும்...

*செல்வம் வாழ்க்கையின் லட்சியமன்று. ஒரு கருவி மட்டுமே.*

# இன்றைய நடன வளர்ச்சிக்கு அடித்தளம் ஆலயங்களே

– திருமதி குணேஸ்வரி ரகுநாதன் அவர்கள் –

கலை என்பது "கலா" என்ற அடிச் சொல்லில் இருந்து பிறந்தது. இடையறாது வளர்ந்து செல்வது கலை ஆகும். இது உணர்வின் வெளிப்பாடு ஆகும். ரவீந்திரநாத் தாகூர் கூறும்போது கலை கருத்தின் உறைவிடம், அழகின் பிறப்பிடம், இன்பம் அதன் பயன் என்கின்றார். Dr ஆனந்தகுமாரசாமி கூறும்போது சமய அனுபவமும் கலை அனுபவமும் ஒரே அனுபவத்திற்குக் கொடுக்கப்பட்ட இரட்டைப் பெயர்கள் என்கிறார்.

கலைகள் இறைவனிடம் இருந்துதான் பிறந்தன. இதனைப் பரதமுனிவரின் நாட்டிய சாஸ்திரம் பின்வருமாறு பதிவு செய்கிறது. "மக்கள் காமக்குரோதங்களுக்கு உட்பட்டு பொறாமை, கோபம் இவற்றால் பீடிக்கப்பட்டு தங்கள் இன்பங்கள் எல்லாம் துன்பங்களோடு கலக்கப்பட்டவராயினர். இவ்வேளை உலக பாலகர்கள் தானவர், காந்தர்வர், யக்சர், அரக்கர், நாகர், தேவர்கள் ஆகியோர் இந்திரனைத் தம் தலைவராகக் கொண்டு பிரமனை அடைந்து அவரை நோக்கி, ஐயனே எங்கள் பொழுது போக்கிற்காகக் கேட்பதும் பார்ப்பதுமான ஒன்றை ஆக்கித் தருதல் வேண்டும். புதிய வேதத்தைப் படைத்தருள வேண்டும் என விண்ணப்பித்தனர். இதனை ஏற்ற பிரமன் வேதங்களில் இருந்து சாராம்சங்களை எடுத்து 5ஆவது வேதமாக நாட்டிய வேதத்தை அருளினார். இந்நாட்டிய வேதத்தை பிரமனிடம் இருந்து பரத முனிவர் கற்றுக்கொண்டு அதைப் பிரயோகிக்கும் வகையை மக்களுக்கு உப தேசித்தார்' என்ற கூற்றிலிருந்து கலைகள் இறைவனிடத்தில் இருந்துதான் தோற்றம் பெற்றது என்பது புலனாகின்றது. இவ்வாறு தோற்றம் பெற்ற கலைகள் தெய்வீகத்தன்மை வாய்ந்தன. தொன்மைக் காலத்திலிருந்தே கட்டடம், சிற்பம், ஓவியம், இசை, நடனம் போன்ற நுண்கலைகள் ஆலயங்களின் அரவணைப்பிலிருந்தே வளர்த்தெடுக்கப்பட்டு வந்துள்ளன. அத்தோடு கலைகளிற்கு இடையே நெருங்கிய தொடர்பும் காணப்படுகின்றன. இதனை விஷ்ணு தர்மேந்திர புராணம் வஜ்ர என்ற அரசனுக்கும், மார்க்கண்டேய என்ற முனிவனுக்கும் இடையில் நிகழ்ந்த சம்பாசனை ஒன்றில் விளக்கியுள்ளது.

கலைகளினூடாக இறைவனைக் காண முடியும். கலை வடிவினனாய், கலைப்பிரியனாய், கலை ஆதரவாளனாய் விளங்கும் இறைவனை வழிபாடு செய்யும் முறைகளில் கலைகள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. ஆலயக் கிரியைகளில் சோடச உபசாரங்களில் 14ஆவது உபசாரமாகக் கீதம், வாத்தியமும் 15ஆவது உபசாரமாக நிருத்திய உபசாரமும் இடம்பெறுகின்றன. இறைவனை மலர், நைவேத்தியம் கொண்டு வழிபடுவதிலும் பார்க்க நிருத்த தானமே சிறந்தது என விஷ்ணு தர்மேந்திர புராணம் கூறுகின்றது.

அந்த வகையில் நடனக்கலை ஆலயங்களின் ஊடாக வளர்ந்ததற்கான ஆதாரங்களில் சிலவற்றை இக்கட்டுரை பிரதிபலிக்கின்றது. காலத்தால் முந்திய சிந்துவெளி, வேத காலங்களில் வெண்கலத்தினாலான நடனமாதுவின் சிலையும், உஷை நடனம் ஆடிய பாடல்களும் காணப்படுகின்றன. புராணங்களில் ஊர்வசி, திலோத்தமை, மேனகை,

ரம்பை ஆகிய ஆடல் அணங்குகள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. காளிதாசன் எழுதிய மேகதூதத்தில் உஜ்ஜனியில் உள்ள மகாகாளி கோயிலில் மாலை நேர வணக்கத்தின்போது நடனமகளிர் கையில் சாமரை கொண்டு ஆடும் ஆடல்பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

சங்க, சங்கமருவிய காலத்தில் நடனம், கூத்து, ஆடல் போன்ற சொற்களால் அழைக்கப்பட்டுள்ளது. மாதவி ஆடிய நடனங்கள் சமயத்தோடு தொடர்புடையவையாக இருந்துள்ளது. பல்லவர் காலத்தில் நடனக்கலை சிறப்புறத் தொடங்கியது எனலாம். பல்லவர் காலத்து ஆலய ஓவியங்களில் நடனம் காட்சிப்படுத்தப்பட்டது. சித்தன்ன வாசல் ஓவியம் ஒன்றில் நடனமாதர் ஓவியமும் அடங்கும். மாமல்லபுர ஆலயத்தில் சிவன் தனது நடன அசைவுகளைத் தண்டு முனிவருக்குப் பயிற்றும் கோலத்திலும், பரதருக்குத் தாண்டவம் போதிக்கும் கோலத்திலும் சிற்ப வடிவம் காணப்படுகிறது.

நாயன்மார்கள், ஆழ்வார்களது பாடல்களில் ஆலயங்களில் நடனம் நடைபெற்றுள்ள மைக்கு ஆதாரம் இருக்கின்றது.

"வலம் வந்து மடவர்கள் நடமாட முழவதிர மழையென்றஞ்சி
சிலமந்தி அலமந்து மரமேறி முகில் பார்க்கும் திருவையாறே"

என்றும்,

"தேனார் மொழியார் திளைத்தங்காடித் திகழும்"

என்று சம்பந்தரும்,

"முழவதிர நடமாதர் ஆடும் பதி"

எனச் சுந்தரரும் பாடியுள்ளமை பல்லவர்காலத்தில் நடனம் இடம்பெற்றமைக்கு ஆதாரமாய் அமைகின்றன.

சோழர் காலத்தில் நடனம் ஆலயங்களில் மேலும் வளர்க்கப்பட்டமைக்கான ஆதாரம் உள்ளது. முதலாம் இராஜராஜன் சிறந்த சிவபக்தன். கலைப்பிரியன். இசை, நடன, நாடக வளர்ச்சிக்கு அளப்பரிய தொண்டுகள் செய்துள்ளான். தஞ்சைப் பெருங்கோயிலில் 108 கரணங்களில் 81 கரணங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இவை ஆலயங்களில் மிளிர்ந்த மிளிர்கின்ற நடனக் கலையையே காட்டுகின்றது. சோழர் காலத்தில் கோயிற் திருவிழாக் காலங்களின்போது நடனம் இடம்பெற்றுள்ளது. நாட்டிய மகளிர் பாராட்டுப் பெற்றுள்ளனர். "பூங்கோயில் நாடகத் தலைக்கோலி, மும்முடிச் சோழத் தலைக்கோலி, வீராபரணத் தலைக்கோலி" என்னும் பட்டங்கள் இக்காலத்தில் வழங்கப்பட்டுள்ளன.

இக்காலத்தில் நடனமாடுவதற்கென நடன மண்டபம் கட்டப்பட்டிருந்தது. சிதம்பரம் கோயிலில் கரண சிற்பத்துடன் அவற்றை வாசிக்கும் நாட்டிய சாஸ்திர செய்யுட்களும் இடம்பெற்றுள்ளன.

நாயக்கர் காலத்தில் மராட்டிய மன்னர்கள் கலை வளர்ச்சிக்கு ஓரளவு அக்கறை காட்டியுள்ளனர். தேவதாசிகள் பூசையின்போது இறைவன் சந்நிதியில் நடனமாடியதோடு இறைவனுக்கு உணவும் ஊட்டினர் என்று சொல்லப்படுகின்றது.

இந்திய வரலாற்றைப்போல் ஈழத்து வரலாற்றிலும் ஆலயங்களில் நடனக் கலை நடைபெற்றுள்ளமைக்குச் சில சான்றுகள் பதிவாகியுள்ளன.

யாழ்ப்பாண இராச்சியம் இசையை நன்கு வளர்த்ததுபோல் நாட்டியத்தை வளர்த் தமைக்கு வையாபாடல் சான்றாகின்றது. அதில்,

*ஒருமித்த வழிபாடு நிறைவான பலனைத் தரும்.*

"ஆடும் மாதர் வலம் வர
நச்சு விழி நாட்டியம் செய்வோர்"

என்று நடனம் செய்வோர் பற்றி கூறப்பட்டுள்ளது. ஈழத்தில் எழுந்த கைலாய மாலை என்ற நூலில்

"ஆடுவார் ஆர்காளி கொண்டார்த் தொழுவார்"

என்று பதிவாகியுள்ளது. யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை சிவன்கோவிலில் தேவ தாசியர் தொண்டு புரிந்து வந்துள்ளனர் என்பதனை அறிய முடிகின்றது.

எனவே நடனக்கலைபற்றி நோக்கும்போது ஆலயங்களே இக்கலை வளர்ச்சிக்கு ஆதாரமாய் இருந்துள்ளன. ஆய கலைகள் அறுபத்து நான்கிலும் மனதை நெகிழ வைத்து, பார்ப்பவரின் கண்ணிற்கும் மனதிற்கும் விருந்தளிக்கும் அரும் பொக்கிஷக் கலையே நடனக்கலையாகும். உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்திக் காட்டுவதற்கும், வாழ்க்கையை தத்துருபமாக உணர்த்தவும் இக்கலை பெரிதும் உதவுகின்றது. இறைவனுடன் ஆன்மாவை அணுகச் செய்து நல்லமுறையில் ஆன்மா ஈடேற்றம் அடைய ஏற்ற வழியாக நடனக்கலை அமைகின்றது. இக்கலையை அழிய விடாது போற்றி வளர்த்த பெருமை ஆலயங்களையே சாரும் எனின் அது மிகையாகாது. இன்று நடனக்கலை விருட்சமாக நின்று நிழல் கொடுப்பதற்கு அடித்தளம் இட்டவை ஆலயங்களே எனின் அது மிகையாகாது.

## விதைப்பு

ஓர் உழவன் விதைநெல்லோடு வயலுக்குள் இறங்கினான். முதலில் வலப்புறமும் பின்னர் இடப்புறமுமாக நெல்மணிகளை விசிறினான்.

சில மணிகள் கடினமான ஒற்றையடிப் பாதையில் விழுந்தன. அவை முளைக்கவில்லை. பறவைகள் அவற்றைப் பொறுக்கின. கடவுள் தம்மோடு பேசியபோதும் அவருக்குச் செவி சாய்க்காதவர்களைப் போன்றவை அவை!

சில விதைகள் கற்பாறைகள்மீது விழுந்தன. முளைக்கவும் செய்தன. ஆனால் வேர் கொள்ளவில்லை, வெய்யிலில் சிறிய முளைகள் கருகிப் போயின. கடவுள் உரையைக் கேட்டும் விரைவில் அதை மறந்துவிடுவோரைப் போன்றவை அவை!

சில மணிகள் முள்ளுப் பற்றைக்குள் விழுந்தன. அவை வளர்ந்து வரும்போது, முள்ளுச் செடிகளால் மூடுண்டு திணறிச் செத்தன. கடவுள் வாக்கைக் கேட்டு அதன்படி நடக்கச் சித்தம் கொண்ட சிலர், நாளடைவில் பொன், பொருள் இவற்றின்மீது கொண்ட ஆசையில் மயங்கி விடுகிறார்களே அவர்களைப் போன்றவை அவை!

ஆனால் பல விதைகள் பண்படுத்தப்பட்ட நல்ல மண்ணில் விழுந்தன. உயர வளர்ந்தன. கதிர் வந்து முற்றி மஞ்சள் நிறமாகிக் காற்றில் ஆடின. வயலைப் பார்த்தான் உழவன். விதைத்தவன் அவனேயாயினும் கடவுள் தந்த மழையும் வெய்யிலும் மண்ணுமே அச்செழிப்புக்குக் காரணம் என்பதை அவன் உணர்ந்தான். இவ்விதைகள் கடவுள் ஆணையைக் கேட்டு அதன்படி நடக்கும் மக்களைப் போன்றவை.

*ஓடாத தேரும் உழைக்காத மனிதனும் சீரிழக்க நேரிடும்.*

# பகவத்கீதையின் உலகம் தழுவிய பரந்த நோக்கு

(தொடர்ச்சி...

– சுவாமி கிருஷ்ணானந்தா –

தமிழில்: திரு பூ. சோதிநாதன் அவர்கள் –

## அத்தியாயம் – 03

## உண்மையான துறவு மனப்பான்மை

### 17. ஆன்மீக வழி.

பகவத்கீதையின் முதலாவது அத்தியாயத்தில் ஆன்மிக வழியில் செல்லும் ஒரு சாதகர் விபரிக்கப்படுகின்றார். அதற்கு அர்ச்சுனன் உதாரண மனிதனாகக் கொள்ளப்படுகின்றான். நாம் வாழும் இந்த உலகம் ஒரு யுத்த பூமியே ஆகும். இந்த உலகத்திலே நாம் செய்ய விரும்புபவை எமக்கு முன் எதிர் நிற்பனவே ஆகும். இந்தச் சூழ்நிலைகளை எவ்வாறு கையாளுகிறோம் என்ற முறையிலேயே நாம் மதிப்பிடப்படுகின்றோம். ஒரு சூழ்நிலை என்பதன் அர்த்தம் இந்த உலகில் நாம் செய்ய வேண்டி உள்ள எதனையும், நாம் தொடர்புபட்டுள்ள எல்லாவற்றையும் குறிக்கிறது. அந்தக் கடமையை நிறைவேற்றுவதற்காகவே நாம் அழைக்கப் பட்டிருக்கின்றோம். கடமையில் உயர்ந்தது அல்லது தாழ்ந்தது என்ற வேறுபாடு எதுவும் இல்லை.

ஒரு பெரிய இயந்திரத்தில் சில பகுதிகள் மேலானவை, சில பகுதிகள் கீழானவை என்று எப்படி எம்மால் கூறமுடியாதோ அப்படியே கடமையும் ஆகும். ஒவ்வொரு பகுதியும் அதற்குரிய பங்கை நிறைவேற்ற வேண்டும். எந்த வகையான ஒப்பீடும் அந்த அமைப்புக்கு எவ்வித மனித அர்த்தத்தையும் தரப்போவதில்லை. ஆனால் அது பிரபஞ்ச விதிப்படி ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது. ஆன்மிக சாதகர் ஆரம்பத்தில் ஆன்மிக வயப்பட்ட உற்சாகம் உடையவராக இருக்கவேண்டும். நாம் ஒவ்வொருவரும் ஆன்மிக வாழ்வு பற்றிய ஒரு விருப்பம் உள்ளவர்களே. அத்துடன் மனதில் ஆன்மிக வாழ்வு எண்ணம் உதிக்கின்ற கணமே சிலவற்றை நாம் பற்றிப் பிடிப்பதும் வேறு சிலவற்றைக் கைவிடுவதும் ஆகிய கூறமுடியாத ஒரு சூழ்நிலையில் எங்களைக் காண்போம். இதுதான் சமயத்தில் வெளிப்படையாகக் காணக்கூடிய ஒரு அம்சமாகும்.

### 18. உண்மையான துறவு.

பொதுவாக மனிதரது ஆன்மிகம் துறவு, உலக இன்பங்களை விடுவது முதலான பெயர்களால் அழைக்கப்படுவதையே குறிக்கின்றது. ஆன்மிக எண்ணம் துறவு என்ற எண்ணத்தில் இருந்தும், வேறு எதனையோ பற்றிக்கொள்ளும் எண்ணத்தில் இருந்தும் பிரிக்கப்பட முடியாததாகவே கருதப்படுகின்றது. அப்படிப் பற்றிக்கொள்வது அப்போதைக்கு எமது இலட்சியமாக உள்ளது. எனவே நாம் ஒன்றில் இருந்து மற்றதைப் பிரித்துப் பார்க்கிறோம்.

*கனிவு உள்ள மனதில்த்தான் துணிவு இருக்கும்.*

பகவத்கீதை இந்த வகையான துறவைப் போதிக்கவில்லை. உயர்ந்த ஆளுமை இலட்சியம் என்ற தங்கமாக எங்களைப் புடம்போடுகின்ற ஒரு துறவையே அது ஆரம்பத்தில் இருந்து இறுதிவரை போதிக்கின்றது என்பதில் சந்தேகம் இல்லை. துறவு மனப்பாங்கைப் பூரண உள்ளத்தோடு அழுத்திக்கூறும் ஆன்மிக நூல் ஒன்று இருக்குமாயின் அது பகவத் கீதையே ஆகும். எது உண்மையோ அதிலிருந்து தன்னைப் பிரித்துக் கொள்வது ஆன்மிக வாழ்வின் அர்த்தமில்லை என்பதையும், அவர் தான் வாழுகின்ற சூழலோடு தன்னை இசைவு படுத்திக் கொள்வதே ஆன்மிக வாழ்வு என்பதையும் பொறுத்தவரையில் பகவத்கீதையைக் காட்டிலும் மேலான அர்த்தமுள்ள போதனை வேறு எங்கும் காணமுடியாது.

## 19. ஒப்பீட்டுச் சூழ்நிலை.

ஒரு குறித்த மனநிலை ஒரு நேரம் மேலோங்கி நிற்கும்போது நாம் நினைக்கின்ற கடவுளின்மீது ஆவல் தூண்டப்படலாம். அத்துடன் இந்த உலகத்தோடு நாம் பட்டபாடு போதும் என்றும் கற்பனை செய்கின்றோம். ஆனால் அந்த மன எழுச்சி தற்காலிகமானதாகவும், ஏதோ ஒரு சூழ்நிலையில் உருவானதாகவும் இருப்பதனால் தொடர்ந்து இருக்காது. மீண்டும் நலிவடையலாம். மேலும், வாழ்க்கைச் சக்கரம் சுழல அதிலுள்ள ஆரங்கள் வேறு நிலைகளில் தம்மைக் காண, எமது புரிந்துணர்வு, உணர்ச்சிகள், மனப்பாங்குகள் முதலானவை அதேவேளை மாறுகின்றன. அத்தோடு நாம் எம்முன் உள்ளவற்றை முற்றும் வித்தியாசமாகப் பார்ப்போம். நாம் எப்போதுமே ஒரு விடயத்தைத் தொடர்ந்து விரும்புவதுமில்லை தொடர்ந்து வெறுப்பதும் இல்லை.

வருடங்கள் செல்லச் செல்ல விடயங்கள் பற்றிய எமது எண்ணங்களும் மாறிச் சென்றுகொண்டு இருக்கின்றன. அத்தோடு முன்பு ஒருநாள் விரும்பியதை இன்று விரும்புவது இல்லை. அதுபோலவே முன்பு ஒரு சமயம் நாம் வெறுத்து ஒதுக்கியதை இன்று வெறுப்பது இல்லை. இந்த எமது மனநிலைகள் சூழ்நிலைக்குத் தக்கபடி ஒப்பீட்டு ரீதியில் அமைகின்றன. இப்படியாகக் கால ஓட்டத்தில் எமது மனம் கடந்து செல்வதை நாம் பரிணாம வளர்ச்சிமுறை என்று அழைக்கின்றோம். அச்சூழ்நிலைகள் ஒப்பீட்டு ரீதியானவையே அன்றித் தனி முழுமையானவை அல்ல. நாம் எந்த விடயம் தொடர்பாகவும் தனி முழு விருப்போ வெறுப்போ கொள்வதில்லை. வெவ்வேறு நாட்களில் நாம் வெவ்வேறு விடயங்களை உணரும்போது அவை ஒரு நோய் குணமாகும் கட்டங்களை ஒத்தனவாக இருக்கின்றன. இதுதான் அரிச்சுன னுக்கு நிகழ்ந்தது. அத்துடன் அது நம் ஒவ்வொருவருக்கும் நிகழ்கிறது.

## 20. தவறான வாதங்கள்.

எமது காரண காரிய வாதங்கள் தத்துவரீதியானவை ஆகவும், ஆன்மிக ரீதியானவை ஆகவும் தோன்றியபோதும் எம்மிடமுள்ள உணர்ச்சிகள் அத்தத்துவ ஆன்மிக விடயங்களை முறியடிக்கப் போதிய பலம் உள்ளனவாய் இருக்கின்றன. எமது வாதங்கள் எப்படியான தத்துவ ஆழம் உடையனவாக இருந்தாலும் நாம் எமது உணர்ச்சிகள் பலவீனமானவை என்று கற்பனை செய்ய வேண்டியதில்லை. எதிர்த்தரப்பின் வாதங்கள்போல அவை சமமான கவனத்துக்கு உரியன என்ற வகையில் நாம் வாதிக்கின்றோம்.

பகவத்கீதையின் முதல் அத்தியாயத்தில் வரும் அருச்சுனன் வாதங்கள் அவன் சில நாட்களுக்கு முன் கூறிய வாதங்களுக்கு எதிரானவையும், வழமையான அவனது உணர்ச்சிகளை நிராகரிப்பனவாயும் உள்ளன. எமக்கு முன்னால் நாம் எதிர்கொள்ளும் சவாலின் தன்மை சிலகாலம் செல்ல நம்மால் நிராகரிக்கப்படலாம். அது முன்னர் எம்மை மிகவும் கவர்ந்த ஆன்மிக இலட்சியமாக இருந்தாலும்கூடப் பின்னர் நாம் அதனை நிராகரிக்கலாம். அந்த இலட்சியத்தின் இயல்பைப் பற்றிய எமது விளக்கம் போதியதாக இல்லாது இருப்பதே அதற்குக் காரணமாகும். இராசத தாமச குணங்களின் இயல்பைத் தகுந்த முறையில் புரிந்து கொள்ளாததனால் எமது வாழ்நாள் முழுவதும் ஒரே எண்ணத்தைத் தொடர்ந்து கடைப்பிடிப்பது இல்லை. பெரும்பாலும் உண்மையான ஆவல்கள்தான் என்று நாம் கருதிக்கொள்கின்ற சந்தர்ப்பங்களில் கூட சமயரீதியான துறவு தவறான ஒரு மனப்பான்மையே ஆகும்.

**21. புலன்தரவுகள்.**

எமது புலன் கருவிகள் எமக்குத் தருகின்ற தரவுகளைக் கொண்டே அந்தத் துறவு மனப்பான்மையை நாம் உருவாக்குகின்றோம். அதேபோலப் பெருமளவுக்கு எமது கடவுள் பற்றிய கருத்தும், ஆன்மிகம் பற்றிய கருத்தும், துறவு பற்றிய கருத்தும் எமது புலன்கள் எமக்குத் தருகின்ற தரவுகளின் அடிப்படையிலேயே உருவாகின்றன. ஆனால் சிலகாலம் செல்லப் பொருத்தமான ஒரு சூழ்நிலை வரும்போது எமது அந்தத் துறவு மனப்பான்மையில் இருந்து எம்மை விடுவித்துக்கொள்ள வேண்டும் என்று உணர்கின்றோம். நாம் ஆன்மிக இலட்சியம் என்று எதனை அழைத்தோமோ அதற்குப் பொருத்தமில்லாத வேறொரு சமயத்தில் எது எமக்குத் துன்பத்தையும், அல்லலையும் தருகிறதோ அதனைக் கொண்டு அந்த ஆன்மிக இலட்சியம் கைவிடப்படலாம் என்று கருதுகின்றோம். ஆட்களும், பொருள்களும் கைவிடப்பட்டு உலகம் எம்மைப் பந்திப்பதற்கான ஓர் இடம் என்று நாம் கருதுகின்றோம்.

உலகம் பிசாசு வேலை செய்யும் தொழிற்சாலை என்பதனால் அதனைவிட்டு மிக விரைவில் நாம் வெளியேற வேண்டும் என்று எண்ணுகின்றோம். எமது கடவுள் பற்றிய கருத்து புலன் தரவுகளின் அடிப்படையில் அமைந்ததே. இந்தக் கருத்தை ஆழமாகச் சிந்திப்போமாயின் புலன் அறிவிலிருந்து எமது கடவுள் பற்றிய இலட்சியத்தை அல்லது ஆன்மிக இலட்சியத்தை நாம் புற உருவில் சிந்திக்காமல் சூக்குமமாகக் கூடச் சிந்திக்கலாம். ஆனால் புலன் கருத்துத் தூலமாக மட்டும்தான் இருக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை.

**22. எண்ணங்களை ஒழுங்குபடுத்தும் முறை.**

எமது எண்ணங்களைக் குறிப்பிட்ட ஒருவகையில் நாம் ஒழுங்குபடுத்துவதைப் புலன் நடவடிக்கை என்று அழைக்கின்றோம். புலன் உலகம் என்னும்போது அது புலன்கள் தொடர்பு கொள்ளும் தூலப் பொருட்களாக மட்டும் இருக்கவேண்டிய அவசியம் இல்லை. எண்ணங்களை ஒழுங்குபடுத்தும் முறையினால் அவ்வெண்ணங்களை அகம், புறம் என இரண்டாக்கி அவற்றுக்கு இடையே உள்ள உறவைக் கண்டு கொள்ளுவதை நிராகரித்து விடுகின்றோம். புலன் நடவடிக்கையானது புலனறிவுப் பொருள்களுடன் உண்மையான

அகரீதியான அர்த்தம் எதனையும் தொடர்பு படுத்துவதில்லை. இதன் விளைவாக, சிலவற்றை உளமார நேசிக்கின்றோம்; சிலவற்றை வெறுக்கின்றோம். அத்துடன் அதன் தாக்கம் எதுவும் எமது சொந்த ஆன்மாவில் ஏற்படுவதில்லை. இவ்வாறுதான் புலன்கள் செயற்பட்டுக்கொண்டு இருக்கின்றன.

எனினும் ஒவ்வொரு விருப்பும், ஒவ்வொரு வெறுப்பும் மனதில் ஒரு தாக்கத்தைச் செலுத்துகிறது. ஆனால் இந்த உலகம் வேறுபட்ட அகப்பொருள்களாலும், புறப்பொருள்களாலும் உருவாக்கப்பட்டுள்ளது என்பதில் எவ்வித உண்மையும் இல்லை. எனவே அருச்சுனன் ஈடுபட்டிருக்கின்ற மகாபாரத யுத்தம் யாரோ ஒரு சில மனிதர்களுக்கு எதிராக மட்டும் ஏற்பட்ட ஒரு யுத்தம் அன்று. அவன் உளவியல் ரீதியாகத் தன்னை விலக்கிக்கொள்ள முடியாத மிகப் பரந்த ஒரு சூழ்நிலையில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு இருக்கின்றான். பகவத் கீதையின் இரண்டாம் மூன்றாம் அத்தியாயங்களில் விளக்கப்படுவதுபோலக் கிருஷ்ண பரமாத்மாவினால் அவனது மனதிற்குள் உருவாக்கப்பட்ட ஒரு சூழ்நிலையே அது ஆகும்.

(தொடரும்...

## தருமரின் தரும குணம்

ஒரு நாள் பாண்டவர்கள் உணவருந்திக் கொண்டிருந்தபோது ஏழை ஒருவன் வந்து தருமனிடம் ஐயா நான் வறுமையில் வாடுகிறேன்; ஏதாவது உதவி செய்யுங்கள் என்றான்.

உடனே தருமன் தனது இடது கையால் பக்கத்திலிருந்த வெள்ளிக் கிண்ணத்தை எடுத்துத் தானமாகக் கொடுத்தார். ஏழை வாங்கிச் சென்றதும் பீமன் "அண்ணா இடது கையால் செய்வது பாவமாயிற்றே. தர்ம பலனும் இல்லையே. எல்லா சாஸ்திரங்களையும் அறிந்த நீங்கள் இப்படிச் செய்யலாமா" என்று கேட்டார்.

அப்போது தருமன் தம்பி "ஏழையின் துயரைக் கேட்டதும் மனமிரங்கி அவனுக்கு வெள்ளிக் கிண்ணத்தைக் கொடுக்கும் எண்ணம் ஏற்பட்டது. நான் சாப்பிட்டுக் கைகழுவி வந்த பின்பு தரலாம் என்றால் அதற்குள் இந்தப் பொல்லாத மனம் எப்படி மாறிவிடுமோ? ஒருவேளை வேறு ஏதாவது பொருளைக் கொடுத்தால் போதாதா? வெள்ளிக் கிண்ணம் எதற்கு? என்று தோன்றலாம். எனவே நல்லதைச் செய்ய நினைக்கும்போது அந்த நொடியிலேயே செய்வது நல்லது. அதனால் நமக்கு ஏற்படும் நன்மை தீமையைவிட பிறருக்கு ஏற்படும் நன்மையே முக்கியம் என்றார் தருமன்.

## குருபூஜை தினங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யூலை | 08 | ஆனி | 24 | வெள்ளி | மாணிக்கவாசகர் |
| ஆகஸ்ட் | 09 | ஆடி | 25 | செவ்வாய் | மயில்வாகனம் சுவாமிகள் |
| ஆகஸ்ட் | 10 | ஆடி | 26 | புதன் | சுந்தரமூர்த்தி நாயனார் |
| ஆகஸ்ட் | 16 | ஆடி | 32 | செவ்வாய் | பட்டினத்தடிகள் |
| செப்ரெம்பர் | 10 | ஆவ | 25 | சனி | குங்கிலியக்கலயர் |
| செப்ரெம்பர் | 29 | புரட் | 13 | வியாழன் | அருணந்தி சிவாச்சாரியார் |

*உள்ளத்து இருளை ஓட்டும் ஒளி பக்தி.*

# பிள்ளைகளின் தற்கால நடத்தை

– திரு பு. கதிரித்தம்பி அவர்கள் –

பிள்ளைகள் தற்பொழுது வழிதவறிச் செல்வதற்குப் பல காரணங்கள் உள. அவற்றுள் பெருந் தாக்கமுடைய காரணிகளை ஆராய்வது சாலச்சிறந்தது. பிள்ளைகளின் தவறுகளுக்கு பிள்ளைகளிடம் முழுப்பொறுப்பையும் விடுதல் உத்தமமன்று. பிள்ளைகளின் வழிநடத்தலில் ஏற்பட்ட தவறென்றே எண்ணத் தோன்றுகின்றது.

பிள்ளைகளின் நடத்தைக்கு பொறுப்புக்கூற வேண்டிய முதன்மையானவர்

(1) பெற்றோர்
(2) ஆசிரியர்கள்
(3) அரசாங்கம்

இவர்களின் வழிநடத்தலில் பிள்ளைகள் வளர்கின்றனர் என்பதை யாவரும் மறுக்கவும், மறக்கவும் முடியாது.

பிள்ளைப் பருவம் வரை குழந்தை பெற்றோர் பாதுகாப்பில் இருக்கின்றது. முதலில் குழந்தை அன்னையைக் காண்கின்றது. அன்னையின் அரவணைப்பிலும், அன்பிலும் அன்னையின் தாலாட்டிலும் இன்பமாக வளர்ந்து வருகின்றது. அன்னையே தனக்கு வேண்டியவள் என்று எண்ணி அன்னையின் முகத்தை உற்றுநோக்கிச் சிரிக்கின்றது. அடுத்து காண்பவர் தந்தை. இருவரும் தனக்கு உதவி செய்பவரென்று உணர்ந்து அவர்களைக் கண்டதும் கை, கால் அடித்துச் சிரிக்கின்றது. இக்காலத்திற்றான் பெற்றோர் பிள்ளையை அன்பாகப் பேசி அரவணைத்து முத்தங்கொடுக்க வேண்டும். இந்நிகழ்வால் பிள்ளை, "தாய் தந்தையரைக் கண்கண்ட தெய்வமென" எண்ணுகின்றது. பெற்றோர் பிள்ளையை நன்னெறியில் இட்டுச் செல்ல காலை எழுந்தவுடன் காலைக் கடன்கள் முடிந்தவுடன் விபூதி அணிய வைத்து, சுவாமி அறையில் வழிபட விடவேண்டும். இறைவன் புகழைப் பாடுவதற்குக் குறைந்தது ஒரு தேவாரமாவது பாடவைக்க வேண்டும். தினமும் இந்நிகழ்வை நடத்த வழிசெய்து கொடுப்பது பெற்றோர் கடமை ஆகும். பிள்ளை இறை வழிபாட்டில் ஈடுபடும்போது கடவுள் எப்படிப் பட்டவர் என்பதை அறிய விரும்பும். பெற்றோர், ஆறுமுக நாவலர் பெருமான் கூறிய கடவுளின் தன்மையை என்றும் உள்ளவர்; எங்கும் நிறைந்தவர்; எல்லாம் அறிபவர்; எல்லாம் வல்லவர் என்ற சிறப்புத்தன்மையை எடுத்துக் கூறலாம். அதுமட்டுமன்றி இறைவன் எல்லா உலகங்களையும் எல்லா உயிரினங்களையும் படைத்து, காத்து அருளுகின்றார் என்பதையும் விளக்கலாம். கடவுள் நம்பிக்கை ஏற்பட இறைவனை கோயிலில் சென்று வழிபடவேண்டுமென்ற எண்ணம் தோன்றும். பெற்றோர், கடவுள் எம்மைக் காப்பார்களென்ற நம்பிக்கையுடன் வாழும் குழந்தைக்கு நற்சிந்தனை உண்டாகும். தீய செயல்களில் ஈடுபடவோ, பஞ்சமா பாதகங்களைச் செய்யவோ முனையாது அவர்கள் நாட்டின் நற்பிரசைகளாக வாழ்வர் என்பது திண்ணம்.

கல்வி கற்கும் பருவத்தில் பிள்ளை பாடசாலைக்குச் செல்கின்றது. அங்கு தாய் தந்தையர் போல் உதவி செய்ய யார் வருவாரென்று எண்ணுகிறது. இந்நிலையை ஆசிரியர் உணர்ந்து பிள்ளையை இன்சொல் கூறி அரவணைக்க வேண்டும். ஆசிரியரிடம் நம்பிக்கை வைத்த பிள்ளை ஆசிரியரைப் பணிந்து உரைகளைக் கேட்கும். பிள்ளைகளின் மனக்குறிப்பறிந்து

*ஊதியத்தை நினைத்தபடியே ஊழியத்தைச் செய்யாதே.*

பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களே உத்தம ஆசிரியராகும். ஆசிரியர்கள் ஔவை, வள்ளுவன் கூறிய பாடல்களை முதலில் விளக்குவது மிகவும் சிறந்தது. ஔவை அருளிய மொழிகள்

1) அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
2) ஆலயம் தொழுவது சாலவும் நன்று.

வள்ளுவன் கூறிய பாடல்கள்:

1) அகர முதலவெழுத் தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு.
2) கற்றதினாலாய பயனென் கொல் வாலறிவன்
நற்றாள் தொழா ரெனில்.

ஔவை, வள்ளுவன் அருளிய மொழிகளை நன்கு மனனஞ்செய்வித்து பாடல்களின் பொருளையும் பிள்ளைக்கு அறிய வைக்க வேண்டும். இந்நெறிகளில் நின்று வளர்ந்த பிள்ளை தீய வழிகளில் செல்ல மாட்டார்கள் என்று தத்துவ ஞானிகள் கூறுகின்றனர்.

பாடசாலைகளில் கற்பிக்கின்ற தமிழ் மொழி பாட நூல்களில் பிள்ளைகளின் நற்சிந்தனையை வளர்க்கக்கூடிய பாட அலகுகள் இல்லாதிருப்பதை யாவரும் அறிவர். இவை மாற்றப்பட வேண்டியவை. இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன் பாடசாலைகளில் ஆறுமுக நாவலர் எழுதிய பால பாடம் (பால பாடம் ஒன்று, பால பாடம் இரண்டு, பால பாடம் மூன்று, பால பாடம் நான்கு, ஐந்து என எழுதிய தமிழ் பாடநூல்) என்னும் நூல்கள் கற்பிக்கப்பட்டன. அந்நூல்களை கற்றுத் தேறிய அநேக மாணவர்கள் பண்டிதர்களாகவும் புலவர்களாகவும், வித்துவான்களாகவும் விளங்கி தமிழை நன்கு வளர்த்தார்கள் என்பதை தமிழ் உலகம் அறியும். இந்த வரிசையில் தோன்றியவர்தான் புலவர் சுவாமிநாதன். இவர் யாழ்ப்பாணத்தில் நல்லூரில் பிறந்து நன்கு இலக்கணம் கற்று பேரறிஞனாகவும், பிரசங்கியாகவும் விளங்கினார் என்பதை அன்றும், இன்றும் தமிழ் அறிஞர்கள் போற்றுகின்றனர். சுவாமிநாதன் புலவரின் அறிவுத் திறனையும் ஆழமான பேச்சினையும் அறிந்த இந்தியா திருவாவடுதுறை ஆதீனம் அழைத்து பல பிரசங்கங்கள் செய்வித்து, பொற்கிழி வழங்கிக் கௌரவித்ததை, அந்நாள் இலங்கை வாழ் தமிழ் சமூகம் போற்றித் துதித்தது என்பதை மறக்கவோ, மறுக்கவோ முடியாது. அக்காலத்தில் பிள்ளைகள் வழிதவறி நடக்கவில்லை என்பது உண்மையிலும் உண்மை.

இப்போதுள்ள பிள்ளைகளின் மனதை மாற்றியமைக்க படித்த கல்விச் சமூகம் முன் வரவேண்டும். இங்கு இருக்கும் அறிஞர்கள் எமக்கென்னவென்று எண்ணாது, எமது இறை பணியென்று எண்ணி திருத்தும் வழியைத் தேடுங்கள். உலகத்தில் திருத்த முடியா தொன்றில்லை என்பதை உணர்ந்து செயற்படுங்கள். ஆண்டவன் நிச்சயம் கைகொடுப்பான் என்பது திண்ணம். நல்வழி காட்டும் ஆசிரியர்களின் முன்மாதிரிக்கு ஹாட்லிக் கல்லூரி விடயத்தை அனைவருக்கும் அறியத் தருவது பொருத்தமானது எனக் கருதுகிறேன். திரு N. தெய்வேந்திரராஜா அவர்கள் ஹாட்லிக் கல்லூரியின் அதிபராகப் பொறுப்பேற்ற ஆரம்பகாலம். (அவர் இப்போது யாழ் வலயக் கல்விப் பணிப்பாளராக உள்ளார்.) வழமையான வாராந்த மாணவர்களின் ஒன்றுகூடலில் ஒரு நடைமுறையினை அழுத்தி உரைத்தார். தினமும் காலையில் பாடசாலை புறப்பட ஆயத்தமாகும் வேளையில் தாய்- தந்தையரின்

*அன்புள்ளோர் தலையில் ஆணவச்சுமை இருக்காது.*

காலைத்தொட்டு வணங்கியதன் பின்னரே பாடசாலை வரவேண்டும் என்பதுவே அவரது கட்டளையாக இருந்தது. பெற்றோருக்கான தவணை இறுதிக் கூட்டங்களில் ஒவ்வொரு பெற்றாரையும் "மாணவன் இதனைப் பின்பற்று கிறானா?" என விசாரிப்பார்.

பாடசாலையை விட்டு அந்த மாணவர்கள் விலகிய பின்னரும் இந்த நடைமுறையைத் தொடர்வதுகண்டு வியந்தேன். அவர்கள் சமூகத்தின் நற்பிரஜைகளாகவே வாழ்வர் என்பதிற் சந்தேகமில்லை.

இறை தூண்டுதலால் சிறியேனாகிய நான் இக்கட்டுரையை எழுதினேன். சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை வெளியீடாகிய ஞானச்சுடரில் வெளியிட மனம் தூண்டுகிறது. பிள்ளைகளின் குறைகளைக் களையவரும் அடியவர்களுக்கு தொண்டைமானாறு செல்வச் சந்நிதியான் எந்நிதியும் தருவான் என்பதைப் பூரணமாக நம்புங்கள். நம்பியோரை ஆண்டவன் கைவிடமாட்டான்.

---

## ஆற்றிடை யாடும் அருள்தரும் வேலவன்

சேரணி மிகு செல்லச்சந்நிதியில் காருண்ய கதிர்காமர் கண்ணுற்ற பாலன்
பேரணி பூத்த தொண்டை மானாற்றிடையோது மஞ்செழுத்துமாகி நின்றாடும் வேலவன்
ஊரணிக் குழாமுள்ளோர் யாண்டும் தலப்பெறும்பேறு பெற்றோமெனத் துதிபாடி
போரணிக்கரங் கொள்ளீசன் ஆலம்பேர் விழுதிலூஞ்ச லாடினார் அடியவர் கண்குளிர!

அஞ்சலென்றமரக் காற்றும் அற நெறிசெப்பும் செவ்வேழ்
கஞ்சலா ரவுணர் தம்மைக் கரத்தொரு வேலினாலே செகுத்து
பஞ்சமர் பகழி பூண்டு படைகளை நாசஞ் செய்து - மெத்த
செஞ்சமர் சூரன்மார்பு கீண்டு செறித்தனர் சேவலும் மயிலுமாக!

வெஞ்சமர் முடித்த வேலன் விந்தையை மனதிலுன்னிய தேவர்குழாம்
கொந்தளக் கூத்துமாடி குவலயம் போற்றப் பாடிகந்தனைக் கரத்தாலேந்தி
கரமிசைகுவித்துப் போற்றி செந்தழலிட்ட நெய்போலிரங்கினர் ஏற்றி நின்றார்
காரிருட்சூரனைக் கணத்தில் முடித்தெம் குலம்காத்தனை பரஞ்சோதியேயெனப் போற்றினர்!

மணகமுந்திகாண் மருகோனே செந்தமிழ்ப்பாலனைய சேவற்கொடி யோனே!
விண்கமமுந் தேவர் துயர்துடைத்த வித்தகனே தத்திம்தோ மெனவற்றுற்ற வேலா!
தண்டைச் சதங்கை சிந்தக்களிகூடும் பச்சைக் குறவள்ளி மணாளனே
மண்டலக்கலாய தெய்வயானைக்கு கந்தாயெனச் செறிந்தோம் ஈதலத்தே!

சோதித்து எமைத்துயர்துடைத்த சொர்ணவடிவேலனே சாதித்ததென்னை தர்க்கித்த சூரபன்மன்
பாதியுடலாய்ப் பர்ணமித்து தேர்மீது கோழிக்கொடியாய் தோகையாய் சும்மாடுதாங்கும் சேலப்பெருந்தெய்வமே!
ஆதியாய் அந்தமாய் அங்குச பாசாங்குச அந்த மெய்ப்பொருளாய் அம்பலத்தாடுவான் சேயே!
நீதியாய் நின்றிலங்கும் நின்மலவாழ்வினை விதியனைய மாயமாயொழித்திடக்காலில் கடிந்துற்றேன் கந்தவேளே!

தொண்டர் கண்டுண்டெழும் அமிர்தம்போல் பண்டுமென்றும் பல்ஞானம்புகட்டி யாள்பவனே
தண்டயங்கிரிதகரப் புடைத்த வெண்டயக்கந்தரு செஞ்சடைச்சிவபாலனே முருகேசனே!
மண்டலங்கருகியோடவுந்தி கொண்டமாயன் மருகோனே தண்டவெஞ்சூரக்குருவானவனே
தொண்டைமானாற்றை யண்டியருள் மொண்டும் குஞ்சரிக்கூத்தனே நின்பூங்கழல் போற்றுகின்றேன்.

-க. தெய்வேந்திரம்-

ஆர்வம் இல்லா உழைப்பு சோர்வையே தரும்.

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| K. லிநோஜன் | சுண்ணாகம் | 10000. 00 |
| ப. அக்ஷனா | பிரான்ஸ் | 10000. 00 |
| P. கண்ணன் | லண்டன் | 5000. 00 |
| யோ. காண்டீபன் | மானிப்பாய் | 1000. 00 |
| இ. நவரட்ணம் | திருநெல்வேலி | 1000. 00 |
| ஸ்ரீ. அற்புதராணி | கனடா | 5000. 00 |
| S. சுப்பிரமணியம் குடும்பம் | கனடா (நல்லூர்) | 2500. 00 |
| வி. சிவலிங்கம் குடும்பம் | கனடா (நல்லூர்) | 2000. 00 |
| செ. குகதாஸ் | பருத்தித்துறை | 1மூடை அரிசி |
| வே. குமாரசாமி | காரைநகர் | 500. 00 |
| இ. சுகந்தினி | நெல்லியடி | 2000. 00 |
| முகுந்தன் ஐவன் | கனடா | 5000. 00 |
| கை. காந்தரூபன் | வவுனியா | 5000. 00 |
| அ. நிஷாந்தன் | தொண்டைமானாறு | 8000. 00 |
| தி. நாகராஜா | பருத்தித்துறை | 2000. 00 |
| தே. மகீபன் | இணுவில் | 2000. 00 |
| சே. சற்குணராஜா | பண்டத்தரிப்பு | 10000. 00 |
| பொ. பெரியசாமி | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| S. ஸ்ரீரங்கநாயகி தாதி உத்தியோகத்தர் | யாழ்ப்பாணம் | 6000. 00 |
| திரு சிவபாலன் குடும்பம் | உரும்பராய் வடக்கு | 3000. 00 |
| க. கணபதிப்பிள்ளை | கொழும்பு | 1500. 00 |
| க. ஆதித்யன் | கனடா (உடுப்பிட்டி) | 1000. 00 |
| செ. கந்தசாமி | சண்டிலிப்பாய் | 1500. 00 |
| தி. ஆத்விக் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| நடராசா யோகரெத்தினம் நினைவாக ந. ஸ்ரீதரன்மூலம் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| செ. பாலச்சந்திரன் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| க. மகேஸ்வரி | ஆவரங்கால் | 5000. 00 |
| S. பிரதீபன் | அச்சுவேலி | 500. 00 |
| தி. யோகசாந்தி | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| தி. யோகரமணன் | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| சுகந்தா தவக்குமார் | U.S.A | 1000. 00 |
| பா. சாரதா | கனடா | 1000. 00 |
| த. யோகநாதன் மடத்தடி | அச்சுவேலி | 5000. 00 |

*ஏழ்மையிலும் ஒழுக்கம் தாழ்மையடையாது காக்கும்.*

| | | |
|---|---|---|
| த. நவரத்தினராஜா மடத்தடி | அச்சுவேலி | 5000. 00 |
| குகதாசன் அஸ்வின் | கோப்பாய் | 5000. 00 |
| V.N. தில்லைநாதன் | நாவலப்பிட்டி | 1000. 00 |
| சி. நவலிங்கம் குடும்பம் | புலோலி | 5000. 00 |
| க. பத்மநாதன் குடும்பம் | புலோலி | 1000. 00 |
| புதிய நதியா நகை மாடம் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| ந. கதிர்காமநாதன் | சுதுமலை | 1மூடை அரிசி |
| வேலும் மயிலும் அரிசி ஆலை | பரந்தன் | 2மூடை அரிசி |
| கோ. கோபிநாத் | நீர்வேலி | 3000. 00 |
| வி. துரைராஜா | உரும்பராய் | 2500. 00 |
| S. ராஜேஸ்வரி | பத்தமேனி | 1000. 00 |
| அம்மாப்பிள்ளை | கனடா | 3000. 00 |
| வ. கிருஸ்ணராஜா | கரவெட்டி | 1500. 00 |
| வி. ராஜேஸ்வரி | பருத்தித்துறை | 1000. 00 |
| திருமதி தவமணி ராசரத்தினம் | பத்தமேனி | 2000. 00 |
| கி. யோகேஸ்வரன் | மூளாய் | 5000. 00 |
| Dr இ. கனகலிங்கம் | திக்கம் | 5000. 00 |
| இ. பத்மாவதி | கம்பர்மலை | 1000. 00 |
| வ. சதீஸ்குமார் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| ஏ. வசந்தகுமார் | யாழ்ப்பாணம் | 500. 00 |
| ச. வைத்தியநாதக்குருக்கள் மூலம் சண்முகப்பிரியா பொலிகண்டி | | 3000. 00 |
| திருமதி சாரதா சுந்தரேசசர்மா | பொலிகண்டி | 2000. 00 |
| க. சுகன்யா | கனடா (மல்லாகம்) | 5000. 00 |
| வி. மயூரன் | அவுஸ்திரேலியா | 10000. 00 |
| சி. சரண்யா | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| மோ. தனேஸ் | அவுஸ்திரேலியா | 2000. 00 |
| R. ரட்ணசிங்கம் | சிறுப்பிட்டி | 500. 00 |
| S. சிவகௌரி | சிறுப்பிட்டி | 1000. 00 |
| ஜெ. இராஜகோபால் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| பொ. குமாரசாமி குடும்பம் | பத்தமேனி | 5000. 00 |
| உ. கபிஷன் | கரணவாய் | 5000. 00 |
| மா. கருணாநிதி | அச்சுவேலி | 1500. 00 |
| பொ. செல்வராணி | கனடா | 10000. 00 |
| அமரர் இராசநாயகம் ஸ்ரீதரன் | வட்டுக்கோட்டை | 2000. 00 |
| கா. ராசமணி | நவாலி வடக்கு | 2000. 00 |
| பொ. பேரின்பம் | மயிலிட்டி | 1000. 00 |
| த. டக்ஷின் | சுண்ணாகம் | 1000. 00 |

(தொடரும்...

# மாணிக்கவாசகரும் நீத்தல் விண்ணப்பமும்

– திரு நா. நல்லதம்பி அவர்கள் –

சிவனவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன்தாள் வணங்கி,
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன்யான்
......

எனப் பாடத் தொடங்கிய மாணிக்கவாசகர், நீத்தல் விண்ணப்பத்தில், கருணையினாற் கலந்தாண்டு கொண்ட விடையவனே, கடையவனான என்னைக் கைவிட்டு விட வேண்டாம் என்று உத்தரகோச மங்கைக்கரசைக் கேட்கின்றார்.

பிரபஞ்ச வாழ்க்கையை விட்டுப் பேரின்ப வாழ்க்கைக்குப் படிப்படியாக என்னை மாற்றிய பரம்பொருளே, திரும்ப அந்தப் பிரபஞ்சத்துக்குள் வீழாமற் காப்பாயாக என்கிறார். இவ்வுலகில் இவ்வளவு காலமும் கிடந்து கிடந்து தளர்வடைந்தேன். இனிமேலும் இங்கு கிடந்து அழுந்தவிட்டு விடவேண்டாம் என்றே நீத்தல் விண்ணப்பம் ஐம்பது பாடல்களிலும் விண்ணப்பஞ் செய்கிறார்.

"அழுதால் உன்னைப் பெறலாமே" என்று பெரியோர் சொன்னதுபோல, "அலை புனல் சேர் செஞ்சடை யெம் ஆதி என்றும், ஆரூரா என்றென்றே அலறா நில்லே" என நாவுக்கரசர் பாடியதுபோல, மாணிக்கவாசகர் திரும்பத் திரும்பத் தன் குறைபாடுகளைச் சொல்லிச் சொல்லிக் கருணாகரனிடம் வேண்டுதல் செய்வதைக் காண்கின்றோம்.

நீத்தல் விண்ணப்பத்தில், கடையவனான என்னை அணைத்து ஆட்கொண்டாய். ஆகையால் இனிமேல் இப்பிரபஞ்ச வாழ்க்கையில் வீழாதிருக்கும்படி என்னைத் தாங்கிக் கொள்வாய் என்கிறார்.

"தந்தது என்தன்னைக் கொண்டது உன்தன்னை" எனப் பிறிதோர் இடத்தில் பேசும் வாதவூரர், உன்னிடம் பக்தித் தொண்டு பூண்டவர்களுள் நானும் ஒருவன். எனது ஐம்பொறிகளும் என்னைச் சம்போகத்துக்கு இழுக்கின்றன. போகத்தை நாடுபவனுக்கு யோகமில்லை. போகி அழிந்து போவான். அந்த வழிக்கு என்னை விட்டு விடாதே என்கிறார். மேலும், நின் கருணைக் கரத்தால் என்னைப் பற்றிப் பிடித்தாய் ஆயினும் நான் நினது பிடியிலிருந்து விலகி இப்பொய் யுலக வாழ்வில் விழுந்து விடுவேன் போலிருக்கிறது. விட்டில் பூச்சி நெருப்பில் விழுவதுபோல, மாதர் மயக்கத்தில் தடுமாறி விழுந்து விடுவேன். மெய்ப்பொருளே, சிறியேன் செய்த பிழையைப் பெரியோர் பொறுப்பது கடன் அல்லவா. சிறியேனது பிறவி வேரறுப்பவனே, பொய்யனான என் னைக் கீழ்நிலைக்கு விட்டுவிடவேண்டாம். உயிர்களைக் காப்பாற்றுவதற்காக நஞ்சுண்டவனே, இருதலைக் கொள்ளியின் உள் எறும்புபோல இருக்கும் என்னைப் பிரிந்து போக விட்டுவிடாதே.

பொய்யான உடலை மெய்யென்று நம்பி ஏமாந்து திரியும் என்னை, உனது சொரூபத்தைப் பெறமுடியாமல் ஐம்பொறிகளால் கட்டுண்டு கிடக்கும் என்னைக் கைவிட்டு விடாதே.

நின் கருணா சமுத்திரத்தை நக்கத் தெரியாமல், கடல் நீரை நக்கும் நாய்போன்ற என்னை, வெள்ளத்தில் நிற்பவன் நாவறண்டு தவிப்பதுபோல, உன் அருள் வெள்ளத்தில் நின்றும் அதனைப் பெற நினையாமல் விலகிக்கொள்ளும் என்னை ஒதுக்கிவிடாதே.

*கொடுப்பதைவிட பன்மடங்காய்க் கிடைப்பது அன்பு.*

வெள்ளத்துள் நாவற்றி எங்கும் விடிந்திருளாம்
கள்ளத் துறைவார் கடன்.

(திருவருட்பயன்)

எனது உள்ளத்தில் குடியிருக்கும் நீ, உனது பேரானந்தத்தைக் கொடுத்தருள்வாயாக.

தந்தை போன்றவனே, நீ என்னை ஆட்கொண்டு காத்தருள வந்தமை கண்டேன். ஆயினும் நான் ஆயத்தமாயில்லையே. அதனால் நீ என்னை விட்டுவிடாதே.

கொடிய விஷத்தை அமிர்தமாய்க் கொண்டவனே, பிறவிப் பிணிக்கு அருமருந்தானவனே என்னை விட்டுவிட வேண்டாம். உன்னருளுக்குப் புதியவனாய் நான் வந்திருக்கிறேன். யானை உரி போர்த்தவனே, கொம்பரில்லாக் கொடி போலச் சுழலும் என்னைப் பற்றுக் கோடாயிருந்து காப்பாற்றுவாயாக. தியாகத்தின் சின்னமே, தொண்டர்தம் உள்ளத்தில் இருப்பவனே, அரிய மானிடப் பிறவியைப் பயன்படுத்தத் தெரியாதவனென்று, பேரின்ப நெறிக்குத் தகுதியில்லாதவன் என்று என்னைக் கைவிட்டு விடாதே. தேவர்களாலும் அடையப்பெறாத உன்னை, அன்பர்கள் அடையப் பெற்றனர். ஆயின் நான் சிறுமையில் சிந்தைகொண்டு அலைகின்றவனானேன். அதற்காக என்னை விட்டுவிடாதே. நீரற்ற மடுவில் துடிக்கும் மீன்கள் போல ஆபத்தில் துடிக்க என்னை விட்டுவிடாதே. மாதர் மயக்கத்தில் திரியும் என்னை உன் அன்பால் வசமாக்கி உன் அடியார் கூட்டத்தில் என்னைச் சேர்த்து விடுவாயாக.

விண்ணவரும் மண்ணவரும் அஞ்சி ஓடும்படி செய்த ஆலகால விஷத்தை அமிர்தமென உண்டவனே, பொய் நெறியில் போகும் என்னை மெய்நெறிக்கு இழுப்பாயாக.

கொன்றை அணிந்தவனே, கடைகின்ற மத்தால் கலங்கும் தயிர்போல, ஐம்பொறி வாயில் அகப்பட்டுக் கலங்கும் என்னைக் காப்பாயாக. பரம்பொருளே, நின் பழ அடியாரோடு பொய்யொழுக்கமுடைய என்னைச் சேர்த்து விடாதே.

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறி நின்றார் நீடுவாழ் வார்.

(குறள் 6)

இருள்சேர் இருவினையும் சேர்ந்து என்னைத் துன்புறுத்துகின்றன. ஆனபடியால் எனது அஞ்ஞான இருளைப்போக்கி ஆட்கொள்வாயாக. இறைவா, உன்னை நான் பாடியறியேன்; பணிவிடை செய்தறியேன். சிவன் எங்கிருக்கிறார் என்று தேடவும் இல்லை; ஓடவும் இல்லை; உருகவுமில்லை.

இவ்வாறெல்லாம் பாடிய வாதவூரர், இறைவனை நிந்தை செய்வதுபோலத் துதி செய்வதையும் பார்க்கலாம். இது நிந்தாஸ் துதியாகும்.

நீ உணவு உண்ணாமல் நஞ்சை உண்டாய்; குணம் இல்லாத (குணங்கடந்தவன்) மானிடன் (மானை இடது கையில் கொண்டவன்), தேய் மதியன் (மதியில்லாதவன் / - தேய்ந்த பிறை முடித்தவன்); பரதேசி (மாபரன்) என்றும் இகழ்வதுபோலப் புகழ்ந்து பாடுகின்றார்.

இப்படி இகழ்ந்து பேசியதற்காக என்னைப் புறக்கணித்தால், இன்னும் ஏசுவேன் என்கிறார். கபாலம் அணிந்தவன், தீயை ஏந்தியவன், பாம்பை ஆபரணமாகக் கொண்டவன் என்று உனது அடியவனான நான் சொன்னால் ஊரார் சிரிப்பார்கள். மேலும் புலித்தோல் உடுத்தவன், யானைத்தோல் போர்த்தவன், சுடுகாட்டில் நடனமாடும் பித்தன் என்றெல்லாம் பெரியோர்களுக்குச் சொல்லுவேன் என இறைவனோடு பேசுகின்றார் வாதவூரர்.

*கோடி கோடியாய்க் கொடுப்பினும் கோள் சொல்லாதே.*

பின்னர் நான் உன்னை வைதாலும் வாழ்த்தினாலும் என்னை ஒதுக்கித் தள்ளிவிட வேண்டாம் என்கிறார். நீ எனது ஆளுடைய அண்ணல்; நான் உனது அடிமை. உயிர்களின் அஞ்ஞானத்தை அழிக்கும் கடைசிச் செயலை செய்பவன். (கடையவன்) நீ ஆதலின் எனது அஞ்ஞானத்தை அழித்துவிடுவாயாக என்று நீத்தல் விண்ணப்பத்தின் கடைசிப் பாடலில் "கடையவனே" என விளித்து, முடித்த திறன் வியப்புக்குரியது.

நீத்தல் விண்ணப்பம் முழுவதும் அந்தாதி என்னும் செய்யுள் இலக்கண முறையில் பாடப்பெற்றுள்ளது. ஒரு பாட்டின் அந்தத்திலுள்ள பதம் அடுத்த பாட்டின் ஆதியாக மீண்டும் வருவது அந்தாதி (அந்தம்+ஆதி) ஆகும். அதனால், "கடையவனேனை" எனத் தொடங்கி, ஐம்பதாவது பாடலின் அந்தம் "கடையவனே" என நீத்தல் விண்ணப்பத்தை நிறைவு செய்தமை காண்போமாக.

குறிப்பு:

நீத்தல் விண்ணப்பம் முதலாம் பாடலை "கடையவனேனை" என்று எடுத்துப் பாடுதல் வேண்டும். கடையவனே எனத் தொடங்குதல் தவறு ஆகும். (கடையவனேனை- கடையவனான என்னை) (கடையவனே- கடைசிச் செயலைச் செய்யும் இறைவனே)

---

## மோட்சம்

ஒருமுறை ஸ்ரீ இரமண பகவானிடம் வந்திருந்த மாது ஒருவர், "சுவாமி! எனக்கு ஒரு கோரிக்கை இருக்கிறது, சொல்லலாமா" என்றாள். "என்ன வேண்டும்?" என்றார் பகவான். "எனக்கு மோட்சம் வேண்டும்" என்றாள். "ஓகோ, அப்படியா?" என்று கேட்டுப் பகவான் சும்மா இருந்தார். "ஆமாம் சுவாமி! வேறொன்றும் வேண்டாம். மோட்சம் ஒன்று கொடுத்தால் போதும்" என்று திரும்பவும் அந்த அம்மா சொன்னாள். பகவான் உதடுகளை மீறிவரும் சிரிப்பை அடக்கிக்கொண்டு "சரிசரி நல்லதுதான்" என்றார். "எப்போதோ கொடுக்கிறேன் என்றால் போதாது, இப்போதே கொடுக்க வேண்டும் என்றாளவள். "சரியாகப் போய்ச்சு" என்றார் பகவான். "கொடுக்கிறீர களா? போய் வருகிறேன்" என்று சொன்னாள் அம்மாது. "உம், உம்" என்று பதிலளித்தார் பகவான்.

அவள் வாயிலைத் தாண்டியவுடனே பகவான் உரக்கச் சிரித்துக்கொண்டே எங்களைப் பார்த்து "மோட்சம் ஒன்று கொடுத்தால் போதுமாம். வேறொன்றும் வேண்டாமாம்" என்றார். என் பக்கத்தில் இருந்த சுப்புலட்சுமி அம்பாள் தொடர்ந்து, நாங்களும் அதற்கே வந்திருக்கிறோம், வேறொன்றும் வேண்டாம். மோட்சம் கொடுத்தால் போதும் என்று மெதுவாகச் சொன்னாள். "ஓகோ அப்படியா? **வேறெதுவும் வேண்டாம் என்று எல்லாவற்றையும் விட்டுவிட்டால், மிஞ்சியது மோட்சம்தான். ஒருவர் கொடுப்பானேன்? எப்போதும் இருப்பதுதானே?**" என்றார் பகவான்.

அதெல்லாம் எங்களுக்குத் தெரியாது. பகவான்தான் எங்களுக்கு மோட்சம் கொடுக்க வேண்டும் என்று சொல்லிவிட்டு சுப்புலட்சுமி அம்மாள் போய்விட்டாள்.

பக்கத்திலிருந்த தொண்டர்களிடம் பகவான், "என்ன ஓய்! இவர்களுக்கு மோட்சம் கொடுக்க வேண்டுமாம். அதென்ன மூட்டையா, முடிச்சா கட்டிக் கொடுப்பதற்கு? வேறு ஒன்றும் கோரமாட்டார்களாம் ஓய்! மோட்சம் ஒன்று கொடுத்தால் போதுமாம். அது மாத்திரம் கோரிக்கை இல்லை போலிருக்கு. **இருப்பவற்றையெல்லாம் விட்டுவிட்டால் என்ன மிஞ்சுகிறதோ அதுதான் மோட்சம். அவற்றையெல்லாம் நீக்குவதற்குத்தான் சாதனை செய்யணும்**" என்றார் பகவான்.

-சிவதொண்டன்-

*கூட்டுப் பிரார்த்தனை மனித நேயத்தை வளர்க்கும்.*

# விதுர நீதி

(தொடர்ச்சி....

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

## தேவர்கள் காப்பது எப்படி?

தேவர்கள், மாடு மேய்ப்பவனைப் போலக் கையில் தடியை எடுத்துக்கொண்டு (மனிதனைக்) காப்பது இல்லை. எந்த மனிதனைக் காப்பாற்ற விரும்புகிறார்களோ அவனுக்கு நல்ல புத்தியை உண்டாக்குகிறார்கள். ஒரு மனிதன் எவ்வளவுக்கு எவ்வளவு நல்ல காரியங்களில் மனதை ஈடுபடுத்துகிறானோ அந்த அளவுக்கு விரும்பியவை எல்லாம் அவனுக்கே கிடைக்கின்றன. இதில் சந்தேகமே இல்லை.

## வேதங்கள் கைவிடுவது யாரை?

கபடத்தோடு இருப்பவனை வேதங்கள் பாவத்திலிருந்து கரையேற்றுவதில்லை. இறக்கை முளைத்த பறவைகள் கூட்டைத் தள்ளுவதுபோல இறுதிக் காலத்தில் வேதங்கள் அவனைக் கைவிட்டு விடுகின்றன.

## நீக்க வேண்டியவை.

கள் குடிப்பது, கலகம் செய்வது, மக்கள் கூட்டத்துடன் விரோதம், கணவனையும் மனைவியையும் பிரிப்பது, பங்காளிகளுக்குள் பேதம் செய்வது, ராஜத்துரோகம், ஆண் பெண்களுக்குள் சண்டை மூட்டி விடுவது, இத்தகைய மிகவும் தீயதான வழிமுறைகள் முற்றாக நீக்க வேண்டும்.

மகாபாரத காலத்தில் கூறப்பட்டவை இன்று விரிவுபடுத்தப்படவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இது காலத்தின் நியதி. தர்மங்களும் இவ்வாறு காலத்துக்குக் காலம் வேறுபடும் எனக் கூறப்படுவதும் இவ்வடிப்படையிலாகும். தற்போது நீக்கப்படவேண்டியவை என்பது நீண்ட பட்டியல் ஆகியுள்ளது.

## நடுவராகத் தகுதி இல்லாதவர்கள்.

ரேகை பார்த்துச் சொல்பவன், முன்பு திருடனாக இருந்தவன், தவறான தராசுப் படிக் கற்களைக் கொண்டு வியாபாரம் செய்பவன், யோகிவேடம் பூண்ட வஞ்சகன், மருத்துவன், பகைவன், நண்பன், தீய ஒழுக்கமுடையவன் என்னும் இவர்களை நடுவர்களாக நியமிக்கக் கூடாது.

## பயத்தை நீக்குவதே, பயத்தைக் கொடுக்கும்.

அக்னி ஹோமம், மௌனம், படித்தல், யாகம் என்னும் இந்த நான்கும் பயத்தைப் போக்கும். இவைகளே, கௌரவத்திற்காகச் செய்யப்பட்டால், கபடமாகச் செய்யப்பட்டவைகளாகிப் பயத்தைக் கொடுக்கின்றன.

## பிரும்மஹத்தி செய்வதற்கு சமமானவை.

வீட்டிற்குத் தீ வைப்பவன், விஷம் வைப்பவன், மனைவியைத் தவறான நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி அதன்மூலம் பிழைப்பவன், ஹோமத்திற்கு உதவும் மூலிகையை விற்பவன்,

*உதவி செய்ய யோசிக்க வேண்டாம். உதவி பெற யோசிக்க வேண்டும்.*

ஆயுதம் செய்பவன், கோள் சொல்பவன், நண்பனுக்குத் துரோகம் செய்தவன்; மாற்றான் மனைவியை விரும்புபவன், சிசுவைக் கொன்றவன், குருவின் மனைவியை அடைந்தவன், கள் குடிக்கும் அந்தணன், மிகவும் குரூரமானவன், நாத்திகன், வேத நிந்தை செய்பவன், உயர்ந்த பழக்க வழக்கங்கள் இல்லாதவன், அரசாங்க உத்தியோக பலத்தால் லஞ்சம் வாங்குபவன், இரகசியமாக ஆடு மாடுகளைக் கொல்பவன், பலமிருந்தும் காப்பாற்று என்பவனைத் துன்புறுத்துபவன் இத்தனை பேர்களும் பிரும்மஹத்தி செய்தவனுக்குச் சமமானவர்கள்.

**ஒருவனை அறிதல்.**

பொருளை இருட்டில் சிறிய தீப்பந்தத்தினாலும், தர்மத்தை மனிதனின் நடவடிக்கையினாலும், சாதுவை ஜீவ காருண்யச் செயல்களினாலும் தெரிந்து கொள்ளலாம்.

பயம் வந்தால் சூரனையும், பொருட்களுக்குக் கெடுதல் வந்த நெருக்கடியின்போது தீரனையும் ஆபத்து முதலானவை வந்தபோது நண்பனையும், விரோதிகளையும் தெரிந்து கொள்ளலாம்.

**எது எதை அழிக்கிறது?**

முதுமை வடிவழகை அழிக்கிறது.
ஆசை தைரியத்தை அழிக்கிறது.
மரணம் உடலை அழிக்கிறது.
பொறாமை, தர்மம் செய்வதை அழிக்கிறது.
கோபம், செல்வத்தை அழிக்கிறது.
ஒழுக்கமில்லாதவர்களுடன் சேர்தல் ஒழுக்கத்தை அழிக்கிறது.
காமம், வெட்கத்தை அழிக்கிறது.
அகங்காரமோ, எல்லாவற்றையும் அழிக்கிறது.

**எது இல்லை.**

குரோதம் கொண்டவனுக்குப் பொருள் இல்லை.
இம்சை செய்பவனுக்கு நண்பன் இல்லை.
குருபியானவனுக்கு பெண் இல்லை.
முயற்சி இல்லாதவனுக்கு கல்வி முதலானவை இல்லை.
காமம் கொண்டவனுக்கு வெட்கம் இல்லை.
சோம்பேறிக்கு செல்வம் இல்லை.
உறுதி இல்லாதவனுக்கோ ஒன்றுமே இல்லை.

**செல்வம்**

செல்வம், மங்களகரமான நல்ல காரியத்தால் உண்டாகிறது; சாமர்த்தியத்தால் பெருகுகிறது. விரைவான திறமையான நடவடிக்கைகளால் வேரூன்றுகிறது. அடக்கத்தால் நிலைத்து நிற்கின்றது.

**மேன்மை அடையச் செய்பவை.**

அறிவு, குடிப்பிறப்பு, அடக்கம், கல்வி, வீரம், அளவோடு பேசுவது, சக்திக்குத் தகுந்த தானம், நன்றி உணர்வு என்றும் இந்த எட்டுக் குணங்களும், மனிதனை மேன்மை அடையச் செய்கின்றன.

*பிரார்த்தனையில் விரோதிகளுக்காகவும் வேண்டுபவன் தோற்பதில்லை.*

நல்ல குணம் கொண்டவர்கள், யாகம், தானம், படித்தல், தவம் என்னும் நான்கையும் தேடி அடைகின்றார்கள். அடக்கம், சத்தியம், நேர்மை, அகிம்சை என்னும் நான்கையும் அனுசரித்து நடக்கிறார்கள். மேலே குறிப்பிட்ட எட்டும் தர்மத்திற்கு எட்டுவிதமான வழிகளாகும். இதில் முதல் நான்கும் ஆடம்பரத்திற்காகவும் விளம்பரப்படுத்தப்படுகிறது. அடுத்த நான்கும் மகாத்மாக்களைத் தவிர மற்றவர்களிடம் இருப்பது இல்லை.

அறிவு, ஞானம், வயது, அனுபவம் முதலியவைகளில் சிறந்த பெரியவர்கள் இல்லாத சபை, சபை ஆகாது. யார் தர்மத்தைச் சொல்லவில்லையோ, அவர்கள் பெரியவர்களாக மாட்டார்கள். எதில் சத்தியம் இல்லையோ அது தர்மமாகாது. சத்தியம் கபடத்துடன் கூடி இருந்தால், அது சத்தியமாகாது.

**பத்துக் காரணங்கள்.**

சத்தியம், அடக்கம், சாத்திரஞானம், தேவதை வழிபாடு, குலத்தை மேன்மைப்படுத்தும் காரியம், ஒழுக்கம், பலம், செல்வம், தரத்தனம், சாமர்த்தியமாகப் பேசுதல் என்னும் பத்தும் சொர்க்கத்தை அடையச் செய்யும் காரணங்கள் ஆகும்.

**பாவ புண்ணியம்.**

அடிக்கடி பாவம் செய்வது, அறிவை நாசம் செய்கிறது. அறிவிழந்த மனிதன் என்றென்றும் பாவத்தையே செய்யத் தொடங்குகிறான். ஆகவே மனிதன் கடுமையான விரதம் கொண்டவனாகப் பாவத்தைச் செய்யாமல் இருக்க வேண்டும்.

அடிக்கடி புண்ணியம் செய்தால் அது அறிவை மேன்மை அடையச் செய்கிறது. அறிவில் மேன்மை அடைந்த மனிதன் என்றென்றும் புண்ணியத்தையே செய்யத் தொடங்குகிறான். புண்ணியம் செய்பவன் புகழ் உடையவனாகிப் புண்ணியமான இடத்தையே அடைவான். ஆகவே மனிதன், மனத்தை நன்றாக ஒருவழிப்படுத்திப் புண்ணியத்தையே செய்ய வேண்டும்.

பொறாமை இல்லாதவனும், நல்வழியிலேயே அறிவைச் செலுத்துபவனுமான மனிதன் எப்போதும் சுபகாரியங்களையே செய்வதால், துயரங்கள் அவனை நெருங்காது. எங்கும் புகழையே அடைகிறான்.

அறிவாளிகளான சான்றோர்களிடமிருந்து நல்ல அறிவைச் சம்பாதிக்கும் மனிதன், அறம், பொருள் முதலானவைகளை அடைந்து சுகமாக வாழத் தகுந்தவனாகிறான்.

**தயார் செய்துகொள்.**

இரவில் சுகமாக வாழ்வதற்குத் தேவையானவைகளைப் பகலில் தேடி வைத்துக் கொள்ள வேண்டும். மழைக் காலத்தில் சுகமாக வாழ்வதற்கு வேண்டியவைகளை மற்ற எட்டு மாதங்களில் தயார் செய்துகொள்ள வேண்டும். அதுபோல முதுமைக் காலத்தில் சுகமாக வாழ்வதற்கு வேண்டியவைகளை இளமைக் காலத்திலேயே ஆயத்தம் செய்து வைக்க வேண்டும். வாழும் காலத்தில் சுகமாக வாழத் தேவையானவைகளை நல்ல செயல்கள், தர்மம் முதலியவைகளை வாழ்நாள் முழுவதும் செய்யவேண்டும்.

*அளிப்பதற்கும் பெறுவதற்கும் எளிதானது அன்பு ஒன்றே.*

**போற்றப்படுபவர்**

சாப்பிட்ட உணவு சமிபாடடைந்த பின்னரும் அதைப் போற்றுவார்கள்.

நல்ல மனைவியை, அவள் இளமை கடந்த பிறகும் போற்றுவார்கள்.

போர்க்களத்தில் வெற்றியடைந்த வீரனைப் போற்றுவார்கள்.

தத்துவத்தை அறிந்து ஞானமடைந்த தவசியைப் போற்றுவார்கள்.

**இன்னொரு தோஷம்.**

அதர்மத்தால் சம்பாதிக்கப்பட்ட செல்வத்தால், எந்தத் தோஷத்தை தீர்க்க முயற்சி செய்தாலும் அந்தத் தோஷம் தீர்க்கப்படாதது மட்டுமல்ல புதிதாக இன்னொரு தோஷமும் சேர்ந்து கொள்கிறது.

**தலைவனான யமன்.**

குருவானவர் நல்ல மனம் கொண்டவர்களுக்கு தலைவர்.

தீயமனம் கொண்டவர்களுக்கு அவர்களை அடக்கி ஆளும் அரசன் தலைவராவான்.

உள்ளே மறைக்கப்பட்ட பாவத்தை உடையவர்களுக்கோ, சூரியனின் மகனான யமன் தலைவனாகிறான்.

**தெரிந்துகொள்ள முடியாதது.**

ரிஷிகள், நதிகள், மகான்கள், இவர்களின் பிறப்பு; பெண்களின் கெட்ட நடத்தை; இவைகளுக்கான மூல காரணத்தைத் தெரிந்து கொள்ள முடியாது.

பிரம்மத்தை அறிந்தவர்களுக்கு தொண்டு செய்வதிலும், அவர்களைப் பூஜிப்பதிலும் ஈடுபாடு கொண்டவன்; கொடை வள்ளல், பங்காளிகள், உறவினர்கள் ஆகியோரிடம் இனிமையாகவும் நேர்மையுடனும் நடந்து கொள்பவன், நல்ல ஒழுக்கமுள்ளவன்- இப்படிப்பட்ட மன்னன் நீண்டகாலம் பூமியை ஆள்வான்.

சூரன், கற்றறிந்தவன், வேலை செய்யும் முறை அறிந்தவன்- என்னும் மூன்று வகையான மனிதர்களும் தங்கம் விளையும் பூமியை உருவாக்குவார்கள்.

புத்தியினால் ஆராய்ந்து செய்யப்பட்ட காரியம் தலை சிறந்ததாகிறது. உடல் ஆற்றலால் செய்யப்பட்ட காரியங்கள் நடுத்தரமானவைகளாக ஆகிவிடுகின்றன. முழங்கால் தேயச் செய்யும் காரியங்கள் அதமமானவைகள், பாரம் சுமந்து செய்யும் காரியங்கள் அதமத்திலும் அதமமாகும்.

“துரியோதனன் முதலியவர்களிடத்தில் அதிகாரத்தைத் தந்துவிட்டு நீங்கள் எப்படிச் செல்வத்தையும், இராஜ்யத்தையும் விரும்புகிறீர்கள்? நல்ல குணங்கள் அனைத்தும் கொண்ட பாண்டவர்கள் உங்களைத் தந்தையாகவே நினைக்கிறார்கள். நீங்களும் அவர்களை உங்கள் சொந்தப் பிள்ளைகளாக மதித்து வாழுங்கள்” என்று விதுரர், திருதராஸ்டிரனுக்குக் கூறினார்.

(தொடரும்...

*தாராள குணம் படைத்தோரின் செல்வம் வீணாகாது.*

# படங்கள் தரும் பதிவுகள்



வைகாசிமாத ஞானச்சுடர் வெளியீட்டின்போது வெளியீட்டுரை, மதிப்பீட்டுரையாளருடன் சிறப்புப்பிரதி பெற்ற அன்பர்களிற் சிலர்.



அடுத்தவனுக்குக் கிடைத்துவிட்டது என்று மனிதன் பொறாமைப்படாத ஒரே விஷயம் "மரணம்".



வைகாசிமாத ஞானச்சுடர் வெளியீட்டின்போது
சிறப்புப்பிரதி பெற்ற அன்பர்களிற் சிலர்.



இலட்சியம் இல்லாத வாழ்க்கை, துடுப்பு இல்லாத படகைப் போலாகும்.

# மனிதனின் உடல் வடிவமே ஆலய அமைப்பு

– திரு காரை எம்.பீ. அருளானந்தன் அவர்கள் –

ஒரு மனிதனுடைய உடலமைப்பை ஆதாரமாகக் கொண்டே திருக்கோயில்கள் கட்டப்பட்டு, வழிபாட்டுக்கு உரிய அமைப்பாக மதிக்கப்படுகின்றன.

குண்டலினி சக்தி உறங்கிக் கிடக்கும் மூலாதாரமே கொடிமரமாகச் சித்தரிக்கப்பட்டு ஸ்தாபிதம் செய்யப்பட்டுள்ளது. கொடிமரத்தில் காணப்படும் 32 வளையங்கள் மனித உடலின் முதுகுத் தண்டிலுள்ள 32 எலும்புகளைக் குறிப்பதாகும். "32" என்பது எண் கணிதத்தில் குருவின் ஆதிபத்தியத்தில் மிகுந்த இலாக்கியத்திற்குரியதாகும். மேலும் மனிதனுடைய முப்பத்திரண்டாவது வயதில்த்தான் அறிவுப் பல் பலம்பெறுகிறது எனலாம்.

கொடிமரத்தில் காணப்படும் கொடிக் கயிறுகள் இடகலை, பிங்கலை என்ற நாடிகளைக் குறிக்கின்றன. அவற்றின் வழியே மூச்சை சரியான முறையில் அமைத்து யோகம் பயிலும்போது, ஆத்மா "ஆனந்தம்" எனப்படும் இறையடியை அடைந்து பிறவியிலாப் பெரு நிலையை அடைகிறதென்பதைக் குறிக்கவே திருவிழாவின்போது கொடியேற்றம் நடைபெறுகிறது.

எண்ணங்களின் பிறப்பிடமாக விளங்கும் தொப்புள் ஸ்தானத்தில் சிவனுடைய வாயிற் காப்போனாகிய நந்தியைப் பிரதிஷ்டை செய்வதன்மூலம் எண்ணங்களை அடக்கி மனதினை தூய்மைப்படுத்த வேண்டும் என்பது உணர்த்தப்படுகிறது. காமம், பொறாமை, ஆணவம் போன்ற தீமைகளை இருதயத்திலிருந்து நீக்க வேண்டுமென்பதை பலியிடப்பட வேண்டுமென்பதை "பலிபீடம்" குறிக்கிறது.

கர்ப்பக்கிரகம் அல்லது மூலஸ்தானத்தை பிரம்ம கபால உருவில் அமைப்பது வழக்கம். புருவ மத்தியில் ஆக்ஞா சக்கரத்தில் ஆன்மநேய ஒருமைப்பாடு ஏற்படும்பொழுது ஆன்ம ஒளி ஏற்படும் என்பதைக் குறிக்கவே லிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

**தத்துவம்:**

கோபுர வாயில்
மூலாதாரம்- அதிதேவதை, விநாயகர், முருகன்
சுவாதிட்டானம்- பிரம்மா, சரஸ்வதி - பிருதிவி தத்துவம்
மணிபூரகம்- திருமால், லட்சுமி - அப்பு தத்துவம்
அனாகதம்- சிவன், சக்தி - தேயு தத்துவம்
விசுக்தி- மகேசன், மகேசை - வாயு தத்துவம்
ஆக்ஞை- சதாசிவன், மனோன்மணி - ஆகாயத் தத்துவம்

கர்ப்பக்கிரகத்தின் மேலுள்ள ராஜ கோபுரம் பரவெளித் தத்துவமாகிய நத்தனத்தைக் குறிப்பதாகும்.

ஆறு மண்டபங்கள்:

மூலாதாரம்- கர்ப்பக்கிரகம்

சுவாதிட்டானம்- அர்த்த மண்டபம்

மணிபூரகம்- மகா மண்டபம்

அனாகதம்- ஸ்நபன மண்டபம்

விசுத்தி- அலங்கார மண்டபம்

ஆக்ஞை- சபா மண்டபம்

ஆயிரங்கால் மண்டபம், மூளையிலிருக்கும் 1000 இதழ்கள் கொண்ட தாமரை போன்ற உள் மணியையும் பக்கத்தில் உள்ள தீர்த்தம், மூளையின் பக்கத்தில் உள்ள நீர் நிலையையும் குறிப்பதாகும். இதைக் குறிக்கவே கோவில்களில் உள்ள தெப்பக்குளத்தில் தாமரை மலர்கள் வளர்க்கப்படுகின்றன.

நடராஜருடைய பஞ்ச சபா மண்டபங்களையும், பஞ்ச கோசங்களாக பாவிப்பதுண்டு. அன்னமய கோசம் இராஜ சபையாகவும், பிராணமய கோசம் தேவ சபையாகவும் மனோமய கோசம் நிருத்த சபையாகவும், விஞ்ஞானமய கோசம் கனக சபையாகவும், ஆனந்தமய கோசம் சிற்சபையாகவும் விளங்குகிறது.

இத்துணை மகத்துவ சிறப்புக்களை உள்ளடக்கி பெரியோர்கள் வடிவமைத்துக் கொடுத்துள்ள கோவில்களில் வளமையைப் பாதுகாத்து நாமும் நம் கலாசாரமும் உய்ய இறைவனை இறைஞ்சுவோமாக.

---

## ஜீவாத்மாவும் பரமாத்மாவும்

ஒரு பெரிய மகான் இருந்தார். அவர் தன் சீடர்களுக்கு பல உபதேசங்களைக் கூறிவந்தார். ஒரு நாள் அவர் "தர்மம், அதர்மம் ஆகிய வினைகள் ஏதும் பரமாத்மாவான பகவானை நெருங்காது" என்று கூறிக்கொண்டிருந்தார். இதைக்கேட்டு சீடர்களில் ஒருவன், "குருவே! மனிதனின் உள்ளே ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒரு கிளைப் பறவைகள்போல் இருப்பதாகக் கூறினீர்கள். பரமாத்மாவோ ஜீவாத்மாவை ஒட்டியே இருக்கிறார். அவரைக் கர்மங்கள் அண்டாமல் எப்படி இருக்க முடியும்?" எனக் கேட்டான். குரு அன்றைய பாடத்தை முடித்துவிட்டு, சந்தேகம் கேட்ட சீடனை அருகில் அழைத்து பகவானுக்குப் படைத்த சர்க் கரைப் பொங்கலை கைநிறையக் கொடுத்துச் சாப்பிடச் சொன்னார். நெய் ஒழுகும் பொங்கலை ஆவலுடன் சாப்பிட்டான். அவன் கை முழுவதும் நெய் ஒட்டிக் கொண்டிருந்தது. "குருவே கொஞ்சம் சீயக்காய் பொடி கொடுங்கள். கையைக் கழுவ வேண்டும்" என்றான். குருவும் சீயக்காய்த்தூளைத் தந்து, "கையைக் கழுவிவிட்டு சீயக்காய் பொடி போட்டு உன் வாய், நாக்கு எல்லாவற்றையும் கழுவிவிட்டு வா" என்றார்.

"கையில் மட்டும்தான் நெய் ஒட்டியிருக்கிறது. வாய், நாக்கில் நெய் ஒட்டவேயில்லை" என்றான் சீடன்.

குருநாதர் "ஏனப்பா! சர்க்கரைப் பொங்கலைக் கையில் எடுத்து வாயில் போட்டு சாப்பிட்டாய். ஆனால் கையில் ஒட்டிய நெய் வாயில் இல்லை என்கிறாயே... அப்படித்தான், ஜீவாத்மாவின் விஷயங்கள் பரமாத்மாவின் அருகில் இருந்தும் ஒட்டாமல் இருக்கின்றன" என்றார் குரு.

-பக்தி-

பலமற்றவன் நேர்மையுள்ளவனானால் அவனும் பலவானே.

(தொடர்ச்சி...

# கண்டோம் கதிர்காமம்

– திரு அன்னைதாசன் அவர்கள் –

இப்பாடசாலை மாணவர்களது நிகழ்வைத் தொடர்ந்து நாம் எமது பேருந்தை நோக்கி நடந்து வரும்பொழுது எங்களுடன் இவர்களது பாடசாலை ஆசிரியைகள் இருவரும் வந்தனர். ஏறக்குறைய 500 மீற்றர் தூரம் நடந்து வந்தே இவர்களுக்கான பேருந்தைப் பிடிக்கவேண்டிய கஷ்ட நிலையைப் பகிர்ந்து கொண்டனர். இதன் மத்தியிலும் ஒரு ஆசிரியை மிக ஆர்வமாக தனது வகுப்பு மாணவர்களுக்கு விசேடமாக ஒரு தொகுதி எமது யாழ் வலய வினாத்தாள்களையோ இங்கு உள்ள பாடசாலையினது ஏதாவது ஒரு வினாத் தாளையோ தந்துதவும்படி எமக்குக் கோரிக்கை விட்டதுடன் எமது விலாசத்தையும் பெற்றிருந்தமை அவர்களது கற்பித்தல் அவாவைக் காட்டி நின்றது. அத்தோடு அவர்களுக்குரிய போக்குவரத்து வண்டியும் இல்லை. காரணம் பாடசாலை விடுமுறை நாளானபடியால் அச் சேவையையும் நிறுத்தி விட்டார்களாம். தங்கள் குடும்ப வறுமைச்சூழல் மத்தியிலும் பிள்ளைகளுக்கு கற்பிப்பதற்காக ஒரு கஷ்டப் பிரதேசப் பாடசாலைக்கு வந்துபோகும் நிலமையில் தொடர்ச்சியாக ஏழு வருடங்களுக்கு மேல் கற்பித்துக்கொண்டிருப்பதையும் அறிய முடிந்தது. இது எம் ஆசிரிய உலகிற்குச் சமர்ப்பணம்.

இதனைத் தொடர்ந்து எமது பயணம் கண்டி குண்டாசாலை அம்பாகோட்டை நோக்கியதாக இருந்தது. இங்கு நாம் சென்றபொழுது கண்ட காட்சிகள் உண்மையில் எங்கள் எல்லோர் உள்ளங்களையும் தொட்டனவாகவே இருந்தன. இதோ அதனை உங்களுடன் படிப்படியாகப் பகிர்கின்றேன். மிகவும் சிக்கலான பாதை. நகரிலிருந்து கிராமத்திற்குள் நுழைகின்றோம். தார் போட்ட வீதிகள் குறைவு. நாம் சென்ற பகுதிகள் டியகம, அநேத்லத்த, அம்பாகோட்டை என அறியமுடிந்தது. மிகமிகப் பின்தங்கிய முழுக்க முழுக்கப் பெரும்பான்மைச் சகோதரர்களோடு இவர்களும் ஒருசிறு கூட்டமாக வாழ்கிறார்கள். ஒரு சிறு தமிழ்ப் பாடசாலை உண்டு. அப்பாடசாலைக்கு ஒரு கிலோமீற்றர் இரண்டு கிலோமீற்றர் தொலைவிலிருந்தும் பிள்ளைகள் வருகின்றார்கள். 1950- 60களில் எமது பாடசாலைகள் இருந்த கோலத்தில் ஒரே ஒரு நீண்ட வகுப்பறைக் கட்டிடம். அலுவலகமும் அதில்த்தான் இருந்தது. ஆனால் ஒரு முன்னேற்றத்தைக் குறிப்பிட்டே ஆகவேண்டும். ஒரு அழகான விளையாட்டு முற்றம் அமைத்திருந்தனர். அதனை N.G.O வழங்கியிருந்தது. அதன் எதிர்ப்புறத்தில் ஓர் அம்பிகை ஆலயம் அதுவும் வளரும் நிலையில்த்தான் உள்ளது. பெரிதாக கோபுர அமைப்போ பண்டிகை அமைப்போ இல்லை. அதன் அருகில் பூசகரின் இல்லம் அமைந்தது காணக்கூடியது. எம்மில் சிலர் அங்கு சென்று அம்பிகையை வழிபட்டனர்.

ஆனால் நாங்கள் செல்லவேண்டிய பகுதி 2 கிலோமீற்றர் தள்ளியே இருந்தது. அவ்விடம் சென்றோம். எங்களை ஒரு பொது மண்டபத்திற்கு கூட்டிச் சென்று தங்க வைத்தனர். சம்பந்தப்பட்டவர்கள் பிள்ளைகளை ஆயத்தமாக்குவதில் ஈடுபட்டிருந்தனர். இதனைச் சூழ்ந்தே விக்ரோறியா அணை உள்ளது.

அவ்வாற்றின் மருங்கில் நாம் நின்ற இடத்திலிருந்து $^1/_2$ கிலோமீற்றர் தொலைவில் ஓர் ஆலயம் முருகன், பிள்ளையார் அனைத்து உருவங்களும் சீமெந்து சிலையாகச் செய்து வைத்திருந்தனர். பூசாரியார் வந்தார். பிள்ளைகள் கூடினர். வரிசை எடுத்தனர். பான்ட் வாத்தியம், என்னடி ராக்கம்மா மெட்டில் இசைக்க எம்மை அழைத்துக்கொண்டு ஒழுங்கு பண்ணப்பட்ட மண்டபத்திற்கு சென்றனர். வாத்தியக் கோஷ்டியினரில் பெரும்பான்மையினராகிய சிங்களக் கலாச்சாரச் சாயல் தெரிந்தது. தொடர்ந்து வாசித்த மெட்டுக்கள் கண்டிய நடனத்திற்குரிய மெட்டுக்களாகவே இருந்தன.

பிள்ளைகள் கோல உடையின்றித் தங்கள் தங்கள் வசதிக்கேற்ற வகையில் பஞ்சாபி, பாவாடை சட்டை, சல்வார் எனப் பலவித உடுப்புக்களை அணிந்து பச்சை, மஞ்சள், சிவப்புக் கலரில் சின்னச் சிட்டுக்களாக ஆடி ஆடி வந்தனர். ஆனாலும் அவர்களின் வறுமையின் சாயல் தெரிந்தது. இத்தனைக்கும் மத்தியில் விரலுக்கேற்ற வீக்கம் என்ற வகையில் எம்மை அன்போடு அழைத்து ஆனந்த உபசரிப்பு வழங்கினர்.

தலைமையுரையில் நீண்ட நாட்களாகப் பாவனையற்றிருந்த அந்த மண்டபத்தைப் புனரமைத்து ஓரளவுக்கு இந்த நிலையிலேனும் பாவிக்கக் கூடிய நிலைக்கு மாற்ற தாங்கள் பட்ட கஷ்டங்களை விளக்கியபொழுது இப்படியான ஒரு நிகழ்வை தொடர்ந்து நடத்துவதற்கு அவர்களுக்குரிய பல்வேறு வகையான கஷ்டங்களையும் உணரமுடிந்தது. கண்டி சின்மயாமிஷன் கார்த்திக் சுவாமிகளின் பகீரதப்பிரயத்தனத்திலேயே இன்று இங்கு ஓர் அறநெறிப் பாடசாலையின் அங்குரார்ப்பண நிகழ்வு நடைபெறுகின்றது என்பதை அப்பொழுதுதான் எம்மில் பலரால் உணர முடிந்தது. 40-50 வரையான பிள்ளைகள் பங்குபற்றியிருந்தனர். இதுவரை இப்படியான ஓர் வகுப்பில் அவர்கள் பங்குபற்றியதும் இல்லை. இவ்வகுப்பைப் பற்றி அறிந்ததும் இல்லை என அங்குள்ள சில பெற்றோர்களுடன் கலந்துரையாடியபொழுது உணர முடிந்தது. அத்துடன் அவர்களின் ஜீவனோபாயமாக பல கிலோமீற்றருக்கு அப்பாலுள்ள தோட்டங்களிற்குச் சென்று அன்றாட கூலி வேலை செய்துவரும் பிழைப்பைக் கொண்டு நடாத்துகின்ற நிலை. ஒரு சிலர் தங்களின் சிறு நிலத்தில் பயிர்வகை செய்தபொழுதிலும் இடப்பிரச்சினை, நீர்ப் பிரச்சினை என்பவற்றால் முழுநேர விவசாயம் தமக்கு வேண்டிய ஊதியத்தைத் தர முடியாது என்ற மனப்பான்மையை பலரிடத்தும் காணமுடிந்தது. தொழில்கூட, விறகு வெட்டல் ஒப்பந்த அடிப்படையிலாம். கல்லுடைத்தல் ஆகிய தொழிலும் ஈடுபடுவார்களாம். மொத்தத்தில் அனைவரும் அன்றாடம் உழைத்து உண்ணும் தொழிலாளர் வர்க்கத்தினர். இப்பிள்ளைகள் மாற்றுமதச் சூழலில் வாழ்கின்றார்கள். இவர்களை சைவச் சூழலில் வாழ்வதற்குரிய ஓர் அடிப்படைக் காரணியாக இவ் அறநெறிப் பாடசாலை அமையவேண்டும், உதவ வேண்டும் என்ற பெருநோக்கிலேயே பல கிலோமீற்றர் தொலைவிலுள்ள கண்டியிலிருந்து சின்மயாமிஷன் சுவாமிகளும் தொண்டர்களும் வந்திருக்கின்றனர் என்ற செய்தியையும் அறிய முடிந்தது.

சின்மயாமிஷன் சுவாமிகளின் உரை நடந்தது. மிகவும் சுவாரஷ்யமாக சூழலுக்கேற்ற வகையில் பேசினார்கள். சில அரசியல் பிரமுகர்களும் வந்திருந்தனர். அவர்களும் தமது உரையில் அறநெறிப் பாடசாலையின் தேவையை விதந்துரைத்ததுடன் தாங்களும் தங்களாலியன்றளவுக்கு இப்பணிக்கு உதவுவதாக வாக்களித்திருந்தனர். சின்மயமிஷன் சுவாமிகள் வாரந்தோறும் வந்து இந்த

சந்தேகம் ஏற்படும்போது மனச்சாட்சி சொல்வதே சரியானது.

மண்டபத்தில் இவ்வகுப்புகளை நேர்த்தியாக நடாத்துவதற்கு உதவுவதாகவும், இதற்கு உதவியாக ஒரு குழுவைத் தெரிவுசெய்ய வேண்டும் என்றபொழுது அங்குள்ளோர் களைத் திரட்டப்பட்டபாடு என்னென்பது அவ்வளவிற்கு பொதுப்பணிகளுக்குரிய செயற் பாடு இவர்களுக்கு ஓர் புதிய அனுபவமாக இருப்பதைக் கண்ணுற்ற, எமது ஆச்சிரம சுவாமிகளும், ஏனைய பாடசாலைக்குச் செய் வதுபோன்று உங்கள் பாடசாலையை முன் னுரிமைப்படுத்தி செய்யவேண்டிய தேவையை உணர்கிறோம். முடிந்தளவு செய்வோம் என உறுதியளித்த இதேவேளை சுயம் சேவா சங்கத்தினரும் தாமும் பக்கபலமாக உதவு வோம் என்றும் உறுதியளித்தது; அம்மக்கள் மத்தியில் ஓர் நம்பிக்கையை ஏற்படுத்தியது.

உண்மையில் அன்பான வாசகர்களே இப்பிள்ளைகளை வேற்றுமதச் சூழலில் இருந்து எமது மதச் சாயலுக்கு மாற்றுவதற்கு ஓர் அடிப்படையாக இந்த அறநெறிப் பாட சாலை அமைய சைவ மக்களாகிய நாம் ஒவ்வொருவரும் எம்மாலான சிறு பங்களிப்பை யேனும் நல்குதல் எமது பொறுப்பாகும் என் பதை இந்நிகழ்வுகள் எங்கள் உள்ளங்களில் விதைத்தது என்பது ஓர் நிறைவான செய்தி என்பதைப் பகிர்கிறேன்.

நிறைவாக ஓர் கலந்துரையாடலுடன் பி.ப. 3மணியளவில் கூட்டம் நிறைவுக்கு வந்து எங்களிற்கு ஓர் அருமையான விருந்தும் தந்தார்கள். இவற்றையெல்லாம் ஒழுங்கமைத் தது கண்டி சின்மயாமிஷன் சுவாமிகளும் தொண்டர்களும் என அறியமுடிந்தது.

சற்று ஆறிக்கொண்டு இருக்கும் வேளை அவர்கள் தங்கள் பிரதான வழிபாட் டுத் தலம் சற்றுத் தூரத்தில்தான் இருக்கிறது. அதனையும் நீங்கள் தரிசித்தே செல்ல வேண்டும் என்று அன்புக் கட்டளை இட்டனர். எனவே அவர்களின் அன்புக் கோரிக்கைக்கு இணங்க...

(காட்சி தொடரும்...



# கந்தன் பாமாலை

– திரு பொ. பாலேஸ்வரன் அவர்கள் –

நினைப் போர்க்கு நெஞ்சம் நிறை
வெய்தும் கணப் பொழுதேனும்
உனை மறவா திருப்போர்க்கு
காரியம் கை கூடும்.

வினை தனை அறுத்திட
வேண்டித் துதிப் போர்க்கு
கடி தெனவே வந்து
முன் காட்சி தந்திடவே.

அடியார் இருள் தீர
அருள் தந்த முருகா
படிதான் என நினைக்கும்
உன் பத்ம பாதமே சரணம்!

அன்பருக் கருளும் ஆறுமுக வேலவா
அருளினைத் தருவாய் வள்ளி மணாளா
தேவரும் மூவரும் போற்றிடும் வேலா
தீஞ்சுவை நீயே தேவ தேவனே
அஞ்சேல் என்று அபயமளித்திடும்
ஆறுமுகமாய் வந்தவன் நீயே
வெஞ்சினம் கொண்ட கணபதி சோதரா
உந்தன துள்ளம் எந்தன் பக்கம்
கந்தனும் நீயே காவலும் நீயே
நீயே எல்லாம் என்றிருப் பேனே
நீயே வந்தெனக் கருள் தருவாயே
நெஞ்சில் சுமப்போர்க்கு சுகம் தருவாயே
பார் உல கெல்லாம் காத்திடும் வேலா
பார்வை யாலே வினை தனை யறுப்பாய்
கல்லாய் இருந்தும் கடைக்கண் பார்ப்பாய்
எல்லாச் செயல்களும் பார்த்திருப்பாயே

ஆற்றல் மிக்கவன் தூற்றலுக்கு அஞ்சான்.

சொல்லால் செயலால் உனை நினைப் போர்க்கு
கல்லாய் இருந்தும் காத்தருள்வாயே
வரும்பகை யெல்லாம் விலகிடச் செய்வாய்
வானும் மண்ணும் குளிர்ந்திட்டாலே
தேனும் பாலும் உன தருகிருக்கும்
உள்ளத் தூய்மை உவந்திடச் செய்வாய்
கள்ளா மேனியை கவர்ந்திடும் நோயை
வெண்ணீறு கொண்டே விலகிடச் செய்வாய்
எத்திசை பகரினும் உன்னடி பணிந்தால்
கத்திடும் ஓசையும் கருணையாகும்
வித்திடும் நிலமும் விளை நிலமாகும்
சத்தியம் செய்தோம் சர்வமும் நீயே
ஆதி சிவனின் மைந்தனும் நீயே
திக்கற் றோர்க்கு ஒளியும் நீயே
அண்டமும் நீயே அணைப்பதும் நீயே
விண்ணுடன் பூமி ஆள்பவன் நீயே
கண்ணுக்கு கண்ணாய் இருப்பவன் நீயே
கணபதி சோதரா காத்தருள் வாயே
குண முடையோர்க்கு குடையாய் வருவாய்
கணங்களை யெல்லாம் கலங்கச் செய்வாய்
நல்லோர் மனதில் நர்த்தனம் புரிவாய்
சொல்லால் மேன்மை தந்திடும் வேலா
வேலது கொண்ட கையது கொண்டு
சூட்சுமம் தன்னை நீக்கிடு நீயே
வேட்கை கொண்ட சூட்சுமந் தன்னை
வேரோடறுக்கும் வித்தகன் நீயே
பாலோர் போற்றும் பாலனும் நீயே
நாவோர் எழுத்து நவின்றிடு நீயே
கூனும் குருடும் இப்புவி பிறவா
வரமருள் நீயே வராகி மைந்தா
சொல்லும் செயலும் ஒன்றெனக் கொண்டு
வாழ்வோர் நெஞ்சில் நின்றிடு நீயே
நர்த்தனம் புரியும் நாயகன் மைந்தா
கீர்த்தனம் பாட இசையருள் தருவாய்
என்றும் உன்னை மறவாதிருக்க
இறையருள் கொண்டு நிறையருள் தருவாய்

இப்புவிமீது வாழ்ந்திடும் வாழ்க்கை
நீர் மேல் எழுத்தென நினைத்திட வைத்தாய்
கல்லான மனதை கரையவும் வைத்து
உன்னைத் தேடி வரவும் வைத்து
உள்ளத் துணர்வை உணர்வாய் கொட்டி
ஆங்கார நெஞ்சத்தை ஆட்கொள்ளும் முருகா
ஓங்கார இசையெலாம் உன் வடிவென்று
பாங்காய் மானிடர்க்கு படிப்பினையாக்கி
சங்காரம் செய்து சர்வமும் காத்து
மங்கா ஒளியை மானிடர்க் கருளி
கதிரவன் போலே கணப் பொழுதேனும்
கண் துயிலாமல் காத்திடும் முருகா
ஒருதலையாலே ஓங்கார மாகி
இருதலை கொண்டு இறைவனுமாகி
முத்தலையாலே மூவுலகும் காத்து
நான்கு தலையாலே நன்னெறி அருளி
ஐந்து தலையாலே வினைதனை அறுத்து
ஆறுதலையாலே அடியார்க்கருளி
உள்ளத்தாலே உயிரையும் காத்து
பன்னொளி கொண்டு பாவம் நீக்கி
பயந்தார் மனதில் பாசம் வைத்து
கதியென வருவோர்க்கு கதியும் அளித்து
சரணா கதியென சரணம் அடைவோர்க்கு
மரண பயத்தை மாண்புடன் நீக்கி
சந்நிதிப் பதியில் அமர்ந்திடும் வேலா
சத்திய மெல்லாம் சர்வமும் நீயே
நித்திய அன்னம் தருபவன் நீயே
நெத்திப் பொட்டில் மங்கலம் தருவாய்
கால நேர மறியா தவரும்
கணப் பொழுதுன்னைக் கண்டால் போதும்
மனைகள் எல்லாம் மங்கலம் பொங்கும்
வாழ்வும் கூட சிறப்பாய் மலரும்
தாழ்வு கொண்டோர் தரணியில் உயர்வர்
கோபம் கூட அன்பாய் மலரும்
வலம் வருவோர்க்கு வாழ்வு சிறக்கும்
குவலயம் போற்றும் குடியாய் உயர்வர்

நோய் நொடி இன்றி நூறு வருசம்
வாழ்ந்தார் என்று வையகம் போற்றும்
காலன் கூட கண்டால் ஒதுங்கும்
பகையும் கூட பாசம் காட்டும்
உற்றார் சுற்றார் உறவு கிடைக்கும்
நித்தியம் உன்னை நினைத்திடுவோர்க்கு
சத்தியம் வெல்லும் தர்மம் காக்கும்
காக்கும் காக்கும் வேலது காக்கும்
சூழும் பகையைத் துரத்தி யடிக்கும்
நினைத்திடு வோர்க்கு நெஞ்சம் நிறையும்
நிறைந்த நெஞ்சும் உன் நினைவாகும்
கைகள் இரண்டும் பாதந்தொட்டே
சரணம் சரணம் சரணம் சொல்லும்
அடியரைக் காப்பாய் சரணம் சரணம்
சரணம் சரணம் சந்நிதி வேலவா சரணம் சரணம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

## சந்நிதியின் வேலனே சகலதும் ஆகிவிடுவாரே

சந்நிதி வேலனிடம் சகலதும் ஒப்படைத்துச்
சந்தோ ஷமாக இருப்பார் அடியார்கள்
எந்தக் கவலையோ துன்பமோ இல்லையினி
எல்லாம் அவனே என்றிருக் கும்நிலைதான்
சிந்தையில் வேலனின் திருவுரு வேயன்றி
சிறிதும் மனமே சோர மாட்டார்கள்
விந்தை யான நிலையிது சந்நிதியின்
வேலனே சகலதும் ஆகி விடுவாரே.

-வ. யோகானந்தசிவம்-

### ஆன்மிகச் சிந்தனை

இறைவன் உனக்கு என்றும் துணையாக இருக்கிறான் என்ற உணர்வோடு உளமாரப் பிரார்த்தனை செய்துகொண்டும், முழு மனத்தோடு செய்யும் பணிகளைச் செய்துகொண்டும் வாழப் பழக வேண்டும். இறைவன் எனும் சக்தியிடமிருந்து இவற்றைச் செய்யும் திறமையைப் பெறவும் பழக வேண்டும். இப்படியே வாழப் பழகினால் உங்கள் வாழ்க்கை ஆன்மிகமயமாக மாறிவிடும். உங்கள் கனவு, உங்கள் எதிர்பார்ப்பினை விடப்பெரிதும் உயர்ந்த தரத்தில் அமைந்துவிடும். நம் எல்லோரிடமும் குறைகள் இருப்பது உண்மை. அவற்றை நாம் பரிசீலனை செய்தால் குறைகளைவிட நிறைகளே மிகுதியாக இருப்பது தெரியவரும். நாளடைவில் இந்த குறைபாடுகளையும் நீக்கிவிட வேண்டும்.

*இன்சொல்லும் இரக்கமும் இதயத்துக்குப் பலம் தரும்.*

(கட்டுரைத்தொடர் - 21

# சித்தர்களின் ஞானம்

- திரு சிவ மகாலிங்கம் அவர்கள் -

## பதினெண் சித்தர்களில் பத்திரகிரியார்

துளுவ நாட்டை ஆட்சி செய்த இவர் பட்டினத்தாரின் சீடர் ஆவார். இவருடைய வரலாறு பட்டினத்தாரின் வரலாற்றோடு பின்னிப் பிணைந்துள்ளது. "காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே" என்பதை உணர்ந்த பட்டினத்தார் துறவியாகி உடுத்த கோவணத்தோடு நாடெங்கும் சுற்றி வந்தார். கொங்கு நாடு கடந்து துளுவ நாடு அடைந்து அங்குள்ள உஞ்சேனை மாகாளம் என்ற ஊரின் புறத்தேயுள்ள கணபதி ஆலயத்தில் தங்கியிருந்தார். துளுவ நாட்டை ஆட்சி செய்த பத்ரகிரியின் அரண்மனையில் சில கள்வர் புகுந்து பல்வேறு அணிகலன்களைக் கவர்ந்து சென்றனர். இவர்கள் போகும் வழியில் இருந்த கணபதி ஆலயத்தில் சிவயோகியாகிய பட்டினத்தார் நிட்டை கூடித் தியானத்தில் இருந்தார். திருடர்கள் அரண்மனையில் திருடச்சென்றபோது பிள்ளையாரை வணங்கித் தங்களுக்குப் பொருள் கிடைத்தால் பிள்ளையாருக்கும் ஒரு பங்கு தருவதாகப் பிரார்த்தித்துக் கொண்டு சென்றார்கள். அரண்மனையில் களவாடிய பொருள்களுடன் திரும்பி வரும்பொழுது தங்களுடைய நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவதற்காக முத்துமாலை ஒன்றினைப் பிள்ளையாரின் கழுத்தில் எறிந்துவிட்டுப் போயினர். எறிந்த மாலையானது பிள்ளையாருடைய கழுத்தில் விழவில்லை. பிள்ளையாரின் முன்பாக நிஷ்டை கூடி இருந்த பட்டினத்தாரின் கழுத்தில் விழுந்தது. ஆழ்நிலைத் தியானத்தில் இருந்த பட்டினத்தார் தனது கழுத்தில் மாலை விழுந்ததை அறியாமலே இருந்தார்.

திருடர்களைத் தேடி வந்த அரண்மனைக் காவலாளிகள் பட்டினத்தாரின் கழுத்தில் திருடப்பட்ட முத்துமாலை ஒன்று இருப்பதைக் கண்டார்கள். பட்டினத்தாரின் தெய்வீக நிலையை உணராத இவர்கள் மோன நிலையில் நிஷ்டைகூடி இருந்த இவரை அடித்துத் துன்புறுத்தினார்கள். பிற திருடர்களைக் காட்டுமாறு இவருக்குத் தொல்லை கொடுத்தார்கள். அரசனிடம் சென்று மாலையைக் காட்டி கள்வனுக்கு உரிய தண்டனை கொடுக்கும்படி வேண்டினார்கள். களவுக்குக் கழுவேற்றுதலே தண்டனையாக அக்காலத்தில் இருந்தமையால் அரசன் பட்டினத்தாரைக் கழுவிலேற்றும்படி கூறினான். தம்மைக் கழுவில் ஏற்றப்போவதை உணர்ந்த பட்டினத்தார் நிட்டை கலைந்து உணர்வு பெற்றார். நிலமையை உணர்ந்துகொண்ட இவர் மன ஒருமைப்பாட்டுடன் இறைவனிடம் முறையிட்டுப் பின்வரும் பாடலைப் பாடினார்.

என் செயலாவது யாதொன்றுமில்லை, இனித் தெய்வமே
உன் செயலே என்றுணரப் பெற்றேன், இந்த ஊனெடுத்த
பின் செய்த தீவினை யாதொன்றுமில்லை, பிறப்பதற்கு
முன் செய்த தீவினையோ, இங்ஙனே வந்து மூண்டதுவே.

*பேச்சைவிட சிந்தனை ஆழமானது.*

என்ற பாடலைப் பாடி "படு உடலே படு" என்று கூறினார். அக்கணமே கழுமரம் தீப்பற்றி எரிந்தது. இச் செய்தியை அறிந்த அரசன் தான் பெரிதும் பாதகம் செய்து விட்டேன் என்பதை உணர்ந்து ஓடிவந்து தீக்கொழுந்தின் அருகில் நின்ற தவக்கொழுந்தாகிய பட்டினத்து அடிகளின் காலில் வீழ்ந்து வணங்கினான். தன்னை ஆட்கொண்டு அருள்செய்ய வேண்டுமென்று அரசன் அடிகளை வேண்டி நின்றான். அரசனுடைய பக்குவத்தை அறிந்த பட்டினத்தார் அவரைத் திருவிடை மருதூர் செல்லுமாறு பணித்தார். அரசனாகிய பத்திரகிரியார் தமது அரசபதவியைத் துறந்து திருவிடை மருதூரை அடைந்தார்.

பட்டினத்தார், பத்திரகிரி ஆகியோருடைய பக்குவத்தை உணர்ந்த தாயுமானவர்,

"ஓட்டுடன் பற்றின்றி உலகைத் துறந்த செல்வப்
பட்டினத்தார் பத்ரகிரி பண்புணர்வ தெந்தாளே"

என இவர்களைப் பாராட்டுகின்றார்.

பத்திரகிரியார் பட்டினத்தாரைத் தமது குருவாக ஏற்றுக்கொண்டார். பட்டினத்தார் தலயாத்திரை செய்து வந்து திருவிடை மருதூர் ஆலயத்தின் கீழ்க் கோபுர வாயிலில் தங்கினார். குருவின் கட்டளைப்படி பத்திரகிரியாரும் திருவிடை மருதூர் ஆலயத்திற்கு வருகை தந்து சிவயோக நிலையில் மேலைக் கோபுர வாயிலில் இருந்தார். இரண்டடிகள் கொண்ட பத்திரகிரியாரின் பாடல்களின் எண்ணிக்கை இருநூற்று முப்பத்திரண்டு ஆகும். இவருடைய பாடலின் ஈற்றடியின் இறுதிச் சொல் எக்காலம் என்று முடிகிறது. பத்திரகிரியார் புலம்பல் என்பது இவருடைய பாடல் தொகுப்பிற்கு அமைந்த பெயராகும். இவருடைய பாடல்கள் பட்டினத்தாரைப் பின்பற்றிப் பாடப்பெற்றவையாகும். சில இடங்களில் திருமூலரின் உருவகங்களையும் எடுத்தாண்டுள்ளார். சிவவாக்கியரைப்போலச் சாதி, சமயச் சடங்குகளைக் கண்டித்தும் பல பாடல்களைப் பாடியுள்ளார்.

"அண்டருக்காய் நஞ்சருந்தி அம்பலத்தில் ஆடுசிவன்
தொண்டருக்குத் தொண்டன் எனத் தொண்டு செய்வது எக்காலம்?"

எனத் தன்னைச் சிவனடியாராகப் பிரகடனப்படுத்திப் பாடலைப் பாடியுள்ளார்.

இந்திரியங்களும் அந்தக் கரணங்களும் கொண்ட எந்திரம் போன்ற உடலை இயக்கும் சக்தியாக ஆன்மா இருக்கிறது. உயிர்கள் உயர்திணை, அஃறிணை உடம்புகளால் உலகியலைத் துய்க்கின்றன. அவ்வாறு துய்க்கும் காலத்தே இருவினைப் பயனை ஈட்டுகின்றன. அதனால் இறத்தலும், பிறத்தலும் இடையறாது தொடர்கின்றது. "இருவினைக் கீடாய் எடுத்த பொம்மை" என்று பத்திரகிரியார் உடலைக் குறிக்கின்றார். வினைப் பயனால் கிடைத்த இந்த உடம்பினை நிரந்தரமான சொத்து என நினைத்துக் கூத்தாடிக் கூத்தாடிப் போட்டு உடைப்பவர்கள் பலரை நாம் உலகியலில் காண்கிறோம். திரிகரண சுத்தியுடன் இறைவனை வழிபட்டு அவன் அருளைப் பெற முயற்சிக்காமல் உலகியலில் அழுந்தி வாழ்பவர்களைப் "பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே" என அப்பர் பெருமானும் தனது பாடலில் குறிப் பிடுகின்றார். இருவினைப் பயனால் இம்மைதனில் எடுத்த உடம்பின் நிலையாமையை உணர்ந்து இறைவனைப் போற்றி நிற்பது எக்காலம் என்பதை,

"இம்மைதனில் பாதகனாய் இருவினைக் கீடாய் எடுத்த
பொம்மை தனைப் போட்டு உனைப் போற்றி நிற்பது எக்காலம்?"

எனப் பத்திரகிரியாரும் தனது பாடலின் ஊடாக வெளிப்படுத்துகின்றார்.

*எதிர்ப்பு எங்கு இல்லையோ அங்கு வெற்றி இல்லை.*

தியானிப்பவன் தியானிக்கப்படும் பொருளாக மாறிவிடுகிறான். (தியானத் யாத்துரு தேய ரூபா) என்று லலிதா சகஸ்ர நாமத்திலே ஒரு சுலோகம் உண்டு. பிரபக்தி நிலையில் நின்று அன்பினால் அகம் குழைந்து வணங்குவோர்களுக்கு இறையருள் உடனே கிடைத்து விடும்.

"அன்போடுருகி அகம் குழைவார்க்கன்றிப்
பொன்போல் மணியினை எய்த வொண்ணாதே"

என்றே தமிழ் மந்திரமாகிய திருமந்திரமும் குறிப்பிடுகின்றது.

யார் எந்தெந்த கோணத்தில் அணுகுகின்றனரோ எந்தெந்த சூழலில் அனுபவம் பெறுகின்றனரோ அவற்றுக்கு ஏற்பவே பரம்பொருள் காட்சியும் உணர்வும் அவர்கட்குக் கிட்டும். இவ்வரிய தத்துவத்தை எளிய மொழியில் எழுத்தறிவில்லாதாரும் ஏற்கும் வகையில் பத்திரகிரியார் கூறுகின்றார்.

"எவர் எவர்கள் எப்படிக் கண்டு எத்தப்படி நினைத்தார்
அவர் அவர்க்கு அப்படி நின்றான் என்பதெக்காலம்"

சித்தர் எதிர்பார்க்கும் அறிவுத் தெளிவு மக்களிடையே ஏற்பட்டு விட்டால் சமயச் சண்டைகள் மறைந்து மனித குலத்தை முழுமையாக ஒருங்கிணைக்கும்; அன்பு பெருகும். சமய நெறிகளாலும், வழிபாட்டு முறைகளாலும் மக்களிடையே பகைமை வளராது. தன்னலிக்காரர்களின் பிரித்தாளும் நினைப்பு அறிவுத் தெளிவுடைய மக்களிடையில் செல்லுபடியாகாது.

உயிரின் இயல்பைத் திருமூலர் மிக அழகாகக் குறிப்பிடுகின்றார். கதிரவனின் வெம்மையால் கடல்நீர் உப்பாகிறது. அவ் உப்பு மீண்டும் தண்ணீரில் கரையும்போது தண்ணீரில் அடங்குகின்றது. உப்பு எங்கிருந்து வந்ததோ அங்கேயே அடங்குகின்றது. அதுபோல் உயிர் சிவத்திலிருந்து தோன்றிச் சிவத்துள் அடங்கும் என்கிறார்.

அப்பினில் கூர்மை ஆதித்தன் வெம்மையால்
உப்பெனப் பேர்பெற்றுருச் செய்த அவ்வுரு
அப்பினிற் கூடிய தொன்றாகு மாறுபோற்
செப்பினிற் சீவன் சிவத்துள் அடங்குமே.

(திருமந்திரம்- 136)

"எனக்குள்ளே நீயிருக்க உனக்குள்ளே நானிருக்க" என்ற பட்டினத்தாரின் பாடல் வரிகளும் சீவனும் சிவனும் ஒன்றென்பதைக் காட்டுகிறது.

"நவசூத்திர வீட்டை நானென்று அலையாமல்
சிவசூத்திரத்தைத் தெரிந்தறிவது எக்காலம்"

என்ற பத்திரகிரியாரின் மெய்ஞ்ஞானம் புலம்பல் உடலில் இருக்கும் சீவன் சிவனே என்று வலியுறுத்துகின்றது. இதனையே "தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்" என்கிறார் திருமூலர்.

முகத்தில் அமையப்பெற்றுள்ள இரண்டு கண்களைக் கொண்டு இறைவனைக் கண்டறிய முடியாது. நமது உடம்பில் உள்ள ஊனக் கண்களுக்கு இறைவன் அகப்படமாட்டான். ஞானக் கண்கொண்டு அவனைக் கண்டறிய முயல வேண்டும். உள்முகமாகப் பார்வையைச் செலுத்தி உணர்வு நிலையில் காண்பதுவே உண்மையான சிவானந்தமாகும். ஒரு பெண்ணானவள்

*ஒருவரின் பேச்சிலிருந்து உளப்பண்பை அறியலாம்.*

தான் தன்னுடைய கணவனோடு அனுபவித்த இன்பத்தைத் திருமணப் பருவத்தை அணுகி நிற்கும் தனது மகளுக்கு வார்த்தைகளால் விளக்க முடியாது. இதேபோல இறை இன்பத்தையும் அந்தப் பக்குவ நிலையை அடைந்தவர்களால் மட்டுமே சுவானுபவமாக அனுபவிக்க முடியும். சிவானந்த அனுபவம் அக உணர்வில் கண்டு அனுபவிப்பதே தவிரப் பிறருக்கு உணர்த்த முடியாது.

முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்கள்
அகத்தில் கண் கொண்டு காண்பதே ஆனந்தம்
மகட்குத் தாய்தன் மணாளனோடாடிய
சுகத்தைச் சொல்லென்றாற் சொல்லுமாறெங்ஙனே.

உள்ளத்தில் உறைகின்ற இறைவனை உள்ளத்தால் வழிபட்டுப் பெறுகின்ற இறையின்பம் நிலையானது. இறைவனை வார்த்தைகளால் வருணிக்க முடியாததுபோல இறை இன்பத்தையும் இப்படிப்பட்டது என விளக்கியுரைக்க முடியாது. இறையின்பத்தில் லயித்து நிலைத்து நிற்பவர்கள் வாயால் பேசமாட்டார்கள். உலகியல் ஆசைகளைத் துறந்த அவர்கள் மௌனமாகவே இருப்பார்கள்.

"ஆசா நிகளம் துகளாயின பின்
பேசா அனுபூதி பிறந்ததுவே"

என்றே அருணகிரியாரும் கந்தரநுபூதியில் குறிப்பிடுகின்றார். மௌனமே இவர்களது நிலையாகும். இத்தகையோரைக் காண்பது மிகவும் அரிது. மற்றையோர்க்கு இறையின்பம் வந்து போவதாகவே இருக்கும்.

"ஊமை கனாக்கண்டு உரைக்க அறியா இன்பம் அதை
நாம் அறிந்து கொள்வதற்கு நான் வருவது எக்காலம்"

என இறையின்பத்தைக் குறிக்கின்றார் பத்திரகிரியார்.

இறைவன் பிறப்பு, இறப்பு, தோற்றம், மறைவு, வளர்ச்சி, தேய்வு, நிறைவு, குறைவு என்ற வேறுபாடுகளும் நிலைமாற்றமும் இல்லாதவன். வடிவங்களுக்கும் உருவங்களுக்கும் அப்பாற்பட்டவன். என்றும் குறைவு ஏதும் இல்லாத பூரண நிலையிலேயே இருப்பான். ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் சோதித்து அறிய முடியாத இறைவனின் திருவருளை நான் அறிந்து சொல்வது எக்காலம் எனப் பத்திரகிரியார் பாடுகின்றார்.

"இன்னதென்று சொல்ல ஒண்ணா எல்லையற்ற வான் பொருளைச்
சொன்னதென்று நான் அறிந்து சொல்வது இனி எக்காலம்"

பட்டினத்தாரைப் போலவே அவருடைய சீடராகிய பத்திரகிரியாரும் சாத்திரச் சடங்குகளை வெறுக்கின்றார்.

"சாத்திரத்தைச் சுட்டு சதுர்மறையைப் பொய்யாக்கிச்
சூத்திரத்தைக் கண்டு துயர் அறுப்பது எக்காலம்"

எனப் பாடுகின்றார். ஐம்பொறிகளைக் கட்டுப்படுத்தாமல் அலையவிட்டுச் செய்யப்படும் வெற்றுப் பூசைகளை இறைவன் ஒருபோதும் ஏற்கமாட்டான் என்பதே பட்டினத்தாரதும், பத்திரகிரியாரதும் கருத்தாகும். சூத்திரத்தைக் கண்டு என்ற தொடருக்கு சிவஞான சூத்திரங் களைக் கண்டறிந்து எனச் சிலர் பொருள் கூறுவர். சாத்திரத்தைச் சுட்டெரிக்க வேண்டும் என்று கூறுகின்ற பத்திரகிரியார் சிவஞான சூத்திரங்களை ஏற்றுக் கொள்கிறார் என்று

கூறுவது பொருத்தமாக இல்லை. சூத்திரம் என்றால் கயிறு அல்லது நூல் என்று பொருள். மனிதனை உலகியலில் இறுக்கமாகப் பிணைத்திருப்பது அறியாமை என்னும் நூல். இது ஞானத்தால் மட்டுமே அறுபடும் விந்தையான நூல். இறை ஞானத்தால் இந்நூலை அறுத்துவிட்டால் துயர் அற்றுப்போகும். சிந்தை சிவன்பால் ஒன்றிவிடும் என்பதே பத்திரகிரியாரின் சிந்தனையாகும்.

சாதாரண மனிதனின் சித்தம் கரித்துண்டு போன்றது. சித்தர்களின் சித்தமோ வைரம் போன்றது. பூமியின் ஆழத்தில் புதையுண்ட கரி இறுக்கத்தாலும், சூட்டாலும் உறுதியான வைரமாகிறது. அதுபோல இயம நியம விதிகளாலும், யோகப் பயிற்சியாலும், தியானத்தாலும் சாதாரண சித்தம் உறுதிபெற்று அதிர்வலைகள் ஓயப்பெற்று தூய்மை அடைகிறது. சும்மா இருக்கும் சித்த நிலை என்பது இறப்பு நிலை அன்று. கட்டுப்பாடற்ற சித்த அதிர்வுகளைக் கட்டுப்படுத்தி மிக நுண்ணிய அதிர்வுகளைக் கொண்ட சமநிலைக்கு கொண்டு வருதலே இந்நிலையாகும். இச் சமநிலையில் சித்தம் புற உலகில் ஈடுபடாது. எனவே இந்நிலையைத் தூங்கும் நிலை என்றும் இறந்த நிலை என்றும் குறிப்பதுண்டு. இந்நிலையில் பூரணத்தில் கலந்து சித்தம் இறையின்பத்தைச் சுவைக்கிறது. இந்நிலையைத் தூங்கா நிலை என்றும், தூங்காமல் தூங்கிச் சுகம் பெறும் நிலையெனவும் சித்தர்கள் கூறுகின்றனர்.

"ஆங்காரம் உள்ளடக்கி ஐம்புலனைச் சுட்டறுத்துத்
தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுவது எக்காலம்"

எனப் பத்திரகிரியார் இந்நிலையினைத் தனது பாடலின் ஊடாக விளக்குகின்றார்.

பட்டினத்தார்போல பெண் வெறுப்புக் கருத்துக்களை பத்திரகிரியார் அதிகம் பாட வில்லை. பெண்களைக் கண்டால் மனதில் விகார உணர்வு ஏற்படாமல் தாய்போல நினைக்க வேண்டும் என்கிறார்.

"பேய்போல் திரிந்து பிணம் போல் கிடந்து பெண்ணைத்
தாய்போல் நினைத்துத் தவம் முடிப்பது எக்காலம்"

எனப் பத்திரகிரியார் பாடுகின்றார்.

"குலமகட்கு அழகு கொழுநனைப் பேணுதல்
விடை மகட்கு அழகு மேனிமினுக்குதல்"

என்று வெற்றி வேற்கை என்ற நூல் குறிப்பிடுகிறது. மற்றவர்களை மயக்குவதற்காகவும், மருட்டுவதற்காகவும் சிங்கார மடந்தையர்கள் பலர் வேடம் பல போட்டுக்கொண்டு அலை கிறார்கள். இவர்களுடைய வலையில் விழாமல் இருப்பது எப்போது என்பதைக்,

"கால்காட்டிக் கைகாட்டிக் கண்கள் முகம் காட்டி
மால்காட்டும் மங்கையரை மறந்திருப்பது எக்காலம்"

எனப் பத்திரகிரியார் பாடுகின்றார்.

உலகியலில் இருந்தாலும் சித்தர்கள் புளியம்பழமும் ஓடும்போல ஒட்டாமல் இருப்பார்கள். தண்ணீரில் படர்ந்து இருந்தாலும் தாமரை இலையில் தண்ணீர் ஒட்டாது. அதுபோலச் சித்தர்கள் உலகியலில் இருந்தாலும் அவர்களைப் பற்றுக்கள் பாதிப்பதில்லை. சித்தர்களின் மனம் பற்றுக்களின் தாக்கத்தால் அதிர்வதில்லை எனப் பத்திரகிரியார் தமது பாடல்களில் விளக்கியுள்ளார்.

(தொடரும்...

# மலேசியப் பயணத்தின் முன்னோடி:

(தொடர்ச்சி...

– திரு செ. மோகனதாஸ் சுவாமிகள் –

தலயாத்திரை என்பது ஒரு கடினமான செயற்பாடு. நாம் போகப் போகும் ஆலயங்களின் தன்மையைப் புரிந்து அதற்கேற்ற வகையில் எம்மைத் தயார்ப்படுத்த வேண்டும். தலயாத்திரைக்குப் போகின்றோம் எனும் சிந்தனை எம் மனதில் வலுப்பெற வேண்டும். அச்சிந்தனையூடாக எமது தலயாத்திரை ஆரம்பமானால் அதனூடாகக் கூடிய பலனை நாம் பெறலாம். ஆனால் தலயாத்திரை என்று கூறிக்கொண்டு அதற்கு ஒவ்வாத முறையில் எமது செயற்பாடு இருக்குமானால் "குளிக்கப் போய் சேறு பூசுவதைப் போன்றுதான் அமையும்" என்பது முன்னோர் வாக்கு.

இக்கருத்தினை உள்வாங்கிய முறையில்த்தான் என்னால் மேற்கொள்ளபட்ட தல யாத்திரைகள்மூலம் பலவித அனுபவங்களுடன் கூடிய அருளாடல்களை அனுபவிக்க முடிந்தது. ஆம்! 2013ஆம் ஆண்டு என்னால் மேற்கொள்ளப்பட்ட வட இந்திய யாத்திரையின்போது கேதாரநாத்திலுள்ள பெருமானைத் தரிசிப்பதற்கு எமது யாத்திரைக் குழுவோடு சென்றிருந்த சமயம் மேலே கூறிய கருத்துக்கு அமைவாக எமக்கு ஏற்பட்ட அனுபவத்தோடு இத்தொடரினுள் உள் நுழைகின்றேன்.

கேதாரநாத் மலை அடிவாரத்தை மாலை மூன்று மணியளவில் அடைந்தோம். மறுநாள் காலை மலை உச்சிக்குச் சென்று ஆலய தரிசனம் செய்வதென்பது எமது கால அட்டவணை. ஆனாலும் விடுதியில் சும்மா இருப்பதைவிட மலை அடிவாரத்தை அடைந்து அங்கே இடம்பெறும் நிகழ்வுகளைப் பார்க்கலாம் எனும் சிந்தனையோடு மலை அடிவாரத்தை அடைந்தோம். அப்போதும் கேதாரநாத் உச்சிக்குக் கால்நடையாகப் போகின்றவர்கள் ஒருபுறம், குதிரைகளில் செல்பவர்கள் ஒரு புறம் என மக்கள் கூட்டம் அலைமோதியவண்ணம் இருந்தது. மலைமீது கால்நடையாக போகும் தூரம்வரை போய்ப் பார்க்க வேண்டும். வழியில் உள்ள சிறு சிறு ஆலயங்களைத் தரிசிக்க வேண்டும் எனும் முனைப்போடு நாமும் மலைமீது ஏற ஆயத்தமானோம்.



மலைமீது ஏறும்போது மிகவும் அவதானமாக ஏறவேண்டும். ஏனெனில் அந்த இடத்தின் தன்மை அப்படியானது. ஆனாலும் மலைமீது ஏறுபவர்களில் பலர் அடிவாரத்திலுள்ள வர்த்தக நிலையங்களில் விற்பனைக்கு வைத்திருந்த கைத்தடிகளை வாங்கி அதனை கைத்தாங்கலாக ஊன்றிக்

கொண்டு மலை ஏறுவதைப் பார்த்தோம். நானும் ஒரு தடியை வாங்குவோம் எனும் சிந்தனையோடு தடிக்குரிய பெறுமதியைக் கேட்டபொழுது இந்திய ரூபா 20 என வர்த்தகர்கள் கூறினார்கள். ஒரு தடிக்கா இருபது ரூபா என சிந்தனையூடாக அதனை வாங்காது ஏறக் கூடிய தூரம்வரை சென்று வழியில் இருக்கும் சிறு ஆலயத்தை அடைந்து வழிபாடு செய்ய வேண்டும் என்ற முனைப்போடு ஏற ஆரம்பித்தோம். வர்த்தக நிலையங்களைத் தாண்டி மலை அடிவாரத்தினை அடைந்தபொழுது வயது முதிர்ந்த ஒரு அடியார் தனது கையில் வைத்திருந்த தடியை என்னிடம் தந்து மலை மீது ஏறும்படி சொன்னார். நானும் அந்தத் தடியை வாங்கி அதன் உதவியோடு மலையில் ஏற ஆரம்பித்தேன்.

ஒரு வழியாக நானும் என்னோடு வந்தவர்களும் வழியில் உள்ள ஆலயத்தை அடைந்து வழிபாடு செய்துகொண்டிருந்தோம். அப்போது மலை அடிவாரத்திலிருந்து தாரை, தப்பட்டை ஒலிகளோடு ஒரு கூட்டம் வந்து கொண்டிருந்தது. என்ன என்று அந்த ஆலயத்திலிருந்த பூசகரைக் கேட்டபொழுது மேலே உச்சியில் அமைந்துள்ள ஆலய மாலைநேரப் பூசைக்குரிய பொருட்களோடு இறைவனுக்குரிய விக்கிரகத்தையும் கொண்டுபோவது வழமை என்றும் நாம் நிற்கும் ஆலயத்தை அடைந்து அங்கே இடம்பெறும் பூசை வழிபாட்டில் பங்கு பற்றி அதனைத் தொடர்ந்து மலை உச்சிக்குப் போவார்கள் என்று கூறியதன் பிரகாரம் நாமும் அவ்விடத்தில் நின்று அவ்வழிபாட்டில் ஈடுபட்டோம். அதனைத் தொடர்ந்து நேரகாலம் கருதி இனி மேலே ஏறுவது உசிதம் அல்ல எனும் சிந்தனையோடு கீழிறங்க ஆயத்தமானோம். அப்போது அப்பூசகர் நீங்கள் மேலே போய் இறைவனைத் தரிசிக்கும் பாக்கியத்தைத் தவிர்த்து இறைவனே கீழிறங்கி வந்து உங்களுக்குக் காட்சி தந்துள்ளார் என்று கூறியபோது நாமும் அதனை உள் வாங்கியபடி மலை அடிவாரத்தை அடைந்தோம். நாம் ஏறும்பொழுது எந்த இடத்தில் ஏறுவதற்குதவியாக கைத்தடியைத் தந்தாரோ அதேயிடத்தை அடைந்ததும் ஒரு ஆச்சரியம் காத்திருந்தது. அதே இடத்தில் வேறொரு முதியவர் இருகரம் நீட்டி கைத்தடியைத் தந்துவிட்டுப் போகுமாறு கேட்டதற்கிணங்க அக் கைத்தடியை மகிழ்வுடன் கையளித்தேன். மலை ஏறுவதற்கு வசதியாக கைத்தடி இல்லாமல் போவோர்க்கு உதவி செய்யும் முகமாக இவ்விதமாக கைத்தடி வழங்குகின்ற செயற்பாட்டை நடாத்துகின்றனரோ என்ற எண்ணத்துடன் நாம் இருக்கும் சூழலைக் கவனித்தேன். அப்படியான ஒரு நிகழ்வும் இடம்பெறுவதைக் காணவில்லை.

அப்போதுதான் என் சிந்தனையில் பொறி தட்டியது. இவை எல்லாம் கேதாரநாத் மலையுச்சியிலிருந்து அருளாட்சி புரியும் கேதாரநாதருடைய திருவருள் என்று. ஏனெனில் எமக்குக் கைத்தடி தந்தது, அதை மீளவும் பெற்றது வழியில் அவருடைய தரிசனம் கிடைத்தது எல்லாம் தற்செயலாக நடைபெறவில்லை. தலயாத்திரையின்போது அந்தந்த இடங்களுக்குச் சென்று வழிபட வேண்டும் என்ற மனவுறுதியின் அடிப்படையில்த்தான் இவ்வகையான சம்பவங்களும் இடம்பெறுகின்றன. “காகம் இருக்கப் பனம் பழம் விழுந்தது” என்று கூறினாலும் உண்மை நிலை வேறு.

தலயாத்திரை செய்யவேண்டும் என்று நாம் விரும்பினாலும் அதற்குரிய காலம், நேரம் வரவேண்டும். போக வேண்டும் எனும் சிந்தனை மனதில் திடமாக இருந்தால் ஏதோ ஒரு வகையில் எமது யாத்திரை வெற்றிகரமாக அமையும்.

இக்கருத்தினை அடிப்படையாக வைத்துத்தான் எமது மலேசியப் பயணமும்

அமைந்திருந்தது. மலேசியா கோலாலம்பூரில் உள்ள பத்து மலை முருகனைத் தரிசிக்க வேண்டும் என்ற எண்ணம் கடந்த வருட ஆரம்பத்திலேயே மனதில் உதித்த ஒன்று. அவ்வெண்ணம் மனதில் தோன்றுவதற்குக் காரணமாய் அமைந்தவர் யாழ் வடமராட்சி ஆதார வைத்தியசாலையில் பல் வைத்தியராகக் கடமையாற்றும் வைத்தியர் அ. செந்தில் குமரன் ஆவார். அவர்கள் தான் அவ் ஆலயத்திற்கு சென்று வழிபாடு இயற்றியதைப்பற்றிக் கூறியதுடன் நீங்களும் போகவேண்டும் எனும் கோரிக்கையையும் முன்வைத்தார்.



ஆலயத்தின் சிறப்பையும் அது அமைந்த இடத்தின் அழகையும் பத்திரிகை வாயிலாகவும் மற்றும் அன்பர்கள் கூறிய வகையிலும் அறிந்திருந்தாலும் போவதற்குரிய ஒழுங்குகள் கைகூடவில்லை. பத்துமலை முருகனைத் தரிசிப்பதுடன் அங்கேயுள்ள பிற ஆலயங்களையும் தரிசிக்க வேண்டும் என்னும் எண்ணத்துடன் இருந்தாலும் நடைமுறைச் சிக்கல் காரணமாக உடனடியாக என்னால் இப்பயணத்தை மேற்கொள்ள முடியாமலிருந்தது. ஆனாலும்...

(தொடரும்...

## ஆன்மிகச் சிந்தனை

கடவுளை நீ நம்பாவிட்டால்கூடப் பரவாயில்லை, தெய்வத் தன்மையுள்ள மனிதர்களை யாவது நம்பு. அவர்கள் உன்னைக் கடவுளின் திருச்சந்நிதிக்கு அழைத்துச் சென்று விடுவார்கள். நீயும் தெய்வத்தன்மை பெற்றுவிடுவாய்.

*அனுபவத்தால் உணரவேண்டிய ஒன்றை ஆயிரம் தத்துவ ஞானிகளாலும் உணரவைக்க முடியாது.*

# சமயமும் அறிவியலும்

–செல்வி சோபிதா முகுந்தன் அவர்கள்–

சமயம் வேறு அறிவியல் வேறு என்பது பொதுவாக அனைவராலும் ஏற்றுக்கொள்ளும் கருத்தாகும். அறிவியல் சமயத்தைச் சார்ந்திருக்கவில்லை என்பது உண்மையாகும். இதுபோலவே சமயமும் அறிவியலை சார்ந்திருக்கவில்லை என்பதும் உண்மையாகும். அறிவியலுக்கும் சமயத்துக்கும் உள்ள தொடர்புகளைப்பற்றி அறிஞர்கள் பல்வேறு கருத்துக்களை தெரிவித்து வந்துள்ளனர். அறிவியலும் சமயமும் ஒன்றுக்கு ஒன்று முரணானவை என்பது 19ஆம் நூற்றாண்டில் வலிமைபெற்ற ஒரு கருத்தாக இருந்தது. அதாவது சமயமும் அறிவியலும் ஒன்றைச் சார்ந்து இருக்கவில்லை. மேலும் கூறப்போனால் சமயம் கூறுவதை எல்லாம் அறிவியல் உறுதிப்படுத்த வேண்டுமென்று கட்டாயம் இல்லை. இவையிரண்டும் ஒன்றோடொன்று இணையாக சமாந்திரமாகச் செல்லும் கோடுகள் போன்றவை. இக்கருத்திற்கு எதிர்மாறான கருத்தும் உண்டு. அதாவது இவையிரண்டிற்கும் பொதுப் பண்புகள் அறிவியலில் உண்டு. அறிவியலில் கூறும் கருத்துக்கள் சில சமயத்தில் உள்ளன. இரண்டினதும் அடிப்படை நோக்கம் ஒன்றுதான். அதாவது உண்மையைத் தேடிக் கண்டறிவது.

உண்மை சார்புடையது. இடம் காலத்தை சார்ந்திருப்பது. உதாரணமாக இலங்கையில் 11.30 என வைத்துக் கொண்டால், பிரான்சில் உள்ள ஒருவருடன் தொலைபேசியில் உரையாடும்போது நேரம் என்ன என்று கேட்டால் மறுமுனையில் பிரான்சில் உள்ளவர் காலை 8 மணி என்று கூறுவார். இந்நேரங்களில் எது உண்மை என்று கேட்டால் இரண்டுமே உண்மை என்பதுதான் சரியான பதில். அதேபோல காலம் இடம் என்பவற்றைப் பொறுத்துத்தான் உண்மை அமைகிறது. சமயங்களும் அவற்றில் இடம்பெறும் கதைகளுக்கும் இது பொருந்தும். உயர்ந்தவன் சிவனே என்று உணர்த்தப்படுகிறது உண்மை எனக் கொள்வோம். வைணவத்தில் வைணவப் புராணக்கதையில் இது பொய்யாகிறது. 17-18ஆம் நூற்றாண்டின் மாபெரும் அறிவியல் அறிஞர் சேர் ஐசாக் நியூட்டன் ஒளியைப்பற்றி ஆராய்ந்து இவர் ஓர் ஆய்வுநிலை (Optics) எழுதினார். அதில் ஒளி துகள்களாக உள்ளது. அது நேர்கோட்டில் பயணம் செய்கிறது என்று நிறுவினார். ஒளிக்கு நொபேட் கூக்ஸ் கறிஸ்ரியன் குருதென்ஸ் போன்றோர் ஒளிக்கு அலை வடிவக் கொள்கையை ஏற்கனவே வகுத்துத் தந்திருந்தார்கள். அதனால் நியூட்டனின் கருத்து மெல்ல மெல்ல மறைந்து அலைக் கொள்கையே உண்மை என அறிவியல் அறிவித்தது. இவை இரண்டில் எது உண்மை. இருப்பதாம் நூற்றாண்டு தோன்றியபோது மக்ஸ் பிளாஸ், அல்பேட், அயன்ஸ்ரீன் போன்றோரின் ஆய்வுகளால் ஒளி சில சமயம் துகள்களாகவும் சிலபோது அலையாகவும் இருக்குமென்று முடிவு செய்யப்பட்டது. ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டிலே யேம்ஸ் இனாக் மக்ஸ்லென் என்னும் அறிவியல் அறிஞர்கள் ஒளி வெறும் மின்காந்தக் கதிர்களே என நிறுவினார். அலையா? மின்காந்தக் கதிரா? இவற்றுள் எது உண்மை என்பது புரிந்துகொள்ள முடியாது. உண்மை என்பது ஒரு மாய மானாகத் துள்ளி ஓடிக்கொண்டே இருக்க, அதனை அடையத் தேடுகிறது. அறிவியலோ இயற்கையின் இரகசியங்களைத் தேடி ஓடுகிறது. எனவே சமயத்துக்கும் அறிவியலுக்கும் உள்ள ஒற்றுமை தேடல்தான்.

ஆற்றலுக்கும் பொருளுக்கும் உள்ள பிணைப்பை புகழ்பெற்ற தன் சமன்பாட்டால் நிறுவிய மாமேதை ஐன்ஸ்ரீன் சமயம் இல்லாத அறிவியல் குருடு என்கிறார். அப்படியாயின் அறிவியலும் சமயமும் ஒன்றுக்கொன்று உதவினால் இளஞ்சூரியர், முது சூரியர் என்ற இரட்டைப் புலவர்கள்போல இரண்டும் நலமாக உலாவலாம். அதனால் அறிவியலுக்கும் சைவசமயத்துக்கும் தொடர்பு உண்டு. ஆகவே இவை இரண்டும் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்துள்ளது.

*நிம்மதியற்ற மனது அடுத்தடுத்த தவறுகளுக்குக் காரணமாகிவிடும்.*

தமிழகத் திருக்கோயில் வரிசை:

# திருக்கோவலூர்

–வல்வையூர் அப்பாண்ணா–

"திருக்கோவலூர்" திருக்கோவிலை சாதாரண பேச்சு வழக்கில் "திருக்கோயிலூர்" என்றே அழைக்கிறார்கள். இவ்வூர் மேலூர், கீழூர் என இரு பிரிவுகளாக உள்ளது. மேலூரில் பிரசித்திபெற்ற ஒரு வைஸ்ணவ ஆலயமும், கீழூரில் "திருக்கோவலூர்" திருக்கோவிலும் உள்ளது.

திருச்சியிலிருந்து திருக்கோவலூர் போவதாக இருந்தால் 110 கி.மீ பயணித்து வேப்பூர்வரை சென்று இடதுபுறம் திரும்பி 15 கி.மீ சென்று ஆசனூர் வரை செல்ல வேண்டும். மேலும் இடதுபுறம் திரும்பி 40 கி.மீ பயணித்தால் கோவிலை அடையலாம்.

திருக்கோவிலூரிலிருந்து 35 கி.மீ தொலைவில் உள்ள திருவண்ணாமலையிலிருந்து பேருந்தில் சென்றால் தென் பண்ணையாற்றைக் கடந்து ஊருக்குள் சென்று கடலூர் - பண்டிருட்டிப் பாதையில் கீழூர்ப் பகுதியில் கோவில் உள்ளது. சென்னை, விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை, சிதம்பரம், விருத்தாசலம் என எல்லா முக்கிய இடங்களிலிருந்தும் பேருந்துகள் திருக்கோவலூர் நோக்கிப் புறப்படுகின்றன.

அறுபத்துமூவருள் ஒருவராகிய மெய்ப்பொருள் நாயனர் ஆண்ட பதி இது:

"சேதி நன்னாட்டு நீடு திருக்கோவலூரின் மன்னி
மாதொருபாகர் அன்பின் வழிவரு மலாடர் கோமான்
வேத நன்னெறியின் வாய்மை விளங்கிட மேன்மை பூண்டு
காதலால் ஈசர்க்கு அன்பர் கருத்தறிந்து ஏவல் செய்வார்"

-பெ.புராணம்: 467-

இராசராசனும் அவனது தாயார் வானமாதேவியும் பிறந்த இடம் இது. இராசராசனும் தமக்கையாரான குந்தவையும் கோயிலின் நித்திய தேவைக்காக பொன்னும் பொருளும் அள்ளிக் கொடுத்த செய்தி கருவறைச் சுவரின் கல்வெட்டுக்களில் இருக்கிறது. ஆனால் சுவர்கள் மிகப் பழமை வாய்ந்தவையாக இருப்பதால் வாசிக்க முடியாமலுள்ளது.

திருக்கோவலூர் அட்ட வீரட்ட ஸ்தலங்களுள் ஒன்று. அந்தகாசூரனை சம்ஹாரம் செய்த "அந்தகாசூர சம்ஹார மூர்த்தி" விசேட மூர்த்தமாக இங்குள்ளார். இங்குள்ள பிரசித்திபெற்ற "திரிவிக்கிரமப் பெருமாள்" வீற்றிருப்பதனால் இத்தலம் வைணவப் பெருமையும் பெற்றது.

| | | |
|---|---|---|
| இறைவன் | : | வீரட்டேஸ்வரர் |
| இறைவி | : | சிவானந்தவல்லி, பெரியநாயகி |
| தலமரம் | : | சரக்கொன்றை |
| தீர்த்தம் | : | தென் பண்ணை ஆறு |

மேற்கு நோக்கிய திருக்கோவில். மிகப் பழமை வாய்ந்த மூன்று நிலைக் கோபுரத்தின் முன்புறத்தில் - பரந்த இடத்தில் - 16கால் மண்டபமொன்று பழுதடைந்த நிலையில் உள்ளது. உள்ளே நுழைந்ததும் கவசமிடப்பட்ட கொடிமரத்தின் முன்பாக நந்தி உள்ளது. முன் தூணில் மெய்ப்பொருள் நாயனார் சிற்பம் உள்ளது. தென்மேற்கு மூலையில் கிழக்கு நோக்கியபடி "பெரியானைக் கணபதி"யின் சந்நிதி உள்ளது. சுந்தரரும் - சேரமானும் கைலை நோக்கிப் புறப்பட்டவேளை அவர்களுக்கு முன்னதாக ஒளவையைத் தூக்கிவிட்ட கணபதி இவரே என்கிறார்கள். சந்நிதிக்கு வெளியே சுவரில் யானைமீது சுந்தரரும், குதிரையின்மீது சேரமானும் கைலை நோக்கிப் பயணித்தவேளை கணபதி ஒளவையைத் தூக்கியபடி முந்திச் செல்லும் காட்சி சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது.

"கரி மீதும் பரிமீதும் சுந்தரருஞ் சேரருமே கைலை செல்லத்
தரியாது உடன் செல்ல ஒளவையுமே பூசைபுரி தரத்தை நோக்கிக்
கரவாது துதிக்கையால் எடுத்து அவர்கள் செலுமுன்னம் கைலைவிட்ட
பெரியானைக் கணபதி தன்கழல் வணங்கி விருப்பமெல்லாம் பெற்று வாழ்வாம்"

பெரியானைக் கணபதிக்கும் கோபுர வாசலுக்கும் இடையே உற்சவ மூர்த்தங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன. அருகே சோமஸ்கந்தர் சந்நிதியும் மகாவிஷ்ணுவும் தரிசனம் தருகிறார்கள். கோபுர வாசலின் வலது புறமாக வள்ளி- தெய்வயானை சகிதம் ஆறுமுகப் பெருமான் மூர்த்தமும் அருகே மூலையில் கஜலெட்சுமியின் சந்நிதியும் உள்ளன.

மேற்குப் பார்த்த திருக்கோவிலின் வலது புறம் (அதாவது வடக்குச் சுற்றுக்கு) வருகிறோம். சிவகாமி உடனான நடராஜர் சபை உள்ளது. கூப்பிய கரங்களுடன் மணிவாசகப் பெருமானும் காணப்படுகிறார். அருகில் தலத்தின் விசேட மூர்த்தமான "அந்தகார சம்ஹார மூர்த்தி" கையில் சூலாயுதம் தாங்கி கோபாவேஷத்துடன் உள்ள சந்நிதானத்தைத் தரிசிக்கிறோம். வடக்குச் சுவரின் மிகுதிச் சுவரில் "கோளறு பதிகம்" முழுமையாக எழுதப்பட்டுள்ளது.

உட்பிரகாரத்தின் பின் வீதியில் (அதாவது வடகிழக்கு மூலையில் பைரவரும் தொடர்ந்து சூரியலிங்கம், ஏகாம்பரேஸ்வரர், ஜம்புகேஸ்வரர், அருணாசலேஸ்வரர், காளத்தீஸ்வரர், விஸ்வநாதர், விசாலாட்சி சந்நிதிகள் உள்ளன. பிரகாரத்தின் தென்சுற்றில் அர்த்தநாரீஸ்வரர், அகத்தியர், சூரியன், சம்பந்தர் உருவங்களும் உள்ளன. ஏறக்குறைய தென் சுற்றின் நடுப்பகுதியில் ஜடாமுனி, ஐயனார், வீரபத்திரர், பிராமி, மகேஸ்வரி, வைஸ்ணவி, வராகி முதலான உருவங்கள் "குடைவரை உருவங்களாக" உள்ளன. ஸ்ரீ மாத்ரு கணபதி, வல்லப கணபதி, பால கணபதி, முருகன் சந்நிதிகளைத் தொடர்ந்து அறுபத்துமூவர் மூலத் திருமேனிகள் உள்ளன.

துவார பாலகரை வணங்கி உட்சென்றால் மூலவர் தரிசனம். பெரிய உருவத்தில் சுயம்புவான லிங்கத் திருமேனி. திருப்பணி செய்த காலத்தில் (25 அடிக்கு மேலும்) தோண்டிப் பார்த்தபோது சுயம்பு மூர்த்தம் இன்னும் இன்னும் கீழே போய்க் கொண்டிருந்ததால், அந்தளவில் நிறுத்திவிட்டு, ஆவுடையாரைச் சேர்த்து மூலவர் எழுப்பப்பட்டதாகக் கூறினார்கள். இந்தக் கூற்றினை நிட்சயப்படுத்த எவ்வளவோ முயன்றும் எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை. நாகாபரணம் சாத்தப்பட்டு மூலவர் "வீரட்டேஸ்வரர்" நிறைந்த அலங்காரத்துடன் அற்புதமாகக் காட்சி தருகிறார். மனம் ஒன்றிச் சிரம் தாழ்த்தி வீரட்டேஸ்வரரைத் தரிசனம் செய்கிறோம்.

**வலிமையின் ரகசியம் நம்பிக்கை.**

கோஷ்டத்தில் உள்ள துர்க்கை அம்மன் மிக விசேடமானது. எட்டு திருக்கரங்களுடன் நின்ற திருக்கோலத்தில் அம்பாள் அருள் தருகிறாள். துர்க்கை அம்பாளின் விழிகள் மிகவும் அற்புதமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. கண்களின் வெண் பகுதியில் கருப்பு விழிகள் பளிச்சென வித்தியாசமாகத் தெரிகிறது. கண்களின் கவர்ச்சியும், உதடுகளின் புன்சிரிப்பும் “என்னிடம் வா! உன்னைக் காத்தருள்வேன்” என்று நம்மை அழைக்கும் பாவனையில் உள்ளது. திருக்கோவலூர் திருக்கோயிலின் தனிச் சிறப்பே துர்க்கை அம்பாளின் விழியழகுதான். துர்க்கை அம்மன் தவிர பிரம்மா, தட்சணாமூர்த்தி, லிங்கோற்பவர், நிருத்த கணபதி கோஷ்ட மூர்த்தங்களாக உள்ளனர்.

இப்போது வெளியே தனியாக உள்ள அம்பாள் சந்நிதானத்தினுள் நுழைகிறோம். மூன்று நிலைக் கோபுரம் தாண்டி வர நேராக அம்பாள் தரிசனம் கிடைக்கிறது. நின்ற திருக்கோலம். அபயவரதத்துடன் கூடிய நான்கு திருக்கரங்கள். வெள்ளிக் கவசம் அணிவிக்கப்பட்டு நிறைந்த அலங்காரத்துடன் அம்பாள் அநுக்கிரகம் புரிகிறாள். முன்னால் நந்தி - பலிபீடம் உள்ள மண்டபச் சுவரில் “அபிராமி அந்தாதி” பாடல்கள் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. அம்பாள் கருவறையைச் சுற்றி கோஷ்ட மூர்த்தங்களோ, வேறு சந்நிதானங்களோ எதுவுமில்லை. ஆனாலும், சண்டிகேஸ்வரி மட்டும் தனிச் சந்நிதியில் அமர்ந்துள்ளாள்.

கோவிலின் பக்கத்தில் தென் பண்ணை ஆற்றின் நடுவில் “கபிலர் மேடு” அல்லது “கபிலர் குகை” எனும் பெயரில் ஒரு குன்று உள்ளது. பார்வைக்கு ஒரு சிறு சந்நிதி போன்ற அமைப்பினை ஒத்ததாக உள்ள இவ்விடத்தின் உள்ளே “சிவலிங்கம்” ஒன்று இருப்பதாகக் கூறுகிறார்கள். உண்மையில் யான் அந்த இடத்தினை நேரில் சென்று பார்க்க முடியவில்லை. கபிலர் வாழ்ந்ததும் - குகையினுள் தவம் இயற்றி மறைந்ததும் கோயில் வரலாற்று நூலில் உள்ளது.

திருக்கோவலூர் திருக்கோயிலின் துர்க்கை அம்பாளின் விழியழகும், ஔவையாரை கைலாயம் அழைத்துச் சென்ற “பெரியானைக் கணபதியின்” தரிசனமும் கண்ட நிறைந்த மனதுடன் அங்கிருந்து புறப்படுகிறோம்.

“வழித்தலைப் படவுமாட்டேன் வைகலுந் தூய்மை செய்து
பழித்திலேன் பாசமற்றுப் பரம நான் பரவமாட்டேன்
இழித்திலேன் பிறவிதன்னை என் நினைந்திருக்க மாட்டேன்
கொழித்து வந்தலைக்கும் தெண்ணீர்க் கோவல் வீரட்டனீரே”

-அப்பர்-

---

## புராதன கேணிகளை புனருத்தாரணம் செய்வார்களா?

எமது பிரதேசத்தில், புராதன கேணிகள் பல, சைவ சமயத்தின் சாராம்சங்களை எடுத்தியம்புவனவாக அமைந்திருப்பதைக் காண்கின்றோம். கேணிகளோடு, ஆவுரஞ்சிக்கல், சுமைதாங்கி என்பனவும் என்பனவற்றை அமைத்தனர் எமது மூதாதையர்கள். வாய்விடாச் சாதிகளின் வாழ்வு கருதியே இவை உருவாக்கப்பட்டவையாகும். இவை அனைத்தும் தரும காரியங்களாகும். அல்லாமலும் மரபுரிமைச் சொத்துக்களாகும். இந்நிலையில் இவற்றை நிர்மூலம் செய்வது சமயதாற்பரியமாகாது. தயவு செய்து புனருத்தாரணம் செய்யுங்கள். புண்ணியம் கிடைக்கும் செய்வார்களா?

-கே.எஸ். சிவஞானராஜா-

பொறுமையாய் இருத்தல் நல்ல அணிகலன்.

# நீடு வாழ்க!



எமது சமுதாய நோக்கினை நாம் உற்று நோக்கினால் தத்தமது வாழ்வியலில் தற் பெருமையுடன் கூடிய சுயலாப நோக்குடன் வாழ்ந்து கொண்டிருக்கும் கால கட்டத்தில் யாழ்ப் பாணத்தில் கோண்டாவிலைச் சேர்ந்த திரு இராசையா குவேந்திரநாதன் தம்பதியர்களது அரும்பெரும் செயலைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

ஆம்! அதுதான் தனது சொந்த முதலீட்டில் பதினைந்து ஏதிலிகளுக்குரிய பெறுமதி வாய்ந்த பதினைந்து வீடுகளை அமைத்து கையளித்த நிகழ்வானது மிகவும் போற்றப்பட வேண்டியது.

அவர்கள் ஆற்றும் இவ்வகையான சமுதாயப் பணிகளின்மூலம் மென்மேலும் வாழ்வில் ஒளிவீச சந்நிதி வேலவனை வேண்டி நீடு வாழ வாழ்த்துகின்றோம்.

-சந்நிதியான் ஆச்சிரமத்தினரும்
ஞானச்சுடர் சமூகத்தினரும்-

# ஆடிமாத வாராந்த நிகழ்வுகள்

01.07.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

விடயம் :- "திருப்புகழ் இசை"

வழங்குபவர் :- திரு மா. ந. பரமேஸ்வரன் அவர்கள்

---

08.07.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

விடயம் :- "வள்ளி திருமணம்"

வழங்குபவர்கள்:- முத்தமிழ் வில்லிசைக் குழுவினர்

---

15.07.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

விடயம் :- "இன்னிசை"

வழங்குபவர் :- திருமதி யாழினி பிரியாங்கன் அவர்கள்

[இசைக் கலைமணி- நெல்லியடி ம.ம.வி]

---

22.07.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "கந்தபுராணம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை]

---

29.07.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்

## ஞானச்சுடர் ஆடிமாத வெளியீடு

**223ஆவது மலர்**

வெளியீட்டுரை :- செல்வி தயாளினி குமாரசாமி அவர்கள்

[பல்கலைக்கழகம் - பேராதனை]

மதிப்பீட்டுரை :- சைவப்புலவர் திருமதி சசிலேகா ஜெயராஜன் அவர்கள்

[ஆசிரியர்]

பதிவு இல. *QD/160/NEWS/2016*

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

